# இந்த PAGE ஐ LIKE செய்து [ Tnpsc Tricks - Page ] தினசரி தமிழ் நடப்பு நிகழ்வுகளை பெற்றுக்கொள்ளவும்.

# https://www.facebook.com/tnpsctricksblog/

**1] உலக பில்லியர்ட்ஸ் தொடரில் இந்திய வீரர் பங்கஜ் அத்வானி சாம்பியன் பட்டம் வென்றார்.**

- பெங்களூருவில் நடைபெற்று வந்த இத்தொடரின் இறுதிப் போட்டியில் சிங்கப்பூரின் பீட்டர் கில்கிறிஸ்ட்டுடன் மோதிய அத்வானி 6-3 என்ற கேம் கணக்கில் போராடி வென்று உலக கோப்பையை முத்தமிட்டார். '150-அப்' வகை பில்லியர்ட்ஸ் போட்டிகளில் 11வது முறையாக உலக சாம்பியன் பட்டத்தை வென்றுள்ள அவர், இதுவரை மொத்தம் 16 உலக சாம்ம்பியன் பட்டங்களை கைப்பற்றி சாதனை படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**2] ஓபிசி பட்டியலில் புதிதாக 15 ஜாதிகள்: மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

- இதர பிற்படுத்தப்பட்ட வகுப் பினர் பட்டியலில் 28 திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் (என்சிபிசி) பரிந்துரை செய்திருந் தது. அசாம், பிஹார், இமாச்சல், ஜார்கண்ட், மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், காஷ்மீர், உத்தராகண்ட் ஆகிய 8 மாநிலங்களில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் திருத்தங்கள் செய்ய பரிந்துரை செய்திருந்தது.

- இந்நிலையில் என்சிபிசி.யின் 28 பரிந்துரைகளில் 15 புதிய சாதிகளை மட்டும் ஓபிசி பிரிவில் மத்திய அரசு சேர்த்து ஆணை பிறப்பித்துள்ளது. அதில், பிஹாரின் கதேரி/இடா பரோஷ், ஜார்கண்ட்டின் ஜோரா, காஷ்மீரின் லபனா ஆகிய 3 சாதிகள் ஓபிசி பட்டியலில் புதிதாக சேர்க்கப்பட்டவை. மற்ற 9 சாதிகள் ஏற்கெனவே ஓபிசி பட்டியலில் இடம்பெற்றுள்ள சாதிகளின் உட்பிரிவுகள். மீதியுள்ள சாதிகள் திருத்தப்பட்டவை.

- மத்திய அரசின் ஓபிசி பட்டியலில் புதிதாக சேர்க்கப்பட்ட 15 சாதிகளை சேர்ந்த மக்கள், தற்போதுள்ள கொள்கைகளின் அடிப்படையில் அரசு வேலைவாய்ப்பு மற்றும் கல்வி நிறுவனங்களில் அவர்களுக் கான ஒதுக்கீட்டை பெற்று பல னடைவார்கள். அத்துடன் மத்திய அரசு நலத் திட்டங்களின் பலன் களையும் பெற முடியும்.

- முன்னதாக கடந்த மாதம் நடந்த மத்திய அமைச்சரவை கூட்டத்தில், என்சிபிசி.யின் பரிந்துரைகளை ஏற்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**3] திரையரங்குகளில் சினிமா திரையிடுவதற்கு முன் தேசிய கீதம் கட்டாயம் ஒலிபரப்ப வேண்டும் என சுப்ரீம் கோர்ட்டு அதிரடி உத்தரவு பிறப்பித்து உள்ளது.**

- திரையரங்குகளில் தேசிய கீதம் இசைக்க உத்தரவிட வேண்டும் என ஷியாம் நாராயண் சவுக்சி என்பவர் சுப்ரீம் கோர்ட்டில் பொதுநல வழக்கு தாக்கல் செய்தார்.

- அரசு விழாக்கள் மற்றும் அரசியலமைப்பு பிரமுகர்கள் பங்கேற்கும் நிகழ்வுகளில் தேசிய கீதம் பாடுதல் அல்லது ஒலிபரப்புவதற்கான சரியான நெறிமுறைகளை வகுக்குமாறும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டு இருந்தார்.

**குடிமகனின் கடமை**

- இந்த மனு நீதிபதிகள் தீபக் மிஸ்ரா மற்றும் அமிதவா ராய் ஆகியோரை கொண்ட அமர்வு முன் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது நாட்டின் தேசியக்கொடி மற்றும் தேசிய கீதத்துக்கு மரியாதை அளிக்க வேண்டியது ஒவ்வொரு குடிமகனின் கடமை என நீதிபதிகள் அறிவுறுத்தினர்.

**4] பாரம்பரிய கலைகள் பட்டியலில் சேர்கிறது யோகா**

- இந்தியாவில் உருவான யோகா கலையை பாரம்பரிய கலையில் சேர்க்க யுனெஸ்கோ பரிந்துரை செய்துள்ளது.

**யோகா தினம்:**

- இந்தியாவில் உருவான யோகா கலை, 2014ம் ஆண்டு மத்திய அரசின் முயற்சியால் ஜூன் 21ம் தேதி சர்வதேச யோகா தினமாக அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து, 2014 முதல் ஜூன் 21ம் தேதியன்று யோகா தினத்தை முன்னிட்டு பல சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. நாடு முழுவதும் நடக்கும், இந்த நிகழ்ச்சியில் பல்லாயிரகணக்கான இளைஞர்கள், தன்னார்வலர்கள் கலந்து கொண்டு யோகா செய்தனர். மனித நேயத்திற்கும் மனித இனத்திற்கும் யோகா சிறந்தது என மத்திய அரசு தொடர்ந்து கூறி வருகிறது.

- **24 நாடுகள் ஆதரவு :-** இந்நிலையில், எத்தியோப்பியாவின், அடிஸ் அபாபா நகரில் நடக்கும் யுனெஸ்கோவின் 11வது சிறப்பு கூட்டத்தில், யோகாவை பாரம்பரியமிக்க கலைகள் பட்டியலில் சேர்க்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்தியா செய்த இந்த பரிந்துரைக்கு 24 நாடுகள் **ஆதரவு தெரிவித்துள்ளன.** யுனெஸ்கோவின் பாரம்பரிய கலை பட்டியலில் யோகா 13வது கலையாக சேர்க்கப்படுகிறது. இதற்கு முன்னதாக, சகாவு நடனம்(2010), லடாக்கில் புத்தமதத்தினரின் பிரார்த்தனை(2012), சங்கீர்த்தனா, டிரம்மிங் மற்றும் மணிப்பூர் நடனம்(2013) ராம்லீலா நிகழ்ச்சி(2008) ஆகியவை இந்தியா சார்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

- இதேபோல், அசர்பெய்ஜான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், துருக்கி உள்ளிட்ட நாடுகளில் பாரம்பரியமாக தயாரிக்கப்படும் ரொட்டி வகை, ஜார்ஜியாவின் பல்வேறு கலாச்சார மற்றும் சமூக செயல்பாடுகளை வெளிப்படுத்தும் வகையிலான எழுத்துருக்கள், எகிப்தின் பாரம்பரிய தற்காப்புக்கலையான கம்பு சண்டை உள்ளிட்டவையும் யுனெஸ்கோவின் பாரம்பரிய கலைகள் பட்டியலில் இடம்பிடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

- தென்கொரிய பெண்கள் ஆக்ஸிஜன் முகமூடி இல்லாமல் நீருக்குள் மூழ்கி சிப்பி மீன்கள் சேகரிக்கும் பாரம்பரிய தொழில் யுனெஸ்கோவின் புலப்படாத பாரம்பரிய கலைகள் பட்டியலில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது.

### 5] உலக செஸ் சாம்பியன்ஷிப்: தொடர்ந்து 3-ஆவது முறையாக மேக்னஸ் கார்ல்சன் சாம்பியன்

- உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் தொடர்ந்து 3-ஆவது முறையாக நார்வேயின் மேக்னஸ் கார்ல்சன் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

- அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நடப்பு சாம்பியனான கார்ல்சனும், ரஷியாவின் செர்ஜி கர்ஜாகினும் மோதினர்.

- வெற்றியைத் தீர்மானிக்க டைபிரேக்கர் முறை கடைபிடிக்கப்பட்டது. ரேபிட் முறையில் நடைபெற்ற இந்த சுற்றில் இருவருக்கும் தலா 25 நிமிடங்கள் வழங்கப்பட்டன. அதில் முதல் இரு சுற்றுகள் டிராவில் முடிந்த நிலையில் அடுத்த இரு சுற்றுகளில் கார்ல்சன் வெற்றி கண்டார்.

## 6] Indian Council for Cultural Relations (ICCR) Indologist Award 2016

- ICCR அமைப்பு வழங்கும் 2016ம் ஆண்டுக்கான இந்திய ஆய்வாளர் விருது சீனாவை சேர்ந்த பேராசிரியர் Yu Long Yu க்கு வழங்கப்பட்டுள்ளது.

- **About Prof. Yu Long Yu :-** He is Professor and Director at the Centre for Indian Studies, Shenzhen University. He has studied Indology for half a century and is the pioneer for Indology in South China. He has set up the Centre for Indian Studies and Tan Yunshan Sino-Indian Friendship Museum in Shenzhen University.

- **About ICCR Indologist Award :-** It is bestowed upon eminent Indologists working abroad who have made outstanding contribution to the study / research / teaching of India's history, philosophy, thought, art, culture, literature, languages, civilization, society etc. The first award was presented. to Prof. Heinrich Freiherr Von Stietencron of Germany in 2015.

## 7] லக்னோவில் மெட்ரோ ரயில் சோதனை ஓட்டத்தை தொடங்கி வைத்தார் அகிலேஷ் யாதவ்:

- உத்திர பிரதேச மாநிலம் லக்னோவில் மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் நடைபெற்றது. இந்த சோதனை ஓட்டத்தை முதல்வர் அகிலேஷ் யாதவ் கொடி அசைத்து தொடங்கி வைத்தார். இந்தியாவில் முதல் முறையாக பெண்கள் மெட்ரோ ரயில் சோதனை ஓட்டத்தை இயக்குவது இது என்பது குறிப்பிடத்தக்கது.

- The solo trial run of the metro was undertaken by two young women pilots Prachi Sharma and Priyanka Sharma. The trail run of the first phase of metro project covers around four kms between Transport Nagar and Single Nagar Metro stations.

- **Key Facts:-** The first phase of Lucknow metro project, famously known as North South corridor connects Lucknow airport to Munshipulia.

## 8] Vittiya Saksharta Abhiyan. ( VISAKA )

- உயர்கல்வி நிலையங்கள் மற்றும் மாணவர்கள் இடையே பணமில்லா பொருளாதார பரிமாற்ற நடவடிக்கைகளை ஊக்குவிக்க மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் Vittiya Saksharta Abhiyan --- VISAKA எனும் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

- **VISAKA aims to create awareness among people about digital economy and cashless modes of transactions It was launched on line with Prime Minister's appeal to youth in 'Mann Ki Baat' for creating awareness for making India digital and cashless economy.**

## 9] மத்திய புலனாய்வு செயலகத்தின் (சி.பி.ஐ) இடைக்கால இயக்குனராக ராகேஷ் அஸ்தானா நியமிக்கப்பட்டுள்ளார்.

- தற்போதைய இயக்குனர் அனில் சின்ஹாவின் பதவிக்காலம் இன்றுடன் முடிவடைந்துள்ளது. அஸ்தானா குஜராத்தை மாநிலத்தைச் சேர்ந்த 1984-.ஆம் வருட ஐ.பி.எஸ் அதிகாரியாவார்.

**10] நாகாலாந்து டிசம்பர் 1, 1963 ல் ஒரு மாநிலமாக ஆக்கப்பட்டது. தலைநகரான கோகிமாவில் ஹார்ன்பில் திருவிழா விமரிசையாக கொண்டாடப்படும். பல்வேறு**

**இந்திய நகரங்களில் இருந்தும், ஏராளமான வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் இந்த விழாவை காண வருகிறார்கள்.**

- டிசம்பர் மாதம் இந்த திருவிழா நடைபெறும். 'திருவிழாக்களின் திருவிழா' என சிறப்பிக்கப்படும் இது உலக அளவில் பிரசித்தி பெற்றது. நாகாலாந்தில் உள்ள 17 பழங்குடியின மக்களும் ஒருங்கிணைந்து கொண்டாடும் விழா இது. இந்த திருவிழா நாகாலாந்து அரசால் 15 ஆண்டுகளாக கொண்டாடப்பட்டு வருகிறது.
- ஹார்ன்பில் எனப்படுவது இருவாச்சி பறவையை குறிக்கும்.

**11] துபாயில் உள்ள தேரா சர்வதேச பள்ளிக்கூடத்தில் படித்து வரும் இந்திய மாணவி கேகசன் பாசு சர்வதேச குழந்தைகள் அமைதி பரிசை வென்றுள்ளார்.**

- துபாயில் உள்ள தேரா சர்வதேச பள்ளிக்கூடத்தில் படித்து வரும் இந்திய மாணவி கேகசன் பாசு (வயது 16). சுற்றுச்சூழல் வி ழிப்புணர்வு, பருவநிலை மாறுபாடு, உயிரினங்களிடம் அன்பு செலுத்துதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டு வருகிறார். இவரது 'கிரீன் கோப்' அமைப்பில் 1,000 பேர் தன்னார்வ தொண்டர்களாக இணைந்து பணியாற்றி வருகின்றனர்.

- கல்வியை சிறப்பான முறையில் படித்து வருவதற்காக இந்திய அரசின் விருதுகளையும், இசை, நடனம், பேச்சுப்போட்டி ஆகியவற்றில் தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் பரிசுகளை வாங்கி குவித்துள்ளார்.

✓ இந்தநிலையில் சர்வதேச குழந்தைகள் அமைதி பரிசையும் வென்றுள்ளார்.

- அமைதி பரிசை, நெதர்லாந்தில் நோபல் பரிசு பெற்ற முகம்மது யூனுஸ் வழங்க இருக்கிறார். சான்றிதழுடன், ஒரு லட்சம் யூரோ (இந்திய மதிப்பில் சுமார் ரூ.72 லட்சத்து 20 ஆயிரம்) பரிசாக வழங்கப்படும்.

**12] இந்தியா மற்றும் கத்தார் இடையே 5 ஒப்பந்தங்கள் கையெழுத்து**

- நுழைவு விசா, இணையத்தளப் பாதுகாப்பு, முதலீடுகள் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக இந்தியாவுக்கும், கட்டாருக்கும் இடையே ஐந்து ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

- இந்தியாவில் முதல்முறையாக சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள கட்டார் பிரதமர் ஷேக் அப்துல்லா-பின் நாஸர்-பின் கலீஃபா அல் தானி, பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

- எதிர்வரும் 2022-ஆம் ஆண்டு 'ஃபிஃபா' கால்பந்துப் போட்டி கட்டாரில் நடைபெறவுள்ளதால், அந்த நாட்டின் உள்கட்டமைப்புத் துறையில் இந்தியா அதிக அளவில் முதலீடு மேற்கொள்ள வேண்டும் என்று கத்தார் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

- மேலும், முதலீடுகள் மேற்கொள்வது குறித்து கட்டார் வர்த்தக அமைப்புக்கும், இந்திய வர்த்தக சங்கங்களின் கூட்டமைப்புக்கும் (சிஐஐ) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதுதவிர, துறைமுகப் பராமரிப்பில் கூட்டு நடவடிக்கையை ஊக்குவிப்பதற்கான மற்றோர் ஒப்பந்தமும் கையெழுத்தானது .

### 13] டிசம்பர் 4 - இந்திய கடற்படை தினம்

- ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 4 - ஆம் தேதி இந்திய கடற்படை தினமாக கொண்டாடப்படுகிறது.

- 1971-ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் இடையே யுத்தம் நடைபெற்றது. அந்த யுத்தத்தில் இந்திய கடற்படை டிசம்பர் நான்காம் தேதி அன்று பாக்கித்தானின் கராச்சி துறைமுகம் மீது ஒரு அவசர கடல்வழி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் பிஎன்எஸ் முஹபிஸ் மற்றும் பிஎன்எஸ் கைபர் கப்பல்களை இந்திய ஏவுகணைகள் தாக்கி மூழ்கடித்தன .

- இன்னொரு பாகிஸ்தானிய கப்பலான பிஎன்எஸ் ஷாஜஹான் கூட இந்திய கடற்படையால் சேதபடுத்தப்பட்டது. மேலும் இந்திய ஏவுகணை படகுகள் கராச்சி துறைமுகத்தில் உள்ள எரிப்பொருள் கிடங்குகளை தாக்கி எரிய வைத்தன. இந்த தாக்குதல்நடவடிக்கைகள் 'ஆபரேஷன் திரிசூலம்' எனப்பட்டன. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற தாக்குதல்கள் 'ஆபரேஷன் மலைப்பாம்பு' என்று அழைக்கப்பட்டன.

- ❖ இந்த படைநடவடிக்கைகளின் வெற்றியை கொண்டாடும் விதமாக ஆண்டுதோறும் டிசம்பர் நான்காம் தேதி இந்தியா கடற்படை தினமாக கொண்டாடுகிறது.

**14] தடகள விளையாட்டுக் கூட்டமைப்புக்களின் பன்னாட்டுச் சங்கம் { International Association of Athletics Federations ( IAAF ) } வழங்கும் 2016ம் ஆண்டுக்கான சிறந்த தடகள வீரர் விருதை 6வது முறையாக ஜமைக்காவின் உசேன் போல்ட் பெற்றுள்ளார்.**

- ❖ தலைசிறந்த தடகள வீராங்கனையாக எத்தியோப்பியா நாட்டின் அல்மாஸ் அயனா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ❖ ரியோ ஒலிம்பிக் போட்டியில் பெண்களுக்கான 10 ஆயிரம் மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் எத்தியோப்பியா வீராங்கனை அல்மாஸ் அயனா 29 நிமிடம் 17.45 வினாடியில் பந்தய தூரத்தை கடந்து புதிய உலக சாதனை படைத்து தங்கப்பதக்கம் வென்றவர் ஆவார்.

**Other awards :-**

**1] Male Rising Star: Andre De Grasse (Canada).**

**2] Female Rising Star: Nafissatou Thiam (Belgium).**

**3] Coaching Achievement: Harry Marra (US).**

**4] President's Award: Tegla Loroupe. 5] Women in Athletics: Polyxeni Argeitaki (Greece).**

**15] 7வது உலக ஆயுர்வேத மாநாடு மற்றும் கண்காட்சி ,கொல்கத்தாவில் டிசம்பர் 01 முதல் 04 வரை நடைபெற்று முடிந்துள்ளது.**

- **The focus theme of the Ayurveda Congress was "Strengthening the Ayurveda Ecosystem".**

**16] மகாத்மா காந்தி புகைப்படம் தாங்கிய ரூபாய் நோட்டு வரிசையில் புதிய 20 மற்றும் 50 ரூபாய் நோட்டுக்களை இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட உள்ளது.**

- ❖ கடந்த மாதம் நவம்பர் 8 ஆம் தேதியன்று இந்தியாவில் 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுக்கள் செல்லாது என்று பிரதமர் நரேந்திர மோதி அறிவித்திருந்தார். அதனைத்தொடர்ந்து, நாடு முழுவதும் பணத்தட்டுப்பாடு ஏற்பட்டது. இச்சூழலில், ரிசர்வ் வங்கி ஆளுநர் உர்ஜித் படேலின் கையெழுத்தை தாங்கிய புதிய 2,000 மற்றும் 500 ரூபாய் நோட்டுக்கள் வெளியிடப்பட்டன.

- ✓ தற்போது, மகாத்மா காந்தியின் புகைப்படங்கள் கொண்டு ரூபாய் நோட்டு வரிசையில் புதிய 20 மற்றும் 50 ரூபாய் நோட்டுக்கள் ரிசர்வ் வங்கியால் வெளியிடப்பட உள்ளன.

- ❖ புதிய 50 மற்றும் 20 ரூபாய் நோட்டில் ஆளுநர் உர்ஜித் படேலின் கையெழுத்து இடம் பெறுகிறது.

- ✓ மேலும், 50 ரூபாய் நோட்டில் எண்கள் வரிசையில் இடம்பெற்றிருக்கும் எழுத்து இந்த புதிய நோட்டுக்களில் இடம்பெறாது. மற்றப்படி, பழைய 50 ரூபாய் நோட்டுக்களிலிருந்த அதே பாதுகாப்பு அம்சங்கள் இதிலும் இருக்கும்.

- ❖ புதிய 20 ரூபாய் நோட்டில் உள்ள இரு வரிசை எண்கள் பகுதியிலும் 'எல்' என்ற எழுத்தும், ஆளுநர் உர்ஜித் படேலின் கையெழுத்தும் இடம் பெற்றிருக்கும்.

**17] ஆப்கானிஸ்தான் நாட்டின் நலனை மையமாக கொண்டு நடைபெறும் ஆறாவது 'ஆசியாவின் இதயம் மாநாடு' [ 6th Edition ] பஞ்சாப்பில் உள்ள அமிர்தசரஸ் நகரில் தொடங்கியது.**

- ❖ ஆப்கானிஸ்தானில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை வலுப்படுத்தும் வகையில் கடந்த 2011-ம் ஆண்டு முதல் 'ஆசியாவின் இதயம்' என்ற பெயரில் ஒவ்வொரு ஆண்டும் மாநாடு நடத்தப்படுகிறது. ஆப்கானிஸ்தான், இந்தியா, பாகிஸ்தான் மற்றும் அதன் அண்டை நாடுகள் இந்த ஆசியாவின் இதயம் மாநாட்டில் பங்கேற்கும். ஆப்கானிஸ்தானுடனான பிராந்திய பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படுகிறது.

- ❖ அதன்படி, 9-12-2015 அன்று பாகிஸ்தான் தலைநகரான இஸ்லாமாபாத்தில் ஐந்தாவது 'ஆசியாவின் இதயம்' மாநாடு நடைபெற்றது. இதையடுத்து, இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தின் தலைநகரான அமிர்தசரஸ் நகரில் இந்த ஆண்டுக்கான ஆறாவது 'ஆசியாவின் இதயம்' மாநாடு இன்று (சனிக்கிழமை) தொடங்கியது.

- ❖ [ The theme of this edition of the conference was "Addressing Challenges, Achieving Prosperity". ]

**18] கொங்கன் 16&LIVE EXERCISE (LIVEX)**

- இந்தியா மற்றும் பிரிட்டன் கடற்படைகள் [ராயல் கடற்படை ] இணைந்து மேற்கொள்ளும் வருடாந்திர பயிற்சிகள் டிசம்பர் 05 முதல் 09 வரை மும்பையில் KONKAN 16 என்ற பெயரிலும், **டிசம்பர் 12 முதல் 16 வரை கோவாவில் LIVE EXERCISE (LIVEX) என்ற பெயரிலும் நடைபெறுகிறது.**

**19] இந்தியாவின் 44 வது தலைமை நீதிபதியாக ஜெகதீஷ் சிங் கேஹர் நியமிக்கப்பட உள்ளார். அவரது பெயரை தற்போதைய தலைமை நீதிபதி டி.எஸ்.தாக்குர் பரிந்துரை செய்துள்ளார்.**

- ஜனவரி 4 [ 2017 ]-ம் தேதியில் இருந்து ஆகஸ்ட் 4-ம் தேதி [ 2017 ] வரை ஜெகதீஷ் சிங் கேஹர் தலைமை நீதிபதியாக பதவி வகிப்பார்.
- தலைமை நீதிபதியாக பொறுப்பேற்கும் முதல் சீக்கிய நீதிபதி ஜெகதீஷ் சிங் கேஹர் என்பது குறிப்பிடத்தக்கது.

**20] அம்பேத்கரின் பிறந்த நாள் தண்ணீர் தினமாக அனுசரிப்பு.**

- அம்பேத்கரின் பிறந்த நாளை (ஏப்ரல் 14) தண்ணீர் தினமாக அனுசரிக்கப் போவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. அம்பேத்கர் 61-வது நினைவுதினத்தை அடையாளப்படுத்தும் விதமாக தேசிய கருத்தரங்கு நடைபெற்றது.

- ✓ கருத்தரங்கில் பேசிய மத்திய நீர் வளத்துறை அமைச்சர் உமா பாரதி, 'நீர் ஆதாரங்களை நிர்வகிக்கும் அகில இந்திய கொள்கைகளில் அம்பேத்கர் முக்கிய பங்கு வகித்துள்ளார். தண்ணீர் விலைமதிப்பற்ற இயற்கை வளம். மக்களுக்கு அதின் முக்கியத்துவத்தை உணர்த்தவும், நாட்டின் நீர்வள பாதுகாப்பில் அம்பேத்கரின் பங்களிப்பையும் கருத்தில் கொண்டு, ஏப்ரல் 14-ம் தேதி தண்ணீர் தினமாக அனுசரிக்கப்பட மத்திய அரசு முடிவெடுத்துள்ளது', என பேசினார்.

**21] புவி ஆய்வு செயற்கைகோளுடன் பி.எஸ்.எல்.வி. சி-36 ராக்கெட்டை விண்ணில் செலுத்தியது.**

- புவி ஆய்வு செயற்கைகோளுடன் பி.எஸ்.எல்.வி. சி-36 ராக்கெட் 7-ந்தேதி விண்ணில் செலுத்த இஸ்ரோ விஞ்ஞானிகள் திட்டமிட்டனர்.

**புவி ஆய்வு செயற்கைகோள்**

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) புவி ஆய்வு, தொலையுணர்வு தகவல்களை பெறுவது, கடல்சார் ஆராய்ச்சி, தகவல் தொடர்பு மற்றும் வானிலை பயன்பாடு உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்காக செயற்கைகோள்களை வடிவமைத்து விண்வெளிக்கு செலுத்தி வருகிறது.

  ✓ புவி ஆய்வுக்காக ஏற்கனவே 2003-ம் ஆண்டு ரிசோர்ஸ் சாட்-1, 2011-ம் ஆண்டு ரிசோர்ஸ் சாட்-2 செயற்கைகோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டு உள்ளன. இதனைத் தொடர்ந்து தற்போது 1,235 கிலோ எடை கொண்ட 3-வது செயற்கைகோள் ரிசோர்ஸ் சாட்-2ஏ வடிவமைக்கப்பட்டு உள்ளது. இது பி.எஸ்.எல்.வி. சி-36 ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட உள்ளது. இது 38-வது பி.எஸ்.எல்.வி. ராக்கெட் ஆகும்.

- இந்த செயற்கைகோள் பூமியில் இருந்து 817 கிலோ மீட்டர் உயரத்தில் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்படுகிறது. அதில் இயற்கை வளங்களை பல்வேறு கோணங்களில் துல்லியமாக படம் எடுக்க உதவும் 3 கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதன் ஆயுட்காலம் 5 ஆண்டுகள்.

### 22] சோ ராமசாமி - காலமானார். [ 07.12.2016 ]:-

- 1934 டிசம்பர் 5ஆம் தேதி சென்னை மயிலாப்பூரில் பிறந்த, இவருடைய தந்தையார் பெயர் ரா. ஸ்ரீநிவாசன், தாயார் ராஜம்மாள். இவர் தன்னுடைய பள்ளிப் படிப்பை மயிலாப்பூர் பி.எஸ். உயர்நிலைப் பள்ளியிலும், இளநிலைஅறிவியல் (பி.எஸ் சி) பட்டப் படிப்பை விவேகானந்தா கல்லூரியிலும் பயின்றார். பின் 1953-55-ஆம் ஆண்டுகளில் சென்னை சட்டக் கல்லூரியில் தனது சட்டப்படிப்பை முடித்தார். அதன் பிறகு சிறிது காலம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றியார்.

- சோ தனது 20 வயதில் ஒரு நாடகம் பார்த்தபோது நடிப்பில் ஆர்வம் பிறந்தது. அந்த ஆர்வத்தின் காரணமாக முதன்முதலாக 'கல்யாணி' என்ற நாடகத்தில் ராமசாமி நடித்தார். அதன் பிறகு தொடர்ந்து பல்வேறு நாடகங்களில் நடித்து பெயர் பெற்றார். இவருடைய நாடகத்தில் மிக முக்கியமானது முகமது பின் துக்ளக் நாடகம்தான். அது பின்னர் திரைப்பட மாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து துக்ளக் என்ற அந்தப் பெயரைதான் தனது பத்திரிகைக்கும் பெயராக வைத்துக் கொண்டார்.

✓ பகீரதன் என்பவர் எழுதிய `தேன்மொழியாள்` என்ற மேடை நாடகத்தில்தான் சோவிற்கு `சோ` என்ற கதாபாத்திரத்தை ஏற்று நடிக்கக்

கூடிய வாய்ப்பு கிடைத்தது. அந்த நாடகத்தில் அவர் ஏற்று நடித்த கதாபாத்திரத்தின் பெயரையே தன் புனைப்பெயராக பின்னர் மாற்றிக் கொண்டார். பின்னர் 1976ஆம் ஆண்டில் PickWick என்ற ஆங்கில இதழைத் தொடங்கினார். இவர் தனது பத்திரிக்கைத்துறைச் பணிக்காக 1985 இல் 'மஹாரான மேவார்' வழங்கிய ஹால்டி காட்டி விருதும், 1986 இல் வீரகேசரி விருதும், 1994 ஆம் ஆண்டு கொயங்கா விருதும், 1998 இல் நச்சிக்கேதஸ் விருதும் பெற்றார்.

- ✓ சோ ராமசாமி அவர்களின் முதல் திரைப்படம் - பார் மகளே பார். சோ ராமசாமி அவர்களின் கடைசி திரைப்படம் - அதிசய பிறவி.

**23] இந்தியா மற்றும் வியட்நாம் இடையே தகவல் தொழில்நுட்ப துறையில் ஒத்துழைப்புக்காக புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.**

**24] உலகின் முதல் 10 மிக சக்திவாய்ந்தவர்கள் பட்டியலில் மோடி**

- ❖ உலகின் மிகவும் சக்திவாய்ந்த பிரபலங்களின் பட்டியலை ஃபோர்ப்ஸ் இதழ் வெளியிட்டுள்ளது. இதில் உலகம் முழுவதிலுமிருந்து 74 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக இந்த பட்டியலின் மிகவும் சக்திவாய்ந்த டாப்-10 பிரபலங்களில் இந்திய பிரதமர் மோடி 9-வது இடத்தை பிடித்துள்ளார்.

- ❖ 7.4 பில்லியன் மக்களைக் கொண்ட இந்தப் பூமிப் பந்தில், 74 தலைவர்கள் உலகை மாற்றியமைக்கும் வல்லமையுடன் திகழ்கிறார்கள் என்று அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த சக்தி வாய்ந்த தலைவர்களின் பட்டியலில், ரஷிய அதிபர் விளாதிமீர் புதின், தொடர்ந்து 4-வது ஆண்டாக முதலிடத்தில் உள்ளார். அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் டிரம்ப் 2-வது இடத்தைப் பிடித்துள்ளார்.

- ❖ அவருக்கு அடுத்து உலகின் மிக சக்தி வாய்ந்த பெண் தலைவராக ஜெர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்கல், 3-வது இடத்தைப் பிடித்துள்ளார். சீன அதிபர் ஜீ ஜின்பிங் 4-வது இடம், போப் பிரான்சிஸ் 5-வது இடம் "மைக்ரோசாஃப்ட்' இணை நிறுவனர் பில்கேட்ஸ் 7-வது, "ஃபேஸ்புக் தலைமைச் செயல் அதிகாரி மார்க் ஜக்கர்பக் 10-வது இடம், பிரான்ஸ் அதிபர் பிரான்சுவா ஹொலாந்த் 23-வது இடம், ஆப்பிள் நிறுவன தலைமைச் செயல் அதிகாரி டிம் குக் 32-வது இடம், வடகொரியாவின் தலைவர் கிம் ஜாங்-உன் 43-வது இடம் பிடித்துள்ளனர்.

**25] உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட வெர்சன்-2 என அழைக்கப்படும் பாபர் ஏவுகணையை வெற்றிகரமாக சோதித்தது பாகிஸ்தான்.**

- தாழ்வான மட்டத்தில் பயணித்து தரை மற்றும் கடலிலுள்ள இலக்குகளை துல்லியமாக தாக்கி அழிக்கும் திறன் கொண்ட உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட பாபர் ஏவுகணையினை பாகிஸ்தான் வெற்றிகரமாக சோதித்துள்ளது. சுமார் 700 கிமீ தூரம்வரை பறந்து இலக்குகளை துல்லியமாக தாக்கி அழிக்கும் திறன் கொண்டதாக குறித்த ஏவுகணை வடிவமைக்கப்பட்டுள்ளது.

**26] இந்தியா - மாலத்தீவு இடையிலான ஏழாவது கூட்டு இராணுவ பயிற்சி [ EKUVERIN Exercise 2016 ] Kadhdhoo, Laamu Atoll, மாலத்தீவில் தொடங்கியது.**

- இந்த கூட்டு இராணுவ பயிற்சி 14 நாட்கள் நடைபெறும்.

**27] மாற்றுத்திறனாளிகளை பாரபட்சமாக நடத்துவோருக்கு 2 ஆண்டு சிறை தண்டனை: சட்ட மசோதா நிறைவேற்றம்**

- பூஜ்ஜிய நேரத்தின் போது மாற்றுத் திறனாளிகள் உரிமை மசோதாவை (2014) உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று குலாம் நபி ஆசாத், மாயாவதி, சீதாராம் யெச்சூரி உள்ளிட்ட எதிர்க்கட்சி தலைவர்கள் வலியுறுத்தினர்.

- இதற்கு பதில் அளிக்கும் வகையில், நாடாளுமன்ற விவகாரத் துறை இணை அமைச்சர் முக்தர் அப்பாஸ் நக்வி கூறும்போது, "இந்த மசோதா உடனடியாக விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறை வேற்றப்படும்" என்றார். இதை யடுத்து இந்த மசோதா மீது குறுகியகால விவாதம் நடை பெற்றது. பின்னர் குரல் வாக்கு மூலம் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டது.

**ரூ.5 லட்சம் வரை அபராதம்**

- மாற்றுத் திறனாளிகள் சட்டத் துக்கு (1995) மாற்றாக, சில திருத்தங்களுடன் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன்படி, மாற்றுத் திறனாளி களை பாரபட்சமாக நடத்து வோருக்கு குறைந்தபட்சம் 6 மாதம் முதல் அதிகபட்சம் 2 ஆண்டுகள் வரை சிறை தண்டனை கிடைக்கும். மேலும் குறைந்தபட்சமாக ரூ.10 ஆயிரம் முதல் ரூ.5 லட்சம் வரையிலும் அபராதமும் விதிக்க முடியும்.

**28] நாடு முழுவதும் தேசிய, மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள மதுக்கடைகளுக்கு தடை விதித்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும், தற்போது இந்த இடங்களில் உள்ள மதுக்கடைகளின் உரிமமானது அடுத்த ஆண்டு மார்ச் 31-க்குப் பிறகு நீட்டிக்கப்படக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.**

- இந்தியா முழுவதும் தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள மதுக்கடைகளை அகற்றக் கோரி, உச்ச நீதிமன்றத்தில் பல்வேறு தரப்பினரால் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகள் மீதான விசாரணையின்போது, நெடுஞ்சாலைகளில் மது விற்பனைக்கு விலக்கு அளிக்க வேண்டும் என பஞ்சாப் அரசு சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

- இந்த வழக்குகளை விசாரித்து வந்த உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், நாடு முழுவதும் தேசிய, மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள மதுக்கடைகளுக்கும், பார்களுக்கும் தடை விதித்தும், அங்குள்ள மதுக்கடைகளின் உரிமத்தை அடுத்த ஆண்டு மார்ச் 31-க்குப் பிறகு நீட்டிக்கக் கூடாது என்றும் தீர்ப்பளித்தது. இந்த உத்தரவைப் பிறப்பித்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.எஸ்.தாக்குர் தலைமையிலான மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு.

### 29) நாடாளுமன்ற தாக்குதல் நினைவுதினம் அனுசரிப்பு [ 13.12.2016 ]

- கடந்த 2001 ம் ஆண்டு நாடாளுமன்றம் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலின் 15-ம் ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.

### 30) யூனிசெப் நல்லெண்ண தூதராக நடிகை பிரியங்கா சோப்ரா தேர்வு

- யூனிசெப் அமைப்பின் புதிய சர்வதேச நல்லெண்ணத் தூதராக நடிகை பிரியங்கா சோப்ரா நியமிக்கப்பட்டுள்ளார்.
- யூனிசெப் என்றழைக்கப்படும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் தொடங்கி 70 ஆண்டுகள் நிறைவு பெறுவதை நினைவு கூரும் வகையில், நியூயார்க்கில் உள்ள ஐநா சபை தலைமை அலுவலகத்தில் சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

- நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, யூனிசெப் அமைப்பின் புதிய சர்வதேச நல்லெண்ணத் தூதராக 'பாலிவுட்' நடிகை பிரியங்கா சோப்ரா அறிவிக்கப்பட்டார்.

**31) பிரபல சமூக வலைத்தளமான டிவிட்டர் மூலமாகவும் தன்னுடைய அலுவலகப் பணிகளை மேற்கொள்ளும், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜின் சேவையை பாராட்டி 'பாரீன் பாலிஸி' எனப்படும் சர்வதேச நாளிதழ் அவரை 2016-ஆம் ஆண்டுக்கான உலகளாவிய ' 15 சர்வதேச சிந்தனையாளர்களில்' ஒருவராக தேர்ந்தெடுத்துள்ளது.**

- ❖ ஹிலாரி கிளிண்டன், ஜெர்மனியின் அதிபர் ஏஞ்செலா மார்க்கெல் மற்றும் கனடா நாட்டுப் பிரதமர் ஜஸ்டின் ட்ரீடியூ ஆகியோர் விருது பெரும் மற்ற சிலராவார்கள்.

**32) உலகில் உள்ள ஏழு கண்டங்களில் அதிக அளவிலான பனியால் மூடப்பட்டுள்ள கண்டம் அண்டார்ட்டிகா. இக்கண்டத்தில் பிரமாண்டமான மர்ம பள்ளம் தோன்றியிருப்பது விஞ்ஞானிகளை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.**

**பள்ளத்திற்கான காரணம்:**

- ❖ அண்டார்ட்டிகா கிழக்கு கண்டத்தின் ராய் பவுதோயின் என்றழைக்கப்படும் பகுதியில் ஒரு பெரிய ஏரி காணப்பட்டது. அதில் தேங்கியிருந்த நீர், பனிபடலததிற்கு அடியில் தோன்றிய கால்வாய் மூலமாக வெளியேறியது தான் அப்பள்ளத்திற்கு காரணம் என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

**3 கி.மீ., விட்டம்**

- ❖ சுமார் 3 கி.மீ., விட்டம் கொண்டுள்ள இந்தப் பள்ளம் தோன்றுவதற்கு அப்பகுதியில் விழுந்த எரி நட்சத்திரம் காரணமாக இருக்கலாம் என்ற சந்தேகம் ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் எழுந்தது. ஆனால் ஏரியில் காணப்பட்ட பனிகட்டிகளும் பனிப்படலங்களும் உருகி அதிலிருந்த நீர் வெளியேறியது தான் காரணம் என்று தற்போது தெளிவாகி உள்ளது.

**33) 9th INDRA NAVY - 2016**

- ❖ இந்தியா மற்றும் ரஷ்யா கடற்படைகள் இணைந்து மேற்கொள்ளும் பயிற்சி 9வது இந்திரா நேவி , விசாகப்பட்டினத்தை மையமாக கொண்டு வங்க கடலில் நடைபெறுகிறது.

- ❖ இந்த பயிற்சி இரண்டு கட்டமாக நடைபெறுகிறது. டிசம்பர் 14 முதல் 18 வரை Harbour Phase என்றும் டிசம்பர் 19 முதல் 21 வரை Sea Phase என்றும் அழைக்கப்படுகிறது.

**34) நாட்டின் பாதுகாப்பிற்காக ராணுவத்திற்கு அதிகம் செலவிடும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 4வது இடத்தில் உள்ளது. அமெரிக்கா முதலிடத்தில் இருந்து வருகிறது.**

**35) டிஜிட்டல் பரிமாற்றம் செய்யும் நபர் ஒருவருக்கு க்கு ஏப்ரல் 14ம் தேதி ரூ.1 கோடி பரிசு அறிவிக்கப்படும் என நிடி ஆயோக் அறிவித்துள்ளது.**

- Union Government launches Lucky Grahak Yojana, Digi Dhan Vyapar Yojana to promote digital payments

- இது தொடர்பாக நிடி ஆயோக் அமைப்பின் சி.இ.ஒ., அமிதாப் காந்த் கூறியதாவது: நுகர்வோர் மற்றும் வணிகர்கள் மத்தியில் டிஜிட்டல் பரிமாற்றத்தை ஊக்குவிக்க தினசரி, வாராந்திர பரிசு வழங்கப்பட உள்ளது. நுகர்வோர்களுக்காக லக்கி கிரஹாக் யோஹஜனா, வணிகர்களுக்காக திகி தான் வியாபாரி யோஜனா என்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது. தேசிய நுகர்வோர் அமைப்பு இந்த பரிசு திட்டத்தை செயல்படுத்த உள்ளது.

**ரூ.1 கோடி பரிசு:**

- லக்கி கிரஹாக் யோஜனா திட்டத்தின் கீழ், வரும் கிறிஸ்துமஸ் முதல், 2017 ஏப்ரல் 14ம் தேதி வரை தினமும் 15 ஆயிரம் பேருக்கு தலா ரூ.1000 பரிசு வழங்கப்பட உள்ளது. மேலும், வாரந்தோறும், 7 ஆயிரம் பேருக்கு பரிசு வழங்கப்பட உள்ளது. அதிகபட்சமாக ரூ.1 லட்சம் பரிசு வழங்கப்படும். இந்த திட்டமும் கிறிஸ்துமஸ் முதல் 2017 ஏப்ரல் 14ம் தேதி வரை செயல்படுத்தப்படும். பின்னர் 2017 ஏப்ரல் 14ம் தேதி மெகா பரிசு அறிவிக்கப்படும். முதல் பரிசாக ரூ.1 கோடியும், இரண்டாம் பரிசாக ரூ.50 லட்சமும், 3வது பரிசாக ரூ.25 லட்சமும் அறிவிக்கப்படும்.

**வணிகர்களுக்கு:**

- திகி தான் வியாபாரி யோஜனா திட்டத்தின் கீழ், கிறிஸ்துமஸ் முதல் 2017 ஏப்ரல் 14 வரை வாரந்தோறும் 7 ஆயிரம் வணிகர்களுக்கு பரிசு வழங்கப்பட உள்ளது. அதிகபட்சமாக ரூ.50 ஆயிரம் பரிசு வழங்கப்படும். ஏப்ரல் 14ம் தேதிக்கு நுகர்வோர் மற்றும் வணிகர்களுக்கு மெகா பரிசு வழங்கப்படும் என்றார்.

**36) இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்தின் (எல்ஐசி) தலைவராக வி.கே.சர்மா ஐந்து ஆண்டுகளுக்கு நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். அவர் தற்போது பொறுப்பு தலைவராக இருந்து வருகிறார்.**

- கடந்த செப்டம்பர் மாதம் அப்போதைய தலைவர் எஸ்.கே.ராய் ராஜினாமா செய்ததை அடுத்து தலைவர் பதவி காலியாக இருந்தது. இரு ஆண்டுகள் பதவிக் காலம் இருக்கும் போதே எஸ்.கே.ராய் ராஜினாமா செய்தார்.

- வி.கே.சர்மா கடந்த 2013-ம் ஆண்டு முதல் நிர்வாக இயக்கு நராக இருக்கிறார். 1981-ம் ஆண்டு எல்.ஐ.சியில் சேர்ந்த இவருக்கு மாத சம்பளமாக 80,000 ரூபாய் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஊதியம் மாறுதலுக்கு உட்பட்டது என எல்ஐசி தெரிவித்திருக்கிறது.

**37) 'பீலே' ஆங்கில படத்துக்கு இசையமைத்ததற்காக ஆஸ்கார் விருதுக்கு ஏர்.ஆர். ரகுமானின் பெயர் மீண்டும் பரிந்துரை**

**கால்பந்தாட்ட வீரர் :**

- பிரேசிலைச் சேர்ந்த புகழ்பெற்ற கால்பந்தாட்ட வீரர் 'பீலே'யின் வாழ்க்கை வரலாறை மையமாக வைத்து, 'பீலே' என்ற பெயரில் ஆங்கிலப்படம் தயாரிக்கப்பட்டது. இந்த படத்தை ஜேக்ப் ஜிம்பாலிஸ்ட், மைக்கேல் ஆகியோர் இணைந்து இயக்கி இருந்தனர்.

- இந்த படத்துக்கு ஏர்.ஆர்.ரகுமான் இசையமைத்து இருந்தார். 'பீலே' படத்துக்கு இசையமைத்ததற்காக ஏர்.ஆர்.ரகுமான் பெயர் ஆஸ்கார் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதற்கான முதல்கட்ட தேர்வு பட்டியலில் அவரது பெயர் இடம்பெற்றுள்ளது. சிறந்த பின்னணி இசை, பாடல் ஆகிய இரண்டு பிரிவுகளில் அவரது பெயர் தேர்வாகியுள்ளது.

**2 ஆஸ்கார் விருது :-**

- சிறந்த பின்னணி இசை தேர்வு பட்டியலில் ஏர்.ஆர்.ரகுமான் பெயர் 145-வது இடத்திலும், சிறந்த தனிப்பாடல் பிரிவில் 90-வது இடத்திலும் இருக்கிறது.

- பரிந்துரைக்கான இறுதிப்பட்டியல் ஜனவரி 24-ந் தேதி வெளியிடப்படும். ஏர்.ஆர்.ரகுமான் ஏற்கனவே 2009-ம் ஆண்டு ஸ்லம்டாக் மில்லினர் படத்துக்கு இசையமைத்ததற்காக இரண்டு ஆஸ்கார் விருதுகளை பெற்று இந்தியாவுக்கு பெருமை சேர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### 38) இந்திய தொழில்முனைவோரை ஊக்குவிக்கிறது அமேசான்

- அமேசான் இந்தியா நிறுவனம் தொழில்முனைவோருக்கு உதவ, லான்ச்பேட் என்ற புதிய சேவையை அறிமுகம் செய்துள்ளது.

- அமேசான் இணைய வர்த்தக நிறுவனம் வாடிக்கையாளர்களைக் கவர்வதற்காக பல்வேறு புதிய யுத்திகளைக் கையாண்டு வருகிறது. ஒரே நாளில் டெலிவரி, அமேசான் ப்ரைம் வீடியோ என பல திட்டங்களை செயல்படுத்தியுள்ளது.

- அதே போல, இந்திய தொழில்முனைவோரை ஊக்குவித்து உதவ, லான்ச்பேட் (Launchpad) என்ற புதிய சேவையைத் தொடங்கியுள்ளது. இதன் மூலம் புதிதாக தொழில் தொடங்குபவர்கள் தமது தயாரிப்புகளை அமேசான் இணையதளத்தில் விற்பனை செய்யும் வாய்ப்பை அளிக்கிறது.

- இந்திய தொழில்முனைவோரின் தயாரிப்புகள் உலக அளவில் விற்பனையாவதற்கான தளத்தை அமைத்துத் தரும் இந்த சேவைக்கு, ரூ.5000 மாதாந்திரக் கட்டணம் பெறப்படும் என்றும் அறிவித்துள்ளது.

- ஏற்கெனவே, அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, ஜெர்மனி, பிரான்ஸ், மெக்ஸிகோ ஆகிய நாடுகளில் லான்ச்பேட் சேவை அளிக்கப்பட்டு வருகிறது.

### 39) அமெரிக்க புதிய அதிபர் டொனால்டு டிரம்ப் பொருளாதார ஆலோசனை குழுவில் பெப்சி நிறுவனத்தின் தலைமை நிர்வாகி இந்திரா நூயி இடம் பெற்றுள்ளார்.

- அமெரிக்காவின் புதிய அதிபர் டொனால்டு டிரம்பின் ஆலோசனைக் குழுவில், சென்னையைச் சேர்ந்தவரான இந்திரா நூயி இடம் பெற்றுள்ளார். சென்னையைச் சேர்ந்த இந்திரா நூயி, அமெரிக்காவின் பெப்சி குளிர்பான நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக உள்ளார். அவர் அவ்வப்போது சென்னை வந்து செல்கிறார்.

- இந்நிலையில், அமெரிக்காவில் புதிய அதிபராக தேர்வு செய்யப்பட்டுள்ள டொனால்டு டிரம்ப், தன்னுடைய நிர்வாகத்தை தேர்வு செய்வதற்காக

ஆலோசனை குழு ஒன்றை நியமித்துள்ளார். இக்குழுவில் புதிதாக இந்திரா நூயி சேர்க்கப்பட்டுள்ளார். இக்குழுவின் தலைவர் இலான் முஸ்க் இதை அறிவித்தார்.

### 40) அலெப்போ சிரியாவில் 6-வது ஆண்டாக உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது

- சிரியாவில் 6-வது ஆண்டாக உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது. அங்குள்ள கிழக்கு அலெப்போ நகரை கிளர்ச்சியாளர்களிடம் இருந்து மீட்பதற்காக கடுமையான சண்டை நடந்து வந்தது. நகரின் பெரும்பான்மையான பகுதிகளை அதிபர் பஷார் அல் ஆசாத்தின் படைகள் மீட்டு விட்டன. இதற்கிடையே அலெப்போவில் போரை முடிவுக்கு கொண்டு வரும் வகையில், அதிபர் ஆதரவு படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே சண்டை நிறுத்தம் செய்வதற்காக துருக்கியும், ரஷியாவும் முயற்சி மேற்கொண்டன.

- அதில் அதிபர் ஆதரவு படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நேற்று முன்தினம் சண்டை நிறுத்த உடன்பாடு ஏற்பட்டது.

  இதன்படி கிழக்கு அலெப்போ நகரில் இருந்து கிளர்ச்சியாளர்களும், பொதுமக்களும் வெளியேறி, வடக்கு சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் பிடியில் உள்ள பகுதிக்கு சென்று விட வேண்டும்.

### 41) முக்கிய துறைமுக ஆணைய மசோதாவிற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்

- முக்கிய துறைமுக ஆணைய மசோதாவிற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. முக்கிய துறைமுகங்கள் சட்டம் 1963-இல் திருத்தம் கொண்டுவரவும் ஒப்புதல் அளித்துள்ளது. இந்தியா-நைரீஜியா விமான சேவை ஒப்பந்தத்தில் திருத்தம் கொண்டுவரவும் ஒப்புதல் அளித்துள்ளது.

### 42) 2016 ஆண்டிற்கான கூகுள் இணையதளத்தில் அதிக தேடல் பட்டியலை வெளியிட்டுள்ளது கூகுள்

- 2016 ஆண்டிற்கான கூகுள் இணையதளத்தில் அதிக தேடல் பட்டியலை வெளியிட்டுள்ளது அந்நிறுவனம். இந்தியர்களால் அதிகம் தேடப்பட்ட டாப்-10 வார்த்தைகளை கூகுள் நிறுவனம் வெளியிட்டுள்ளது. தனிநபர்கள் தேடல், மொபைல் தேடல், விளையாட்டு தேடல், படங்கள் தேடல் என்று சில பட்டியலை கூகுள் வெளியிட்டுள்ளது. அதில் சிலவற்றை கீழே பார்க்கலாம்

**டாப் 10 தனிநபர்கள்:-**

1. டொனால்ட் டிரம்ப்; 2.பி.வி.சிந்து ; 3.சோனம் குப்தா; 4.தீபா கர்மாகர் ;

5. திஷா பதானி; 6.ஊர்வசி ரவுதேலா; 7.விஜய் மல்லையா;

8.பூஜா ஹெக்டே ; 9.சாக்ஷி மாலிக்; 10. அர்னாப் கோஸ்வாமி

**டாப்-10 செய்திகள்:**

1. ரியோ ஒலிம்பிக்ஸ் 2016; 2. அமெரிக்க தேர்தல் ; 3. வாக்கெடுப்பு

4. ஏழாவது சம்பள கமிஷன் ; 5. ஆட்டோ எக்ஸ்போ 2016;

6. ஆஸ்கர் விருதுகள் 2016; 7.ரூபாய் நோட்டு மாற்றம்;

8. சர்ஜிகல் ஸ்ட்ரைக்; 9. ஜிகா வைரஸ் ; 10. பிரிக்ஸ் உச்சி மாநாடு

**டாப்-10 வார்த்தைகள்:**

1.ரியோ ஒலிம்பிக்ஸ் 2016; 2.போக்கிமான் கோ ; 3.யூரோ 2016;

4.சுல்தான்; 5.கபாலி ; 6.ஐபோன் 7; 7.ஐபிஎல் 2016;

8.டொனால்ட் டிரம்ப்; 9. உத்தா பஞ்சாப் ; 10. பி.வி.சிந்து

**43) உ.பி. அரசு ஊழியர்களுக்கு 7வது சம்பள கமிஷன் அமல்.**

- உத்தரப் பிரதேசத்தில் முதல்வர் அகிலேஷ் யாதவ் தலைமையில் லக்னோவில் நேற்று அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது. இதில் அரசு ஊழியர்களுக்கு 7வது ஊதியக்குழு பரிந்துரைகளை அமல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- இதன் மூலம் ஆங்கில புத்தாண்டு போனசாக அரசு ஊழியர்களுக்கு சம்பள உயர்வு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.
- அமைச்சரவை கூட்டத்திற்கு பின்னர் பத்திரிக்கையாளர்களை சந்தித்த முதல்வர் அகிலேஷ் யாதவ், "ஜனவரி ஒன்றாம் தேதி முதல் அரசு ஊழியர்கள், ஓய்வூதியதாரர்களுக்கு 7வது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் அமல்படுத்தப்படும். இதனால் அரசுக்கு பல கோடி ரூபாய் கூடுதல் சுமை ஏற்படும். எனினும் இதன் மூலம் லட்சக்கணக்கான அரசு ஊழியர்கள் பயன்பெறுவார்கள்" என்றார்.

**44) மலேஷிய நாட்டின், 15வது மன்னராக சுல்தான் முகமது பதவியேற்றுள்ளார்.**

- தென் கிழக்கு ஆசிய நாடான மலேஷியா, பிரிட்டனிடமிருந்து, 1957ம் ஆண்டு, சுதந்திரம் பெற்றது. பிரிட்டனிடம் அடிமையாவதற்கு முன், மலேஷியாவில் மன்னராட்சி நடந்து வந்தது.
- முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும், மலேஷியாவில், ஒன்பது மாகாணங்களின் மன்னரும், சுழற்சி முறையில், மலேஷியாவின் மன்னராக, ஐந்து ஆண்டுகள் இருப்பர். மலேஷியாவின் மன்னராக இருந்த சுல்தான் அப்துல் ஹலிம் முட்ஜம், பதவிக்காலம் முடிந்ததையடுத்து, புதிய மன்னராக, கேலன்டன் மாகாண மன்னர், சுல்தான் முகமது, தேர்வு செய்யப்பட்டார்.

**45) நாடுமுழுவதும் மாஞ்சா நூல் விற்பனை மற்றும் பயன்பாட்டுக்கு தேசிய பசுமை தீர்ப்பாயம் தடை விதித்து உத்தரவிட்டுள்ளது. மேலும், சீனாவில் இருந்து இறக்குமதியாகும் மாஞ்சா நூலுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.**

**46) சர்வதேச விருதுக்கு இந்தியாவை சேர்ந்த ஆசிரியை பெயர் பரிந்துரை [ கவிதா சங்வி ]**

- 2016 ஆம் வருடத்திற்கான, சர்வதேச ஆசிரியர் விருதுக்கு, இந்தியாவை சேர்ந்த இயற்பியல் ஆசிரியை பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்த விருது பெறுவோருக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் பரிசாக வழங்கப்படும்.

**இயற்பியல் ஆசிரியை:**

- மும்பையில் உள்ள எம்இடி ரிஷிகுல் வித்யாலாயா சர்வதேச பள்ளியில் இயற்பியல் ஆசிரியையான கவிதா சங்வி, இயற்பியல் பாடத்தை கற்பிக்கும் முறைக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளார். புத்தகங்களில் உள்ள பாடத்தை, வாழ்க்கையில் நேரடியாக சந்திக்கும் அனுபவங்களுடன் ஒப்பிட்டு, கவிதா பாடம் கற்பித்து வந்தார்.

**47) Ballon d'Or Award - 2016**

- உலகின் சிறந்த கால்பந்து வீரருக்குரிய " பாலோன் டி " தங்கப்பந்து விருது, போர்சுகல் அணியின் கேப்டன் ' கிறிஸ்டியானோ ரொனால்டோ வுக்கு ' 4வது முறையாக ( 2008, 2013, 2014, 2016 ) வழங்கப்பட்டுள்ளது.

- [ அர்ஜென்டினா வீரர் மெஸ்ஸி 2009, 2010, 2011, 2012 , 2015 ஆண்டுகளில் இவ்விருதை வென்றுள்ளார் ]

**48) கத்தார்: வெளிநாட்டு தொழிலாளர்கள் தொடர்பான கடுமையான சட்டத்தை [ "கஃபாலா" ] மாற்ற அரசு முடிவு**

- கத்தாரில் பணிபுரியும் வெளிநாட்டு தொழிலாளர்கள் அந்நாட்டை விட்டு வெளியேறவும்,வேறு பணிகளுக்கு செல்லவும் அவர்கள் பணி புரியும் நிறுவனத்தின் அனுமதியை வாங்க வற்புறுத்தும் தொழிலாளர் ஆளெடுப்பு குறித்த சட்ட அமைப்பினை அந்நாடு நிறுத்த முடிவு செய்துள்ளது.
- தற்போது அமலில் உள்ள "கஃபாலா" அமைப்புக்கு பதிலாக அதிக நெகிழ்வுத்தன்மையுள்ள மற்றும் கூடுதல் பாதுகாப்பு அளிக்கும் புதிய ஒப்பந்த அடிப்படையிலான சட்டம் கொண்டுவரப்படும் கத்தார் அரசு தெரிவித்துள்ளது.

- முன்னதாக, வரவிருக்கும் 2022 கால்பந்து உலக கோப்பைக்கு தயாராகும் வகையில் பல்லாயிரக்கணக்கான வெளிநாட்டு கட்டட தொழிலாளர்களை தங்கள் நாட்டுக்கு கத்தார் அரசு வரவழைத்தது.

- இவர்களில் பலர் தங்கள் பணியிடங்களில் நிலவிய மோசமான சூழல்களால் இறந்துவிட்டதாக மனித உரிமை குழுக்கள் தெரிவித்திருந்தன.
- இந்நிலையில், இது தொடர்பாக ஒரு புதிய சட்டம் கொண்டு வரப்படுவதாக கத்தார் அரசு தெரிவித்துள்ளது.

**49) வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க, 161 நாடுகளுக்கு ஈ-டூரிஸ்டு விசா சேவை நீட்டிக்கப்பட்டுள்ளதாக சுற்றுலா துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.**

- இந்திய சுற்றுலாத் தளங்களுக்கு வரும் வெளிநாட்டு பயணிகளின் வருகை, அரசுக்கு அதிக லாபத்தை ஈட்டித்தருகிறது. இதனை அதிகரிக்கும் நோக்கில் கடந்த 2014 ஆம் ஆண்டு இணைய சேவை மூலமாக சுற்றுலா விசா வழங்க, மத்திய அரசு சட்டம் நிறைவேற்றியது.
- தற்போது இந்த ஈ-டூரிஸ்டு விசா சேவையை 161 நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக நீட்டிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் இந்திய அரசுக்கு சுற்றூலா மூலமாகக் கிடைக்கும் வருவாய் 168 சதவிகிதம் அதிகரித்துள்ளதாக மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் மகேஷ் ஷர்மா தெரிவித்துள்ளார்.

**50) அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள குப்பெர்டினோ நகர மேயராக இந்திய - அமெரிக்கப் பெண்ணான சவிதா வைத்தியநாதன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.**

- குபெர்ட்டினோ நகரத்தில் கம்ப்யூட்டர் தயாரிப்பில் மிகவும் பிரபலமான 'ஆப்பிள்' நிறுவனம் அமைந்துள்ளது. இந்த நகரில் வாழும் அனைவரும் கல்வியறிவில் சிறந்து விளங்கி வருவதாக 'போர்ப்ஸ்' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. இந்நகரில் சுமார் 20 ஆண்டுகளாக வசித்து வருபவர் சவிதா வைத்தியநாதன். இந்தியப் பெண்ணான இவர், எம்.பி.ஏ. பட்டதாரி. ஆரம்பத்தில் கணித ஆசிரியையாக இங்குள்ள பள்ளியில் பணியாற்றினார். பின்னர், தனியார் வங்கியில் பணியாற்றியதுடன் பல்வேறு சமூகச்சேவைகளிலும் ஈடுபட்டு வந்தார்.
- இந்நிலையில், குபெர்ட்டினோ நகர மேயர் பதவிக்கு நடைபெற்ற தேர்தலில் அங்குள்ள மக்களின் அமோக ஆதரவை பெற்ற சவிதா, சமீபத்தில் மேயராக பதவியேற்று கொண்டார்.

**51) இந்தியாவின் முதல் தீவு மாவட்டமான மஜூலியை 2020க்குள் கார்பன் சமநிலை மாவட்டமாக உருவாக்க , அஸ்ஸாம் மாநில அரசு முடிவு செய்துள்ளது.**

**52) ஐ.எஸ். எல். எனப்படும் இந்தியன் பிரிமியர் லீக் தொடரின் 3வது ஆண்டு போட்டிகளின் இறுதி ஆட்டத்தில் கொல்கத்தா அணி கேரளாவை வீழ்த்தி இரண்டாவது முறையாக சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.**

- ஏற்கெனவே முதலாமாண்டு போட்டியிலும் கொல்கத்தா அணி கேரளா அணியை வீழ்த்தி பட்டம் வென்றுள்ளது. கடந்த ஆண்டில் சென்னை அணி சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.

**53) லக்னோவில் நடைபெற்ற 11வது ஜூனியர் உலகக் கோப்பை ஹாக்கி தொடரின் இறுதி ஆட்டத்தில் இந்தியா பெல்ஜியத்தை வீழ்த்தி இரண்டாவது முறையாக சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.**

- ஏற்கெனவே 2001ல் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற தொடரில் இந்தியா சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.

- போட்டியை நடத்திய நாடு கோப்பையை வெல்வது இதுதான் முதன்முறை.

- ஜெர்மனி 6 முறை (1982, 85, 89, 93, 2009, 2013) கோப்பை வென்று உள்ளது. ஆஸ்திரேலியா (1997), பாகிஸ்தான் (1979), அர்ஜென்டினா (2005) அணிகள் தலா ஒரு முறை கோப்பை வென்றுள்ளன.

- மூன்றாவது இடத்துக்கான போட்டியில் ஜெர்மனி, ஆஸ்திரேலியா அணிகள் மோதின. இதில் ஜெர்மனி அணி, 3வது முறையாக (1997, 2001, 2016) வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றியது.

**54) தொழில்முறை குத்துச்சண்டையில் தொடர்ந்து 7 ஆட்டங்களில் வெற்றி பெற்று ஆசிய பசிபிக் சூப்பர் மிடில் வெயிட் சாம்பின்ஷிப் பட்டத்தை வசப்படுத்திய இந்திய வீரர் விஜேந்தர்சிங், டெல்லியில் நடைபெற்ற போட்டியில் முன்னாள் உலக சாம்பியன் பிரான்சிஸ் செகாவை (தான்சானியா) வீழ்த்தி 8வது தொடர் வெற்றியுடன் ஆசிய பசிபிக் சூப்பர் மிடில் வெயிட் பட்டத்தை தக்க வைத்துக் கொண்டார்.**

**55) இந்திய விமானப்படையின் அடுத்த தலைமை தளபதியாக ஏர் மார்ஷல் பீரேந்திர சிங் தனோ ( B.S. Dhanoa ) நியமிக்கப்பட்டுள்ளார்.**

- தற்போதைய தலைமை தளபதி ஏர் மார்ஷல் அரூப் ராகா டிசம்பர் 31ல் ஓய்வு பெறுகிறார்.

**56) இந்திய ராணுவத்தின் 26வது தலைமை தளபதியாக லெப்டினண்ட் ஜெனரல் பிபின் ராவத் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.**

- தற்போதைய தலைமை தளபதி தல்பீர் சிங் டிசம்பர் இறுதியில் ஓய்வு பெறவுள்ளார்.

**57) சிந்து நதி நீர் ஒப்பந்தத்தில் [ Indus Water Treaty (IWT) ] உள்ள வேறுபாடுகள் பற்றி சீராய்வு செய்வதற்கன குழுவை மத்திய அரசு நியமனம் செய்துள்ளது.**

- குழு தலைவர் -- பிரதமரின் முதன்மை செயலாளர் நிருபேந்திர மிஸ்ரா

**உறுப்பினர்கள் :-**

1) தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல்.
2) வெளியுறவுத்துறை செயலாளர் ஜெய்சங்கர்.
3) நிதி , சுற்றுச்சூழல் , நீர் வளம் , மின்சாரம் ஆகிய துறைகளின் முதன்மை செயலாளர்கள்.

- இந்தியாவின் முதல் பிரதமரான நேரு, பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் அயூப் கான் தலைமையில் சிந்து நதி நீர் பங்கீடு ஒப்பந்தம் கடந்த 1960-ம் ஆண்டு கையெழுத்தானது. அதன்படி இந்தியாவில் இருந்து பாயும் ஜீலம், செனாப், சட்லெஜ், சிந்து, பீஸ் மற்றும் ராவி ஆகிய ஆறு நதிகள் இணைக்கப்பட்டு அதில் இருந்து 80 சதவீத நீர் பாகிஸ்தானுக்கு பகிர்ந்து அளிக்கப்படுகிறது. எஞ்சிய 20 சதவீத நீரை மட்டுமே இந்தியா பயன்படுத்திக் கொள்கிறது.

**58) Standing On An Apple Box.**

எழுதியவர் -- ஐஸ்வர்யா தனுஷ்

59) " **ரா** " [ RAW - Research And Analysis Wing ] **எனப்படும் உளவு அமைப்பின் தலைவராக அனில் தஸ்மானா** ( Anil Dasmana ) **நியமனம் செய்யப்பட்டுள்ளார்**.

- ஐ.பி.எனப்படும் ( Intelligence Bureau - IB) உளவு அமைப்பின் தலைவராக ராஜிவ் ஜெயின் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

- RAW - வெளிநாடுகளை உளவு பார்க்கும் அமைப்பு.

- IB - இந்தியாவிற்குள்ளே செயல்படும் பயங்கரவாதிகளை / சமூக செயல்பாடுகளை உளவு பார்க்கும் அமைப்பு.

60) **ஹைதராபாத்தில் உள்ள ராஜிவ்காந்தி சர்வதேச விமான நிலையம் , ஆசியா பசுபிக் பிராந்திய அளவில் [ carbon neutral status ] கார்பன் சமநிலை தகுதி பெற்ற விமான நிலையம் என்ற சிறப்பை பெற்றுள்ளது.**

- ஏற்கனவே புதுடெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம் செப்டம்பர் 2016ல் இதே சிறப்பை அடைந்துள்ளது.

61) **அமைதி, ஆயுதங்களை கைவிடச் செய்யும் நடவடிக்கை மற்றும் வளர்ச்சி ஆகியவற்றில் சிறப்பான பங்காற்றியோருக்கு இந்திரா காந்தி நினைவு அறக்கட்டளை சார்பில், ஆண்டுதோறும் விருது வழங்கப்பட்டு வருகிறது.**

- 2015-ம் ஆண்டுக்கான இந்திரா காந்தி அமைதி விருது அகதிகளுக்கான ஐநா ஆணையத்திதிற்கு வழங்கப்பட்டுள்ளது.
- ஐ.நா. அகதிகள் ஆணையர் சார்பில் , இந்தியா மற்றும் மாலத்தீவுகள் அகதிகளுக்கான ஐ.நா. ஆணைய அதிகாரி யாசுகோ ஷிமிஸு பெற்றுக் கொண்டுள்ளார்.
- ஜெய்ப்பூர் ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்ட கோப்பை, பாராட்டு பத்திரம் ஆகிய வற்றுடன், ரூ. 1 கோடி பணமும் இவ்விருதில் அடங்கும்.
- இந்த விருது காங்கிரஸ் கட்சியின் சார்பில் வழங்கப்படுகிறது.

62) **இந்தியாவிலேயே முதலாவதாக மூன்றாம் பாலினத்தவர்களுக்கான பிரத்யோக பள்ளி டிசம்பர் 30ல் கொச்சியில் துவங்க உள்ளது.**

பள்ளியின் பெயர் --- Sahaj International School , Kochi.

63) **குஜராத் மாநில அரசு ஹூக்கா புகைப்பான் கூடங்களுக்கு தடை விதித்துள்ளது.**

64) **ஐ.நா. பொதுச்சபையின் துணை பொதுச்செயலாளராக நைஜீரியா நாட்டின் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அமினா முகமது (Amina Mohammed ) தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**

65) **யுனொஸ்கோ அமைப்பு , பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரை உலக பாரம்பரிய சின்னமாக அறிவித்துள்ளது.**

**66) தென் அமெரிக்க நாடான வெனிசுலா நாட்டின் பணத்தாள் " 100 பொலிவார் " செல்லாது என அந்நாட்டின் அதிபர் நிகோலஸ் மதுரோ அறிவித்துள்ளார்.**

**67) Neemrana Conference 2016.**

- புதுடெல்லியில் 2016-ம் ஆண்டிற்கான நீம்ரானா மாநாடு நடைபெற்றுள்ளது.
- சர்வதேச அளவிலான ஆராய்ச்சியில் இருந்து, மேக்ரோ-பொருளாதாரம், வர்த்தகம், பணவியல் கொள்கை, போட்டி, உற்பத்தித் திறன் மற்றும் ஆற்றல் குறித்து யோசனைகள் முன் வைக்கப்பட்டது.
- பிரதமர் மோடி மற்றும் மத்திய நிதி மற்றும் நிறுவன விவகாரங்கள் துறை மந்திரி அருண் ஜெட்லி மற்றும் முக்கிய பிரமுகர்கள் பலரும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**68) குஜராத்தின் அகமதாபாத்தில் உள்ள மோதேராவில் சர்தார் படேல் கிரிக்கெட் மைதானம் உள்ளது. இந்த மைதானம் சுமார் 49 ஆயிரம் பேர் அமரும் வசதி கொண்டது.**

- இந்த மைதானத்தை தகர்த்து விட்டு 1 லட்சத்து 10 ஆயிரம் பேர் அமரும் வகையில் அதிநவீன வசதிகளுடன் கூடிய கிரிக்கெட் மைதானத்தை உருவாக்க முடிவு செய்துள்ளனர்.
- இதுவரை உலகிலேயே பெரிய மைதானம் ஆஸ்திரேலியாவில் உள்ள மெல்போர்ன் கிரிக்கெட் மைதானம்தான். இந்த மைதானத்தில் 1 லட்சத்து 24 பேர் அமர்ந்து போட்டியை ரசிக்கலாம்.
- இந்த மைதானத்தை பின்னுக்கு தள்ளும் வகையிலேயே தற்போது அகமதாபாத்தில் புதிய மைதானம் உருவாக்கப்படுகிறது.

**69) திருவனந்தபுரத்தில் டிசம்பர் 9ல் துவங்கிய 21வது சர்வதேச திரைப்பட விழா டிசம்பர் 16ல் நிறைவு பெறுகிறது.**

- நம்நாட்டில் மாநில அரசு நடத்தும் ஒரே சர்வதேச திரைப்பட விழா இது மட்டுமே ஆகும். மத்திய அரசின் சார்பிலான சர்வதேச திரைப்பட விழா சமீபத்தில் கோவாவில் நடைபெற்று முடிந்துள்ளது.

**70) Most Improved Player of the Year award - 2016**

- ஒலிம்பிக்கில் வெள்ளி பதக்கம் மற்றும் சீன ஓபன் பேட்மிண்டன் கோப்பை வென்றது , உலக சூப்பர் சீரிஷ் போட்டிக்கு தகுதி பெற்றது , தரவரிசையில் 12வது இடத்தில் இருந்து 7வது இடத்துக்கு முன்னேறியது ஆகிய காரணங்களுக்காக சர்வதேச பேட்மிண்டன் அமைப்பு P.V. சிந்துவிற்கு Most Improved Player of the Year award ஐ வழங்கியுள்ளது.

**71) சர்வதேச பேட்மிண்டன் கூட்டமைப்பின் சார்பில் , சாய்னா நேவல் ( Integrity Ambassador for Clean Sports ) நேர்மையான விளையாட்டு தூதுவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.**

**72) விலங்குகள் நல ஆதரவு அமைப்பான Beta India வழங்கும் 2016ம் ஆண்டின் " தீவிர சைவ உணவாளர்கள் " விருது ( Hottest Vegetarians of 2016 ) பிரபல ஹிந்தி திரைப்பட கலைஞர்கள் ஷாகித் கபூர் மற்றும் சோனம் கபூர் ஆகியோருக்கு வழங்கப்படுகிறது.**

**73) இங்கிலாந்து விஞ்ஞானிகள் மூன்று பெற்றோர் குழந்தைகளுக்கு [ three-parent babies ] மைடோகாண்ட்ரியா மரபணு சிகிச்சை அளிக்க அனுமதித்துள்ளனர்.**

- பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் மற்றும் நிபுணர்கள் அடங்கிய தன்னிச்சையான குழு, மூன்று பெற்றோர் குழந்தை பற்றி வெளியிட்ட அறிக்கையில் கர்ப்பகால சிகிச்சைகள் அல்லது மைடோகாண்ட்ரியா மரபணு சிகிச்சைகளுக்கு முறைப்படியான நடைமுறை அங்கீகாரம் கொடுத்துள்ளனர்.

- விஞ்ஞானிகள் குழு இந்த நடைமுறையை எச்சரிக்கையுடன் மறுஆய்வு செய்து mitochondrial gene therapy(MGT) மூலம் எதிர்கால தலைமுறையினரிடம் குறிப்பிட்ட மரபணு நோய்கள் வராமல் தடுக்க வழிவகுக்கிறது. எனவே, அதிகாரபூர்வமாக நாடுகள் இம்முறையின் நடைமுறைகளை அறிமுகப்படுத்தவேண்டும்.

- பிப்ரவரி 2016க்கு முன்னரே, பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் மூன்று பெற்றோர் குழந்தை முறையின் கர்ப்பகால சிகிச்சை மற்றும் MGT நடைமுறைகளை சட்டப்பூர்வமாக்க வாக்களித்தனர்.

- மூன்று பேர்களின் டிஎன்ஏவில் இருந்து செயற்கையாக குழந்தைகள் உருவாக்கும் முறையை சட்டப்பூர்வமாக்கிய உலகின் முதல் நாடு இங்கிலாந்து.

- ஏப்ரல் 2016 இல் மெக்ஸிக்கோவில் உலகின் முதல் மூன்று பெற்றோர் குழந்தை பிறந்துள்ளது. ஜோர்டான் நாட்டை சார்ந்த ஜோடிக்கு மூன்று பேரின் டிஎன்ஏவை கொண்டு புதிய வளத்தை நுட்பம் உதவியுடன் கரு உருவாக்கப்பட்டது.

### 74] விசாவை எளிமைபடுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல்

- மத்திய அமைச்சரவை இந்தியாவில் இருக்கும் விசா வழங்கும் அமைப்புக்கு தாராளமயமாக்கல், எளிமைப்படுத்துதல் மற்றும் நியாயப்படுத்தலுக்கு ஒப்புதல் கொடுத்துள்ளது.
- விசா கொள்கையில் கூடுதல் மாற்றம் மேற்கொள்ள உள்துறை அமைச்சர் மற்றும் பல்வேறு பங்குதாரர்கள் ஆலோசனைகளுக்கு உள்துறை அமைச்சகம் அங்கீகாரத்துடன் ஒப்புதல் அளித்துள்ளது.

### முக்கிய குறிப்புகள்

- இந்த ஒப்புதல் பொருளாதார வளர்ச்சி மற்றும் வெளிநாட்டவர்கள் எளிதாக இந்தியாவில் பயணம் மேற்கொள்ள தூண்டும்.

- சுற்றுலா,வணிகம் மற்றும் மருத்துவ நோக்கங்களுக்காக வெளிநாட்டவர்கள் இந்தியாவில் நுழைவது எளிதாகும்.

### 75] மத்திய அமைச்சரவை ஜம்மு&காஷ்மீர் மற்றும் ச்ஹம்ப்(Chhamb) பகுதியில் இடம்பெயர்ந்த மக்களின் மறுவாழ்வுக்கு உதவ ஒப்புதல் அளித்துள்ளது

- மத்திய அமைச்சரவை ஆக்கிரமிப்பு பாக்கிஸ்தான் பகுதியில் இருந்து கைப்பற்றிய ஜம்மு காஷ்மீர் (POJK) மற்றும் Chhamb பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த 36.384 குடும்பங்களுக்கு 2000 கோடி ரூபாய் உதவிகள் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

- பிரதமர் அபிவிருத்தி தொகுப்பு நிதியின் கீழ் நவம்பர் ,2015 இல் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஜம்மு & காஷ்மீர் பகுதியில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு குடும்பம் ஒன்றுக்கு 5 லட்சம் ரூபாய் பண ஆதாயம் வழங்கப்படும் என அறிவித்தது.

### 76] கிகாலீ(Kigali) மாநாட்டில் இந்தியா பேச்சுவார்த்தைகளின் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட மாண்ட்ரீல் நெறிமுறைகளுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது

- சமீபத்தில் ருவாண்டா உள்ள கிகாலியில் நடைபெற்ற 28 ஆவது கூட்டத்தில் இந்தியாவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாண்ட்ரீல் நெறிமுறை தரப்பு பேச்சுவார்த்தைகளை அமல்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் கொடுத்துள்ளது.

- 2016 அக்டோபர் மாதம் நடைபெற்ற கிகாலி பேச்சுவார்த்தையின் போது HFC ரசாயனங்கள் பட்டியலை மாண்ட்ரீல் நெறிமுறைக்கு கீழ் கொண்டு வருவதை நோக்கமாக வைத்துள்ளனர்.

- சுற்றுசூழலை பாதிக்கும் குளிர்பதனங்களான ஹைட்ரோஃபுளூரோகார்பன்களால் ஏற்படும் பிரச்சனைகள் அதன் பயன்பாட்டை குறைப்பது குறித்து சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சககத்தின் (MoEFCC) வரம்பு எல்லை மற்றும் முற்றிலும் முடக்கபடும் ஆண்டுகள் பற்றிய கிகாலி பேச்சுவார்த்தைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

### முக்கிய குறிப்புகள்

- கிகாலி சந்திப்பில் இந்தியா வெற்றிகரமாக 2024 இலிருந்து 2030ம் ஆண்டிற்குள் HFC பயன்பாட்டை வரம்பு எல்லைக்குள் கொண்டு வரவும், மேலும் அடுத்தடுத்த ஆண்டுகளில் முற்றிலுமாக முடக்கவும் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறது.

- வளரும் நாடுகள் இரண்டு ஆண்டுகள் தொகுப்பு அடிப்படையில் ஒப்புக்கொண்டனர். இந்தியா பிற ஒன்பது நாடுகள் 2024, 2025, 2026 ஆண்டு வரம்பு எல்லையை கொண்டுள்ளது.

**77] டிஜிட்டல் பொருளாதாரத்தில் பணமற்ற சமூகத்தை ஊக்குவிக்க, NITI Aayog சந்திரபாபு நாயுடு தலைமையிலான குழுவை அமைத்துள்ளது.**

- டிஜிட்டல் பொருளாதாரத்தில் பணமற்ற சமூகத்தை உருவாக்க NITI Aayog ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு தலைமையிலான 13 உறுப்பினர்கள் கொண்ட குழுவை அமைத்துள்ளது.
- ஒடிசா, மத்தியப் பிரதேசம், சிக்கிம், புதுச்சேரி, மகாராஷ்டிரா முதலமைச்சர்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகள் அதன் உறுப்பினர்கள் ஆவர்.

- இது நாடு தழுவிய நிதி சேர்ப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் ஆரோக்கியமான நிதி சூழலை ஊக்குவிக்க மத்திய அரசால் அமைக்கப்பட்டது. மேலும் அடிமட்ட நிலையில் உள்ள சிறிய வணிக மக்கள், டிஜிட்டல் முறையில் பணம் செலுத்தும் அமைப்பை பின்பற்ற ஒரு ஊக்கத்தை கொடுக்கும்.

**78] இந்தியா அமெரிக்காவுடன் ரூ 5,000 கோடி மதிப்பிலான 145 M777 ரக கைபீரங்கிகளை வாங்க பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது**

- இரு அரசு ஒப்பந்தத்தின் படி government-to-government (G2G)

- வெளிநாட்டு இராணுவ விற்பனை திட்டத்தின் கீழ் $ 750 மில்லியன் மதிப்புள்ள 145 M-777 ரக அல்ட்ரா ஒளி கைபீரங்கிகளை வாங்க பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

- இது புது தில்லி இரண்டு நாள் நடைபெற்ற 15ஆம் இந்தியா-அமெரிக்க இராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்த குழு கூட்டத்தில் கையெழுத்திடப்பட்டது.

- 1980 போபர்ஸ் பீரங்கி ஊழலுக்கு பிறகு இந்தியா கையெழுத்திட்ட பீரங்கி துப்பாக்கிகள் வாங்கும் முதல் பாதுகாப்பு ஒப்பந்தம் ஆகும்.

- இது சமீபத்தில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழுவினால் (CCS) முடித்துவைக்கப்பட்டது.

**79] இஸ்ரேலிய விஞ்ஞானிகள் உலகின் முதல் நீர் அலை லேசரை உருவாக்கியுள்ளனர்**

- உலகின் முதல் 'நீர் அலை லேசரை' உருவாக்கிய இஸ்ரேல் விஞ்ஞானிகள் ஒளி மற்றும் நீர் அலைகளின் தொடர்பின் மூலம் லேசர் கற்றை வெளியேறுவதை கண்டறிந்துள்ளனர்.

- பேராசிரியர் தால் கார்மன்(Tal Carmon) தலைமையில் Technion-Israel Institute of Technology ஆராய்ச்சியாளர்கள் குழு நடத்திய ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது.

**இந்த ஆராய்ச்சியின் முக்கியத்துவம்**

- பொதுவான ஒரு லேசர் அணுக்களின் எலக்ட்ரான்கள் வெளியில் இருந்து உறிஞ்சப்படும் ஆற்றல் மூலம் "கிளர்ச்சியடைந்து" லேசர் ஒளி வடிவில் கதிர்களை உமிழ்கின்றன. இந்த முறையில் தான் உருவாக்க முடியும்.

**80] 2017 இல் TeamIndus இந்தியாவின் முதல் தனியார் சந்திரப்பயணம் திட்டத்தை தொடங்க உள்ளது**

- TeamIndus, ஸ்டார்ட் அப் எனப்படும் புதிதாய் தொடங்கப்பட்ட ஒரு தனியார் விண்வெளி நிறுவனம், டிசம்பர் 28,2017 அன்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் (இஸ்ரோ) மூலம் சந்திர மண்டலத்திற்கு விண்கலம் அனுப்ப திட்டமிட்டுள்ளது.

- இது இந்தியாவின் முதல் தனியார் சந்திரப்பயணமாக இருக்கும். இஸ்ரோவின் மிகுந்த பயன்மிக்க பி.எஸ்.எல்.வியை(PSLV) ராக்கெட் மூலம் செலுத்தப்படுகிறது.

## முக்கிய குறிப்புகள்

- TeamIndus சந்திரப்பயணத்தின் நோக்கம் நிலவில் இந்த விண்கலம் நிலை நிறுத்துவதாகும். இது குறைந்தது 500 மீட்டர் நிலவில் பயணம் செய்து உயர் தொழில்நுட்ப படங்கள், வீடியோ கட்சிகள் மற்றும் தரவுகளை சேகரித்துவிட்டு திரும்பும்.

- ராக்கெட் தொழில்நுட்பம் தவிர, தரையிறங்குதல் மற்றும் ரோவர் இயந்திரத்திற்கான சக்தி என்று தொழில்நுட்பத்தின் அனைத்து பிரிவுகளும் TeamIndus தனது நிறுவனத்தின் மூலம் மேம்படுத்தியுள்ளது.

- விண்கலத்தை ஏவும் நோக்கத்திற்காக மட்டுமே இஸ்ரோ வணிக நிறுவனமான Antrix உடன் ஒப்பந்தம் கை கையெழுத்திட்டுள்ளது.

### 81] 51வது எழுச்சி ஆண்டு நிறைவை கொண்டாடியது (BSF)

- உலகின் மிகப்பெரிய எல்லை பாதுகாக்கும் படை(BSF) அதன் 51வது எழுச்சி ஆண்டு நிறைவை கொண்டாடியது.

- எழுச்சி நாள் கொண்டாட்டங்களின் போது வீரர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு முகாமில் பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

- மதிப்புமிக்க "மஹாராணா பிரதாப் Trophy- 2016" விருதை மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் BSF பஞ்சாப் எல்லையில் வழங்கினார்.

### 82] டெல்லி உயர்நீதிமன்றம் அதிக வீரியம்மிக்க கலப்பு மருந்துகளுக்கு நேரடியாக தடை விதித்துள்ளது

- தில்லி உயர் நீதிமன்றம் மத்திய அரசின் மூலம் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு அபாயங்களை ஏற்படுத்தும் சாத்தியக்கூறு கொண்ட 344 நிலையான வீரிய கலவை (FDC)மருந்துகளுக்கு தடை விதித்துள்ளது.

- உயர்நீதிமன்றம் வரம்பை மீறிய முறையில் நடந்து கொள்ளவில்லை என்றும், தடை அறிவிப்பு வெளியிடுவதற்கு முன்னரே மருந்துகள் மற்றும் அழகுசாதன பொருட்கள் சட்டத்தின் கீழ் சட்டரீதியான ஆலோசனை எடுக்கப்பட்டது என தெரிவித்துள்ளது.

- இந்த தடையானது Kokate குழு பரிந்துரைகளின் அடிப்படையில் நடைமுறைபடுத்தப்படுகிறது.

- இந்த மருந்துகள் அதிக நச்சுத் தன்மை காரணமாக நுண்ணுயிர் எதிர்ப்பிற்கு தடையை ஏற்படுத்தும். அதனால் உறுப்பு-செயலிழப்பு ஏற்படும் என்ற அச்சம் காரணமாக தடைவிதிக்கப்பட்டது.

**83] தில்லியில் காற்று மாசடைதலை சமாளிக்க மத்திய அரசின் தரப்படுத்தப்பட்ட செயல்பாட்டு முறைக்கு உச்ச நீதிமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.**

- உச்ச நீதிமன்றம் தில்லி பகுதியில் காற்று மாசுபாட்டின் பல்வேறு நிலைகளை சமாளிக்க மத்திய அரசின் தரப்படுத்தப்பட்ட செயல்பாட்டு திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது

- மேலும் உச்சநீதிமன்றம் மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்திடம்(CPCB) அதன் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மற்றும் தில்லியில் கூடுதல் கண்காணிப்பு நிலையங்கள் அமைக்க கேட்டுக் கொண்டுள்ளது.

## தரப்படுத்தப்பட்ட செயல்பாட்டு திட்டம்

- சுற்றுச்சூழல் மாசுகட்டுப்பாடு மற்றும் தடுப்பு ஆணையத்தின் (EPCA) உத்தரவின் கீழ் செயல் திட்ட அமலாக்கம் இருக்கும். மற்ற அனைத்து அதிகாரிகளும் திட்ட நோக்கத்திற்கு உதவிட செயல்பட வேண்டும்.

**84] ரஷிய விஞ்ஞானிகள் மின்சாரத்தை பயன்படுத்தி அணுசக்தி எரிபொருள் தயாரிக்கும் மலிவான வழியை உருவாக்கியுள்ளனர்.**

- ரஷ்யாவில் விஞ்ஞானிகள் மின்சாரத்தை பயன்படுத்தி உயர்தரமான அணுசக்தி எரிபொருளை குறைந்த செலவில் உருவாக்கும் தனிப்பட்ட உற்பத்தி

முறையை கண்டறிந்துள்ளனர். இது நவீனப்படுத்தப்பட்ட தூள் உலோக(powder metallurgy) முறையின் மாற்று அடிப்படை செயல்முறையாகும். மேலும் மின்சார துடிப்பின் மூலம் அதிக அழுத்தத்தில் வெப்பப்படுத்தும் போது வினையில் ஈடுபடுத்துகிறது

- அணு மின் உலையின் முக்கிய வகை எரிபொருள் யுரேனிய ஆக்சைடின் கலவை ஆகும்.

- அழுத்தம் மற்றும் கட்டுப்பாட்டு வெப்பமூட்டல் (வெப்பமூட்டுவதன் மூலம் ஒரு திட அல்லது நுண்ணிய துகள்களாக மாறுவதை தடுத்து நிறுத்த முடியும்) முறையில் துகள்கள் தரம் மற்றும் அளவுவை பொறுத்து ஆற்றல் தயாரிக்கப்படுகிறது.

### 85] Mercosur அமைப்பின் உறுப்பினர் அந்தஸ்தில் இருந்து வெனிசுலா விலக்கப்பட்டது

- தென் அமெரிக்க பொருளாதார கூட்டமைப்பானது ஜனநாயக உரிமைகளை மீறியதற்காக மற்றும் அதன் அடிப்படை தரத்தை சந்திக்க தவறியதற்காக வெனிசுலாவை மெர்கோசூரில் இருந்து தற்காலிகமாக விலக்கி வைத்துள்ளது.

- மெர்கோசூரில் அர்ஜென்டினா, பிரேசில், உருகுவே, பராகுவே ஆகிய நான்கு உறுப்பினர்களின் வெளியுறவு மந்திரிகளால் உறுப்பினர் அந்தஸ்து ரத்து செய்யப்பட்டது.

### ஏன் வெனிசுலா இடைநீக்கம் செய்யப்பட்டது?

- 2012ல் குழுவில் சேர்ந்த போது அதற்கு கொடுக்கப்பட்ட பொறுப்புகளை செய்ய தவறியுள்ளது. மேலும் டிசம்பர் 1,2016க்குள் நடைமுறைபடுத்த வேண்டிய குறிப்பிட்ட தர விதிமுறைகளை செயல்படுத்துவதில் தோல்வியடைந்துள்ளது.

### 86] லடாக்கில் வரலாற்றுக்கு முந்தைய கால வாழிடம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

- இந்திய தொல்லியல் ஆய்வுத்துறை (ASI) சாஸர் லா அருகே நூப்ரா பள்ளத்தாக்கு, லடாக் பகுதியில் 4,200 மீட்டர் உயரத்தில் வரலாற்றுக்கு முந்தைய மனிதன் பயன்படுத்திய ஒரு பண்டைய வாழிடம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- இது பண்டைய காலத்தில் மனிதன் வேட்டையாடி உணவு சேகரித்து ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு இடம்பெயரும் முன்னர் தற்காலிகமாக தங்கி செல்லும் இடமாகும்.

- இந்த இடம் கரகோரம் கணவாய் வழிக்கு செல்லும் சாஸர் லா பகுதியில் அமைந்துள்ளது.

- தேவையான போது தங்க மட்டுமே இது உபயோகபடுத்தப்பட்டது நிரந்தரமாக தங்க பயன்படுத்தப்படவில்லை

### 87] பொது நிதி மேலாண்மை அமைப்பு அரசின் வட்டி செலவுகளை பாதுகாக்கிறது

- பொது நிதி மேலாண்மை அமைப்பு (PFMS) முழு அளவில் செயல்படுத்தப்பட்ட பிறகு வட்டி செலவுகளை பாதுகாக்க மத்திய அரசு கணிசமான அளவு உதவும்.

- செயல்படாத நிலையில் 1 கோடிக்கு மேல் பணம் கொண்ட வெவ்வேறு தரப்பினரை கண்காணிக்க அரசிற்கு அனுமதி அளிக்கும்.

- அரசானது ஒரு முறை PFMS மூலம் இந்த நிதியை அனுகிவிட்டால், அது கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை.

- அரசு அடுத்த நிதி ஆண்டில் இருந்து நடைமுறைபடுத்த திட்டமிட்டுள்ளது.

- ஏப்ரல் 2017 சரக்கு மற்றும் சேவைகள் வரி (ஜிஎஸ்டி) உடன் சேர்த்து ஜிஎஸ்டி நெட்வொர்க் மூலம் ஒருங்கிணைக்கப்படும்.

### 88] அசாமின் Hailakandi மாவட்டம் பணமில்லா பரிமாற்ற முறையில் ஊதியம் வழங்கும் முதல் மாவட்டமாகும்

- அசாம் Hailakandi மாவட்டம் தேயிலை தோட்டத்தில் தொழிலாளர்களுக்கு தனிப்பட்ட வங்கிக் கணக்குகள் மூலம் ஊதியம் வழங்கும் முதல் மாவட்டமாகும்.

- தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊதியத்தை பணமில்லா பரிமாற்ற முறை மூலம் செலுத்த டிசம்பர் 15, 2016க்குள் மாநில அரசால் விதிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் நிறைவேற்றியுள்ளது.

முக்கிய குறிப்புகள்

- Burnie Braes தேயிலை எஸ்டேட் குறைந்தது 504 தொழிலாளர்களுக்கு வங்கி கணக்குகள் மூலம் சம்பளம் வழங்கியுள்ளது.
- பணபரிமாற்றமானது அசாம் கிராமின் Vikash வங்கியின் ஐந்து வங்கி நிர்வாகங்கள் (CSPs) மூலம் மேற்கொள்ளப்பட்டது.

## 89] CERT-In மைக்ரோ-ஏடிஎம்களில் மால்வேர் தாக்குதல் அபாயம் உள்ளதாக எச்சரித்துள்ளது

- சைபர் பாதுகாப்பு நிறுவனமானது வங்கியாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு மைக்ரோ ATM மற்றும் (POS)கருவிகள் மூலம் மால்வேர் தாக்குதல் ஏற்படும் அபாயம் உள்ளதாக எச்சரித்துள்ளது.
- உயர் ரூபாய் நோட்டுகள் செல்லாது என அறிவிக்கப்பட்ட பின்னர் POS கருவிகள் மற்றும் மைக்ரோ ATM கவுண்டர்களின் பயன்பாடு எழுச்சியடைந்து வருகிறது.
- மேலும் உயர் தொழில்நுட்ப குறியீடுகளை ஏற்குமாறு நடைமுறைபடுத்த கேட்டுக் கொண்டுள்ளப்பட்டுள்ளது.

## 90] Stanpan Suraksha' செயலியானது தாய்ப்பால் ஊட்டத்தை ஊக்குவிக்க தொடங்கப்பட்டுள்ளது

- பழங்குடியினர் விவகாரத்துறை அமைச்சர் Jual oram "பொருத்தமற்ற" உணவு பொருட்களை குழந்தைகளுக்கு அளிப்பதை தடுத்து தாய்ப்பால் ஊட்டத்தை ஊக்குவிக்க 'Stanpan சுரக்ஷா' மொபைல் செயலியை தொடங்கியுள்ளார்.
- மொபைல் செயலியானது இந்திய தாய்ப்பால் ஊட்ட ஊக்குவிப்பு வலையத்தின் Breastfeeding Promotion Network of India (BPNI)மூலம் உருவாக்கப்பட்டது.

**முக்கிய குறிப்புகள்**

- Stanpan Suraksha' ஆனது தாய்ப்பால் ஊட்டம் மற்றும் குழந்தை உணவூட்ட முறையை ஊக்குவிக்கும் முதல் வகையான பயன்பாட்டு செயலியாகும்.
- எந்தவொரு நபரும் இந்த செயலியை பயன்படுத்தி அவர்களை சுற்றி நடக்கும் பொருத்தமற்ற குழந்தை உணவூட்ட முறை அதோடு தொடர்புடைய உபகரணங்களை புகைப்படம் எடுத்து BPNIக்கு அதை அனுப்ப முடியும்.

### 91] இந்தியா $300 பில்லியன் இலக்கை தாண்டியது

- ஏப்ரல் 2000 முதல் செப்டம்பர் 2016க்கு இடைப்பட்ட காலகட்டத்தில் இந்திய **$300** மதிப்பிற்கு மேல் அந்நிய நேரடி முதலீட்டை பெற்றுள்ளது. ஒட்டுமொத்த அந்நிய நேரடி முதலீடானது $310.26 பில்லியனை அடைந்துள்ளது.
- இது உலகத்திலயே பாதுகாப்பான முதலீட்டிற்கு சான்றாக விளங்குகிறது.
- 33% அந்நிய முதலீடானது மொரிசியஸ் பாதையின் வழியாக கிடைத்துள்ளது.
- ஏப்ரல் 2000 முதல் செப்டம்பர் 2016க்கு இடைப்பட்ட காலகட்டத்தில் $101.76 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான முதலீடு மொரிசியசில் இருந்து பெறப்பட்டுள்ளது.

### 92] அமேசான் நிறுவனமானது 'Launchpad' என்ற உலகளாவிய தொடக்க நிகழ்ச்சியை இந்தியாவில் வெளியிட்டது.

- மின்-வணிக நிறுவனமான அமேசான் **'Launchpad'** என்ற உலகளாவிய தொடக்க நிகழ்ச்சியை இந்தியாவில் வெளியிட்டது. இதன் மூலம் புதிதாக தொடங்கப்பட்ட நிறுவனங்கள்(startups) தங்களது பொருட்களை வெளிநாடுகளிலும் விற்பனை செய்ய முடியும்.
- இதற்காக அமேசான் நிறுவனமானது தொழில்கொள்கை மற்றும் மேம்பாட்டு துறையிடமும் Department of Industrial Policy and Promotion (DIPP), நாஸ்காம் (NASSCOM) உடனும் இணைந்துள்ளது.
- மேலும் நிதி ஆயோக் NITI ayog உடன் சேர்ந்து நாஸ்காமில் உள்ள 10000 ஸ்டார்ட்அப் உடனும் மற்றும் இந்தியன் ஏஞ்சல் நெட்வொர்க் Indian Angel Network (IAN) உடனும் இணைந்துள்ளது. இதற்காக தெலுங்கானா அரசும் உதவும்.

### 93] ஆராய்ச்சியாளர்கள் புதிய மருந்துகளை உருவாக்க தனித்துவமான வழியை கண்டுபிடித்துள்ளனர்.

- மரபு பொறியியலுக்கான சர்வதேச அமைப்பு மற்றும் உயிரி பொறியியல் துறை, டெல்லியை சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் புதிய மருந்துகளை உருவாக்குவதற்கான தனித்த வழிமுறைகளையும் அதன் சாத்திய கூறுகளையும் கண்டறிந்துள்ளனர்.

- இந்த வழிமுறை மற்றும் இதில் உருவாக்கப்படும் மருந்துகள் குறிப்பாக ஒட்டுண்ணிகளை எதிர்க்க பயன்படும். அதாவது பல நோய்களை உருவாக்கும் நாடா புழு nematode (roundworm) மற்றும் தட்டை புழு platyhelminths (flatworm) போன்றவற்றை எதிர்க்கும்.

**ஏன் இந்த ஒட்டுண்ணிகள் ஆபத்தானவை?**

- இது குறிப்பாக ஆப்ரிக்கா நாடுகளில் மிக பெரிய அளவிலான உடல்நல கோளாறுகளை ஏற்படுத்துகின்றன.

**இது எப்படி கண்டுபிடிக்கப்பட்டது?**

- ஆராய்ச்சியாளர்கள் மூலக்கூறுகளை பிரிப்பதற்கு பதிலாக முதலில் Aminoacyl-tRNAவை இணைத்தனர். இந்த முறை அதிக செலவு மிகுந்தது மேலும் அதிக காலம் எடுத்து கொள்ளும்.

### 94] வியட்நாமின் சுக்ஹோய்-30 (Sukhoi-30) ரக போர் விமானத்தின் விமானிகளுக்கு இந்தியா பயிற்சியளிக்கிறது

- இரு நாடுகளுக்கு இடையேயான பாதுகாப்பை அதிகரிக்க சுக்ஹோய்-30 (**Sukhoi-30**) ரக போர் விமானத்தின் விமானிகளுக்கு இந்தியா பயிற்சியளிக்கிறது.

### 95] DTAB ஆனது மருந்துகளுக்கு ஒரு முறை உரிமம் பெறுதல் பற்றி அறிவுறுத்தியுள்ளது.

- சமீபத்தில் மருந்து தொழில்நுட்ப ஆலோசனை வாரியமானது Drugs Technical Advisory Board (DTAB) மருந்து உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பவர்களுக்கு ஒரு முறை உரிமம் பெறும் முறையை பரிந்துரை செய்துள்ளது.

- இந்த பரிந்துரை ஏற்றுகொள்ளப்பட்டால் நடைமுறையில் உள்ள ஒவ்வொரு மருந்து உருவாக்கத்தின் போதும் உரிமம் பெறும் முறை மாறும். மேலும் இது மாநிலங்களில் ஏற்றுக்கொள்ள மூன்று ஆண்டுகளாவது ஆகும்.

- இந்த புதிய கட்டுப்பாட்டின் மூலம் ஆபத்து அதிகமாகும் போது ஆண்டிற்கு ஒரு முறையாவது சோதனை அவசியமாக்கப்படும்.

**பரிந்துரைகள்:-**

- உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் விநியோகிபாளர்கள் என அனைவருக்கும் தனித்தனியே விதிமுறைகள் வகுக்க வேண்டும்.

- ஐரோப்பிய ஒன்றிய மாதிரியை European Union's model பரிந்துரைக்க வேண்டும்.

- காய்ச்சல் மருந்துகளான Oseltamivir மற்றும் Zanamavirயை H1 வகையின் கீழ் அட்டவணைபடுத்தி அனைத்து மருந்தகங்களிலும் கிடைக்க செய்ய வேண்டும்.

### 96] 2016-17 ஆண்டிற்கான குளிர் மூடுபனி திட்டத்தை MoES தொடங்கியுள்ளது

- புவிஅறிவியல் அமைச்சகமானது Union Ministry of Earth Sciences (MoES) நாட்டின் வட பகுதியில் உள்ள மூடு பனியினை பற்றி ஆராய குளிர் மூடுபனி திட்டத்தை Winter Fog Experiment (WIFEX 2016-17) தொடங்கியுள்ளது.

- இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம், டெல்லியில் மேற்கொள்ளப்பட்ட தரை சார்ந்த அளவீடுகள் மூலம், மூடு பனியின் பல்வேறுவிதமான இயற்பியல் மற்றும் வேதியியல் தன்மைகளை கண்டறிந்துள்ளனர்.

### இந்தியாவில் மூடுபனியால் ஏற்படும் பிரச்சனைகள் என்ன?

- இது கண்ணுக்கு தெரியக்கூடிய நிறை கொண்ட நீர் துளிகளால் தரையை ஒட்டி உருவாகும் மேகம் போன்ற தோற்றமாகும்.

- இந்தியாவில் அதிக அளவிலான பனிபொழிவு நாட்டின் வாட பகுதியில் நிகழ்கிறது இது காலநிலைகளையும், சாலை போக்குவரத்தையும், விமான போக்குவரத்தையும், பொருளாதாரத்தையும் மற்றும் மக்களையும் பாதிக்கிறது

### 97] BRICS நாடுகள் வரி ஏய்ப்பை தடுக்க தானாகவே வரி தொடர்பான தகவல்களை தெரிவிக்க முன்வந்துள்ளன

- பிரிக்ஸ் உறுபினர்களான பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆப்ரிக்கா நாடுகள் உலகளாவிய வரி அமைப்பிற்கு நேர்மையுடன் செயல்பட வரி தொடர்பான தகவல்களை தானாகவே தெரிவிக்க சம்மதித்துள்ளன.

- இந்த முடிவானது மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் நடைபெற்ற பிரிக்ஸ் வருவாய்துறை தலைவர்களுக்கான சந்திப்பில் எடுக்கப்பட்டது.

## முக்கிய குறிப்புகள்

- அடிப்படை சுரண்டல் மற்றும் இலாபங்களை மாற்றுதலை தடுக்க உறுதி அளித்துள்ளன. மேலும் வரி தொடர்பான தகவல் பரிமாற்றத்திற்கும், வளரும் நாடுகளின் திறனை மேம்படுத்தவும் சம்மதித்துள்ளன.

- உறுப்பு நாடுகளின் அடிப்படை சுரண்டல் மற்றும் இலாபங்களை மாற்றுதலை நீக்குவதன் மூலம் வரிகளினால் கிடைக்கும் லாபம் அதிகார வரம்பிற்குள் இருக்கும் இதனால் புதிய மதிப்பு உருவாகும்.

## 98] ஆன்லைனில் பாதுகாப்பு மீறப்படுவதற்கு வங்கிகளே பொறுப்பேற்க வேண்டும்: RBI

- அங்கீகரிக்கப்பட்ட அட்டை இணையத்தில் card network ஆன்லைன் மூலம் பாதுகாப்பு மீறப்படும் போது வங்கிகளே அதற்க்கு முழு பொறுப்பேற்க வேண்டும் என RBI தெரிவித்துள்ளது.

- கார்டுகளை வங்கி விநியோகிக்கும் போது வாடிக்கையாளரின் விருப்பத்தின் அடிப்படையில் கட்டண அங்கீகார தீர்வளிக்க வேண்டும்.

- அங்கீகரிக்கப்பட்ட கார்டு நெட்வொர்க் மட்டுமே வங்கியுடன் இணைந்து அட்டை வழங்குதல் மற்றும் பெறுதலை மேற்கொள்ள வேண்டும் என RBI கூறியுள்ளது. மேலும் வாடிக்கையாளரின் ஒப்புதலை பெற்ற பின்னரே இந்த சேவையை வழங்க வேண்டுமென கூறியுள்ளது.

## 99] சார்க் நாடுகளுக்கு தேர்தல் மேலாண்மை பற்றிய பயிற்சியை IIIDEM அளிக்கிறது

- இந்தியாவின் ஜனநாயக மற்றும் தேர்தல் மேலாண்மைக்கான சர்வதேச நிறுவனம் India International Institute of Democracy and Election Management (IIIDEM) சார்க் நாடுகளுக்கு தேர்தல் மேலாண்மை பற்றிய பயிற்சியை அளிக்கிறது

- நியாயமான, அமைதியான, மற்ற தலையீடுகள் இல்லா தேர்தலை ஊக்குவிக்க இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் இந்திய வெளியுறவுதுறை அமைச்சகத்தால் இது நடத்தப்படுகிறது.

- இந்த பயிற்சியில் இலங்கை, வங்காளம், நேபால், மாலத்தீவு, பூடான் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளின் தேர்தல் நடத்தும் அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### 100] மின்னணு பரிவர்த்தனையை ஊக்குவிக்க ஆந்திர அரசு "AP Purse" என்ற மொபைல் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது

- மக்களிடையே மின்னணு பரிவர்த்தனையை ஊக்குவிக்க ஆந்திர அரசு "AP Purse" என்ற மொபைல் செயலியை அறிமுகம் செய்துள்ளது.

- உயர்மதிப்புடைய ரூபாய் நோட்டுகள் செல்லாது என அறிவிக்கப்பட்டதால் ஏற்ப்பட்ட பண நெருக்கடியை சமாளிக்க ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாய்டுவால் விஜயவாடாவில் இந்த செயலி அறிமுகம் செய்யப்பட்டது.

### முக்கிய குறிப்புகள்

- இந்த செயலியில் 13 மொபைல் பேங்கிங் வசதியும், 10 மொபைல் வல்லெட் mobile wallet வசதியும் இருக்கும்.

- இதன் மூலம் மக்கள் கட்டணங்களை பணமில்லா பரிவர்த்தனையாக மேற்கொள்ள முடியும்.

- இது தவிர 'Marpu Nestam' என்ற பெயரில் மின்னணு நிதி பற்றி மக்களிடையே கல்வியறிவை மேம்படுத்த முகவர்களை ஆந்திர அரசு நியமித்துள்ளது. அவர்களுக்கு ஊக்க தொகையை வழங்கும்

### 101] TIFR ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்பு அதிகடத்துதிறன் கோட்பாடிற்கு theory of superconductivity சவால் விடும் வகையில் உள்ளது.

- Tata Institute of Fundamental Research (TIFR)யை சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் முழுமையான குறை உலோகம் பிஸ்மத் அதிகடத்து திறனை பெறுகிறது என கண்டறிந்துள்ளனர்.

❖ மும்பையை உள்ள இறுக்கபொருண்மை இயற்பியல் மற்றும் பொருள் அறிவியல் துறையில் Department of Condensed Matter Physics and Material Sciences பணியாற்றும் டாக்டர் ராமகிருஷ்ணன் அவர்களால் ஆராய்ச்சியாளர்கள் குழு வழிநடத்தப்பட்டது.

**ஆராச்சியாளர்கள் கண்டுபிடித்தது என்ன?**

❖ பிஸ்மத் குறை உலோகத்தை 530 மைக்ரோ கெல்வின்(-273 degree C) கீழ் கொண்டு செல்லும் போது அது அதிகடத்து திறனை பெறுகிறது. கணிப்பை விட மூன்று நிலைகளில் அதிக அளவில் வெப்பத்தின் போது அதிகடத்து திறனை பெறுகிறது

**முக்கியத்துவம்**

❖ இந்த கண்டுபிடிப்பானது மரபு ரீதியாக உள்ள அதிகடத்து திறன் பற்றிய கோட்பாடான Bardeen-Cooper-Schrieffer (BCS) கோட்பாடை மீறுவதாக உள்ளது.

## 102] வேலைவாய்ப்பை உருவாக்கம் மற்றும் ஏற்றுமதி மறுசீரமைப்பை உருவாக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது

❖ உற்பத்தி துறைகளில் ஏற்றுமதி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் போன்றவற்றின் மறுசீரமைப்பிற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இதற்காக 6,006 கோடி ரூபாயை பட்ஜெட்டில் இருந்து கால வரம்பின் அடிப்படையில் ஒதுக்கியுள்ளது.

❖ இதன் முக்கிய நோக்கம் அடுத்த மூன்று ஆண்டுகளில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ 11 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்குவதாகும்.

**ஏற்கப்பட்டவை :-**

❖ உயர்தொழில்நுட்ப மேம்படுத்தப்பட்ட நிதி திட்டத்தின் enhanced Technology Upgradation Fund Scheme (TUFS) மூலம் உற்பத்தியை ஊக்கப்படுத்த 10% அதிகமான மானியம் வழங்குதல்.

- பிரதான் மந்திரி பரிதான் ரோஸ்கர் யோஜனா Pradhan Mantri Paridhan Rozgar Protsahan Yojana (PMPRPY) திட்டத்தினை உற்பத்தி துறைக்கு விரிவுபடுத்துதல்.

**103] இந்தியாவில் சுலபமாக தொழில் செய்ய மத்திய அமைச்சரவை இங்கிலாந்து உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது**

- இந்திய மற்றும் இங்கிலாந்து இடையிலேயான தொழில் புரிவதற்கான ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது

- இரு நாடுகளுக்கு இடையேயான ஒப்பந்தம் நவம்பர் 2016க்கு முன்பே அரசு முறை பயணமாக இங்கிலாந்து பிரதமர் தெரசா மே இந்தியாவிற்கு வந்த போது செய்துகொள்ளப்பட்டது

**முக்கிய குறிப்புகள்**

- இந்த ஒப்பந்தத்தின் மூலம் மேம்படுத்தப்பட்ட செயல்பாடு, தொழில்நுட்ப உதவி , சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றை மறுசீரமைத்து எளிமைபடுத்த இரு நாடுகளுக்கு இடையே அரசு தரப்பு அதிகாரிகள் பகிர்ந்துகொள்ளப்படுவார்கள்.

- இதன் பயனாளிகள் மத்திய அமைச்சர்கள் அவர்களை சார்ந்த துறைகள் மற்றும் மாநில அரசை உள்ளடக்கியதாகும்.

**104] இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தான் இடையில் அமைதியான முறையில் விண்வெளியை பயன்படுத்தி கொள்ள ஒத்துழைத்து புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.**

- அமைதியான முறையில் விண்வெளியை பயன்படுத்தி கொள்ள இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தான் இடையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது

- இந்த ஒப்பந்தமானது இரு நாடுகளுக்கு இடையிலான விண்வெளித்துறை சார்ந்த பல்வேறுவிதமான துறைகளுக்கு மேம்படுத்த ஒத்துழைப்பை வழங்கும்.

- விவசாயம், கல்வி, வானிலை முன்னறிவிப்பு, கிராமப்புற சுகாதாரம், தொலை தொடர்பு, நகர்ப்புற வளர்ச்சி, சுகாதாரம், ஊடுருவல், தொலை உணர்வு மற்றும் பல்வேறு துறைகளின் மீது பரஸ்பர பலத்தை உயர்த்தும்.

### 105] உலகின் சக்திவாய்ந்த மொழி ஆங்கிலம்: WEF

- 2016 ஆண்டிற்கான உலகின் சக்திவாய்ந்த World Power Language Index (PLI) 10 மொழிகள் குறியீட்டில் ஆங்கிலம் முதலிடம் பிடித்துள்ளது
- இந்த குறியீடு உலக பொருளாதார அமைப்பால் World Economic Forum (WEF) வெளியிடப்பட்டது. இந்திய மொழியான ஹிந்தி 10வது இடத்தை பிடித்துள்ளது.

### முக்கிய குறிப்புகள்

- உலகில் 6,000 மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. இதில் 2,000 மொழிகளை 1,000க்கும் குறைவான மக்களே பேசுகின்றனர்.
- 15 மொழிகளை மட்டும் உலகின் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் பேசுகின்றனர்.
- ஜி7 நாடுகளான(அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் கனடா) ஆகியவற்றில் ஆங்கிலம் பெரும்பான்மை மொழியாக உள்ளது.
- டாப் 10 மொழிகள் 2016: ஆங்கிலம்(1), மாண்டரின்(2 வது), பிரஞ்சு(3), ஸ்பானிஷ்(4 வது), அரபு(5 வது), ரஷியன்(6), ஜெர்மன்(7), ஜப்பனீஸ்(8), போர்த்துகீசியம்(9) மற்றும் இந்தி (10 வது).

### 106] இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த ஆண்டிற்கான ஐந்தாவது நிதி கொள்கை மறு ஆய்வில் முக்கிய விகிதங்களில் மாற்றம் இல்லை என RBI தெரிவித்துள்ளது

- 2016-17 நிதி ஆண்டில் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த ஆண்டிற்கான ஐந்தாவது நிதி கொள்கை மறு ஆய்வில் முக்கிய விகிதங்களில் மாற்றம் இல்லை என தெரிவித்துள்ளது RBI.

- ரிசர்வ் வங்கி ஆளுநர் உர்ஜித் பட்டேல் தலைமையில் 6 உறுப்பினர்கள் கொண்ட குழுவால் Monetary Policy Committee (MPC) இந்த முடிவு எடுக்கப்பட்டது.

- இந்த முடிவானது தற்போதைய இந்தியாவின் பேரியல் பொருளாதாரத்தை கருத்தில் கொண்டு எடுக்கப்பட்டது.

**வட்டி விகிதங்கள்:**

- Repo விகிதம் liquidity adjustment facility (LAF) கீழ்:சதவீதத்தில் மாற்றமில்லை 6.25

- Reverse repo rate LAF கீழ்: மாற்றமில்லை 5.75 சதவீதம்.

- Marginal standing facility (MSF) மற்றும் வங்கி விகிதம்: 6.7சதவீதத்தில் 5 மாற்றமில்லை

- அட்டவனைபடுத்தப்பட்ட வங்கியின் Reserve Ratios Cash Reserve Ratio(CRR): 4.0% நிகர தேவை மற்றும் நேர பொறுப்பில் (NDTL) மாற்றமில்லை.

- Statutory Liquidity Ratio (SLR): மாற்றமில்லை 20.75%.

### 107] மத்திய அமைச்சரவை ஊரக வளர்ச்சி அமைச்சகம் மற்றும் FAO இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது

- மத்திய அமைச்சரவை கிராமப்புற வளர்ச்சி திட்டங்களை மேம்படுத்துவதற்காக ஊரக வளர்ச்சித்துறைக்கும் மேலும் உணவு மற்றும் விவசாய அமைப்பு நிறுவனத்திற்கும்(FAO) இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

- அரசின் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது ஒருங்கிணைந்த தொழில்நுட்பம் மற்றும் தெற்கு கூட்டமைப்பின் மூலம் ஒன்றாக ஒருங்கிணைக்கப்பட்ட நடவடிக்கைகளினால் கிராமப்புறங்களில் வறுமையை குறைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

- இந்த நடவடிக்கையானது கிராமப்புற மகளீரின் பொருளாதாரத்தை மேம்பாபடுத்தவும், கிராமப்புற ஏழைகள் இயற்கை வளங்களை எளிதாக அணுகச் செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது.

**முக்கிய குறிப்புகள்**

- புரிந்துணர்வு ஒப்பந்தமானது அறிவு, அனுபவம் பகிர்வு, வருகையாளர்களின் கருத்துகள் மற்றும் உரையாடல் மூலம் இந்திய கிராமப்புற வளர்ச்சி திட்டங்களின் செயல்திறனை மேம்படுத்தி எளிதாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது.

- தீன்தயாள் அந்தியோதய யோஜனா- தேசிய ஊரக வாழ்வாதார திட்டத்தின் மூலம் தெற்கு கூட்டமைப்பின் ஒத்துழைப்பிற்கான வழிமுறைகளை இந்த ஒப்பந்தம் எளிதாக்கும்.

### 108] மத்திய அமைச்சரவை ISRO மற்றும் USGS இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது

- இஸ்ரோ மற்றும் அமெரிக்க ஐக்கிய நிலவியல் ஆய்வு அமைப்பு United States Geological Survey (USGS) இடையே கையெழுத்திடப்பட்ட அமெரிக்க நிலங்கள் பகிர்வு மற்றும் தொலையுணர்வு செயற்கைக்கோள் தரவு பரிமாற்ற ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- July 2016ல் செய்த இந்த ஒப்பந்தத்தின் மூலம் Landsat-7 மற்றும் 8ன் தரவுகளை இஸ்ரோ பெறும். அதற்கு கைமாறாக USGS ஆனது இஸ்ரோவின் Resourcesat-2வின் தரவுகளை பெறும்.

### 109] இந்தியா மற்றும் கிர்கிஸ்தான் இடையேயான விவசாய ஒத்துழைப்பு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது

- இந்தியா மற்றும் கிர்கிஸ்தான் இடையேயான விவசாயம் மற்றும் உணவுத்தொழில் சார்ந்த துறைகளில் இணைந்து செயல்பட மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- முன்மொழியப்பட்ட இந்த ஒப்பந்தமானது வேளாண்மை மற்றும் பல்வேறு இதர துறையின் நடவடிக்கைகளை உள்ளடக்கியது.

## புரிந்துணர்வின் முக்கிய விதிகள்

- இது ஆராய்ச்சி துறையின் மூலம் கால்நடை வளர்ப்பு, பறவை காய்ச்சல், விலங்குகளில் கால் மற்றும் வாய் சம்பந்தமான நோய்கள் (FMD), கால்நடை மருத்துவம் பற்றிய தகவல் மற்றும் அனுபவம் பரிமாற்றத்தை உள்ளடக்கி செயல்படுத்தும்.

- மேலும் பயிர் வளர்ப்பு, விதை உருவாக்கம், புதிய தொழில்நுட்பம், பல்வேறு தரப்பட்ட விதை மற்றும் பாசன முறைகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

## 110] வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தின் 6வது ஆசிய பசிபிக் கூட்டம் புது தில்லி தொடங்குகிறது

- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி தொடர்பான ஆசிய பசுபிக் கூட்டத்தின் (APMCHUD) ஆறாவது பதிப்பு புது தில்லியில் தொடங்கியது. மத்திய நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் வெங்கையா நாயுடு அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

- இந்த மூன்று நாள் மாநாடானது பெருநகரங்களில் மேற்கொள்ளப்படும் புறவிரிவாக்கம், நகர்ப்புற மக்கள் தொகை முதலிய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முற்படும்.

## முக்கிய குறிப்புகள்

- இந்த மாநாட்டில் ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் 68 நாடுகளில் இருந்து அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் இணைந்து நகர்ப்புற திட்டமிடல் மற்றும் மேலாண்மை சவால்களை எதிர்கொள்ள தீர்வு காண முயற்சிப் எனபார்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

- நகர்ப்புற மேம்பாட்டிற்கான டெல்லி பிரகடனத்தை உறுப்பு நாடுகளானது Eucador உள்ள quito என்ற இடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட புதிய நகர உருவாக்கத்திற்கான நிகழ்ச்சி நிரலை கொண்டு நடைமுறைபடுத்தும்.

- சந்திப்பின் போது, செயல்பாட்டில் உள்ள ஐந்து குழுக்கள் ஒருங்கிணைந்த திட்டமிடல், மேலாண்மை மற்றும் நிர்வாக கட்டமைப்புகள் போன்றவற்றின் பல்வேறு துணை கருப்பொருளை தெளிவுபடுத்தின.

**111] அரியானா மாநிலம் மகிளா காவல் தன்னார்வலர் திட்டத்தை தொடங்கியுள்ளது**

- ஹரியானா முதலமைச்சர் மனோகர் லால் அவர்களால் பெண்கள் பாதுகாப்பிற்காக மகிளா போலீஸ் தன்னார்வலர் திட்டம் டிசம்பர் 14, 2016ல் துவங்கப்பட்டது.

- இந்த திட்டம் பாலின சமத்துவத்தை அடைய மத்திய அரசு எடுத்து வரும் பல முயற்சிகளின் ஒரு பகுதியாக உள்ளது.

- இத்திட்டத்தை நடைமுறைபடுத்திய நாட்டின் முதல் மாநிலம் அரியானாவாகும்.

**மகிளா போலீஸ் தன்னார்வலர் திட்டம் என்றால் என்ன?**

- இது மத்திய பெண்கள் மற்றும் சிறுவர் முன்னேற்ற அமைச்சகம் மற்றும் உள்துறை அமைச்சகத்தின் ஒரு கூட்டு முயற்சி ஆகும்.

- இதன் நோக்கம் போலீஸ் அதிகாரிகள் மற்றும் கிராமங்களில் உள்ள உள்ளூர் சமூகங்கள் இடையே ஒரு இணைப்பை உருவாக்குவதாகும்.

- இத்திட்டத்திற்காக சிறப்பாக பயிற்சி பெற்ற பெண் தன்னார்வலர்களை மாநில அரசு நியமிக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்தது ஒரு தன்னார்வலரையாவது நியமிக்க இலக்கு நிர்ணயித்து உள்ளது.

**112] சூரிய ஒளி மின்கல நிலையம் திப்ருகார்,அசாமில் தொடங்கப்பட்டுள்ளது**

- அசாமின் முதலமைச்சர் Sarbananda Sonowal அவர்களால் டிசம்பர் 14, 2016 அன்று திப்ருகாரில் உள்ள Bindhakata Tengapukhuri என்ற கிராமத்தில் சூரிய மின்கல நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

- சூரிய மின்கல நிலையம் அசாமின் மிகப்பெரிய திட்டங்களில் ஒன்றாகும். இது Gerekigaon, Mulukghat, Mirigaon மற்றும் Tengabri பகுதியின் நான்கு கிராமங்களில் 287 குடும்பங்களின் மின்சக்தி தேவைகளை நிறைவேற்ற உதவும்.

**சூரிய மின்கல நிலையத்தின் சிறப்பம்சங்கள்**

- 6 கிலோவாட் திறன் கொண்ட இரண்டு சூரிய மின்கல சார்ஜ் ஏற்றும் நிலையத்தை அமைத்துள்ளது.

- இரண்டு வெவ்வேறு கட்டிடங்களில் இரண்டு மைய மின்கல நிலையத்தை அமைத்து அதன் மூலம் 2 விளக்குகள், 1 மின்விசிறி இயங்கும் அளவிற்கு சூரிய மின் சக்தி வழங்கப்படும்.

## 113] மடோனாவின் வாழ்க்கை வரலாறு 2016ன் சிறந்த தயாரிக்கப்படாத திரைப்பட ஸ்கிரிப்டாக வாக்களிக்கப்பட்டுள்ளது

- ப்ளாண்ட் ஆம்பிஷன் என்ற தலைப்பிலான மடோனாவின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாக தயாரிக்கப்படாத ஹாலிவுட் ஸ்க்ரிப்டாக உள்ளது.

- மடோனாவின் வாழ்க்கை வரலாறு புதிதாக வெளியிடப்பட்ட பட்டியலில் 73 ஸ்கிரிப்டுகளை தாண்டி 48 வாக்குகள் பெற்று முதலிடத்தை பிடித்தது.

- ப்ளாண்ட் ஆம்பிஷன், Elyse hollander என்ற ஒரு ஹாலிவுட் புதுமுகத்தால் எழுதப்பட்டிருக்கிறது.

- இவர் தொடர்கள், குறும்படங்கள் ஆகியவற்றை எழுதி மற்றும் இயக்கி உள்ளார். IMDb அறிக்கை படி, இவர் பேர்ட்மேன் என்ற இயக்குனரிடம் பாராட்டப்படாத உதவியாளராக இருந்துள்ளார்.

**Blond Ambition**

- மடோனாவின் வாழ்க்கை வரலாற்று போராட்டங்களை விவரிக்கும் முதல் திரைப்பட ஆல்பம் 1980ல் வெளியிடப்பட்டது.

- இந்த புத்தகம் பாப் உலகின் ராணியின் புகழ்,காதல் மற்றும் இசைத்துறை அனுபவம் ஆகியவற்றை பற்றி முழுமையான வாழ்க்கை வரலாற்றை கூறுகிறது.

**114] இந்திய ரயில்வே, பாரத ஸ்டேட் வங்கி இணைந்து பல்வேறு இடங்களில் 10000 பிஓஎஸ் இயந்திரங்கள் நிறுவுகிறது**

- இந்திய ரயில்வேயானது பொது ஒதுக்கீட்டு முறை (பி.ஆர்.எஸ்) ரயில்வே கவுண்டர்களில் டெபிட் அல்லது கிரெடிட் கார்டுகளைப் பயன்படுத்த ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியுடன் டிசம்பர் 3 2016ல் இணைந்தது. இதன் மூலம் ரயில் கட்டண மையங்களில் 10000 POS கருவிகள் நிறுவப்படும்.

- இந்த இணைவானது பணமில்லா பரிமாற்றங்களை ஊக்குவிக்கும் பிரதமர் நரேந்திர மோடியின் முடிவுக்கு மேலும் ஊக்கம் தர மேற்கொள்ளப்பட்டது.

**முக்கிய குறிப்புகள்**

- முதல் கட்டமாக 40 பிஓஎஸ் கருவிகள் A1,A மற்றும் B வகை நிலையங்களில் முன்னுரிமையின் அடிப்படையில் நிறுவப்படும்.

- இதன் மூலம் பயணிகள் டிக்கெட் புக்கிங் செய்யும் போது பணமில்லா பரிமாற்றங்களை மேற்கொள்ள முடியும். மேலும் பணமும் ஏற்று கொள்ளப்படும்.

- எந்தவொரு கூடுதல் கட்டணமும் பயணிகளிடம் இருந்து பெறப்படாது. டெபிட் கார்டுகள் மூலம் பணம் செலுத்தும் போது ரூ2000 வரை மற்றும் அதற்கு மேலே செல்லும் போது ரயில்வே 0.75 சதவீத தள்ளுபடி அளிக்கும்.

**115] இந்தியாவில் முதல் சைபர் செக்யூரிட்டி மையத்தை மைக்ரோசாப்ட்(microsoft)புது தில்லியில் தொடங்குகிறது**

- மென்பொருள் நிறுவனமான மைக்ரோசாப்ட் இந்தியா அதன் முதல் முழு அளவிலான சைபர் செக்யூரிட்டி மையத்தை (CSEC) புது தில்லியில் தொடங்கியுள்ளது.

- இது மைக்ரோசாப்டின் உலகின் ஏழாவது சைபர் செக்யூரிட்டி மையமாகும்.

- மேலும் ரெட்மாண்ட் டிஜிட்டல் குற்றங்கள் பிரிவிற்கு(DCU) ஒரு செயற்கைக்கோள் போல செயல்படும்.

## முக்கிய குறிப்புகள்

- இந்தியாவில் முதன்முதலாக பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களுடன் இணைந்து மைக்ரோசாப்ட் திறன்களை(capabilities) கொண்டு ஆழமான சைபர்செக்யூரிட்டி சேவைகளை ஊக்குவிக்கும் ஒன்றாக உருவெடுக்கும்.

- இந்தியாவின் டிஜிட்டல் மாற்றத்தை உருவாக்க இது ஒரு நம்பகமான மற்றும் பாதுகாப்பான கம்ப்யூட்டிங் சூழலாக உருவெடுக்கும்.

- மைக்ரோசாப்டின் மற்ற ஆறு இணைய பாதுகாப்பு மையங்கள் சிங்கப்பூர், டோக்கியோ, பெய்ஜிங், சியோல், பேர்லின் மற்றும் வாஷிங்டன் DC இல் அமைந்துள்ளது.

### 116] பழங்குடியினர் வாழ்வாதாரத்திற்காக மத்திய அரசு தேசிய வளமையம்(National Resource Centre) வன்ஜீவனை(Vanjeevan) தொடங்குகிறது

- பழங்குடியினர் விவகார அமைச்சகத்தால் புவனேஸ்வர்(ஒடிசா) பகுதியில் வாழும் பழங்குடியினரின் வாழ்வாதார பிரச்சினைகளுக்காக "Vanjeevan" மையத்தை தொடங்க போகிறது தேசிய வள மையம் (NRC).

- யு.என்.டி.பி(UNDP) மற்றும் தேசிய பழங்குடியினர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்துடன் (NSTFDC) இணைந்து தொடங்கப்படுகிறது.

- அதுதவிர NRC இணையதளம் மற்றும் e-knowledge platform இந்த இரண்டையும் தொடங்க போவதாக அறிவித்துள்ளது.

**முக்கிய குறிப்புகள்.**

- முதல் கட்டமாக Vanjeevan பழங்குடி மக்கள் வாழ்வாதாரப் பிரச்சனைகள் நிறைந்த மற்றும் குறைந்த மனித வளர்ச்சிக் குறியீடு(HDI)கொண்ட ஆறு மாநிலங்களிலும் மாவட்டங்கள் அடையாளம் காணப்பட்டு தேர்ந்தெடுக்கப்படும்.

- இந்த திட்டம் ஏற்கனவே இருக்கும் திறன் நிலைகளையும்,உள்ளூர் வளங்களையும் அடையாளம் காண தனிக்கவனம் செலுத்தும்.

**117] ஆராய்ச்சியாளர்கள் நச்சுக் கழிவுகளை 8,000 மடங்கு எதிர்க்கும் பிறழ்வுக்குள்ளான அட்லாண்டிக் கில்பிஷை(killifish) கண்டறிந்துள்ளனர்.**

- சாதாரண மீன் ஒப்பிடுகையில் நச்சு கழிவு 8,000 மடங்கு அதிகமாக நெகிழ்திறன் கொண்ட அட்லாண்டிக் கில்பிஷ்(killifish) என்ற ஒரு மீன் இனத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

- இந்த மீன் இனங்கள் வர்ஜீனியா உள்ளஎலிசபெத் நதி மற்றும் நியூ ஜெர்சியில் உள்ள நெவார்க் பே போன்ற அமெரிக்காவில் பெரிதும் மாசுபட்ட கிழக்கு கடற்கரை முகத்துவாரங்களில் வாழ்கிறன.

**118] இந்தியாவின் முதல் நீரிலும் நிலத்திலும் செல்கின்ற பேருந்து திட்டத்தை பஞ்சாப் அரசு தொடங்குகிறது**

- பஞ்சாப் அரசு நாட்டின் முதல் நீரிலும் நிலத்திலும் செல்கின்ற பேருந்து திட்டத்தை அமிர்தசரஸ் அருகே ஹறிகே(Harike) என்ற இடத்தில் தொடங்கியுள்ளது.

- நீரிலும் நிலத்திலும் செல்கின்ற இந்த பேருந்திற்கு "ஹறிகே குரூஸ்(Harike Cruise)" என பெயரிடப்பட்டுள்ளது.

- துணை முதல்வர் சுக்பீர் சிங் பாதலால்(Sukhbir Singh Badal) தொடங்கி வைக்கப்பட்டது.

- பேருந்தின் பயணப்பாதை அமிர்தசரசில் இருந்து Harike சதுப்புநிலங்கள் வரை 13 கி.மீ. தொடர்கிறது. இது 45 நிமிடங்களில் இந்த தூரத்தை கடக்கிறது.

**119] அமோனியா முதல் முறையாக ட்ரோபோஸ்பியர் அடுக்கிற்கு மேல் பகுதியில் கண்டறியப்பட்டுள்ளது.**

- முதல் முறையாக விஞ்ஞானிகள் பூமியின் மிக தாழ்ந்த வளிமண்டல அடுக்கான ட்ரோபோஸ்பியர் அடுக்கிற்கு மேல் பகுதியில் அம்மோனியா தாதுக்களை கண்டறிந்துள்ளனர்.

- இது ஜெர்மனியில் Karlsruhe Institute of Technology இல் உள்ள ஆராய்ச்சியாளர்கள் குழுவினால் கண்டறியப்பட்டது.

- 2002 ஆம் ஆண்டு ஜூன் முதல், ஏப்ரல் 2012 வரை டிரோபோஸ்பியரின் பல்வேறு பகுதிகளில் சேகரிக்கப்பட்ட செயற்கைக்கோள் தரவுகளை ஆய்வு செய்துள்ளனர்.

**முக்கிய கண்டுபிடிப்புகள்**

- அமோனியாவானது விவசாயக்கழிவுகளில் இருந்தும் கால்நடை வளர்ப்பு மற்றும் உரமிடுதல் போன்ற முறைகளினால் வளிமண்டலத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

- உலகில் வேறெங்குமே இல்லாத அளவில் இந்தியா மற்றும் சீனா போன்ற ஆசிய பருவமழை பகுதிகளில் மேலே அதிகளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- அம்மோனியா செறிவு தென்கிழக்கு சீனா மற்றும் வட இந்தியாவில் மேலே 33 pptv (டிரில்லியன் காற்று மூலக்கூறுகள் ஒன்றுக்கு, 33 அம்மோனியா மூலக்கூறுகள்) வரை இருந்தது.

**120] சீனா மேம்பட்ட வானிலை செயற்கைக்கோள் Fengyun-4யை விண்ணில் செலுத்தியுள்ளது.**

- புதிய தலைமுறை வானிலை செயற்கைக்கோளான Fengyun-4யை புவி இணைச் சுற்றுவட்டப் பாதையில் சீன வெற்றிகரமாக செலுத்தியுள்ளது.
- சிச்சுவான் மாகாணத்தில் ஸிசங்(Xichang) எஸ்.எல்.வி மையத்தில் இருந்து லாங் மார்ச்(Long March )-3B கேரியர் ராக்கெட் மூலம் செலுத்தப்பட்டது.
- இது சீனாவின் லாங் மார்ச் தொடரின் 242 ஆவது ராக்கெட் திட்டம் எனபது குறிப்பிடத்தக்கது.
- மேலும் இது நாட்டின் முதல் தொலை உணரும் செயற்கைக்கோள் மற்றும் முதல் முறையாக உயர்ந்த சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்படும் சீனாவின் இரண்டாவது தலைமுறை வானிலை ஆய்வு செயற்கைக்கோள் ஆகும்.

**121] கொல்கத்தா-மிசோரம் வர்த்தக பாதை மியான்மார் வழியாக விரைவில் திறக்கப்பட உள்ளது.**

- மியான்மர் சித்டுவேயில் (Sittwe) இந்தியாவால் கட்டப்பட்ட ஆழ்கடல் துறைமுகம் இயங்க தயாராக உள்ளது. எனவே மியான்மார் வழியாக கொல்கத்தா-மிசோரம் வர்த்தக பாதை திறக்கப்படுகிறது.

- சித்டுவே துறைமுகம் மியான்மரின் Kaladan Multi Modal இடைநிலை போக்குவரத்து திட்டத்திற்கு தொடக்க புள்ளியாக உள்ளது.

- ஒருமுறை ஏற்றுமதி கொல்கத்தாவில் இருந்து சித்டுவே துறைமுகத்திற்கு வந்து இறங்கியவுடன் சரக்குகள் சிறிய சரக்கு ஊர்திகளில் மாற்றப்பட்டு மிசோரத்திற்கு பயணிக்கிறது.

- இது பூட்டான் மற்றும் வங்காளம் இணைக்கும் மேற்கு வங்கத்தின் மிக குறுகலான பாதையான (Chicken’s Neck)யை சார்ந்திருப்பதை குறைக்கிறது.

- சீனாவின் தலையீட்டிற்கு பிறகு இந்தியா ஆழ்கடல் berthing கட்டமைப்பை ரக்ஹினேவில்(Rakhine) உள்ள கைகப்யு(Kyaukphyu) என்ற இடத்தில் உருவாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**122] உலகின் மிக நீளமான ரயில் சுரங்கப்பாதையான கோதர்டு பேஸ் வழக்கமான சேவை தொடங்குகிறது.**

- சுவிச்சர்லாந்தில் உள்ள புகழ்பெற்ற கோதர்டு பேஸ் சுரங்கப்பாதையில் வழக்கமான வர்த்தக ரயில் சேவை தொடங்கியது.
- இதன் வழியாக முதல் ரயில் Zurichலிருந்து Lugano வரை பயணிகளை சுமந்து சென்றது.
- இரட்டை-துளை கொண்ட 57 கிலோமீட்டர் நீளம் உடைய உலகின் மிக நீளமான மற்றும் ஆழ்ந்த ரயில்வே சுரங்கப்பாதையாக இது உள்ளது.
- 2016-ல் கோதர்டு பேஸ் துவங்கிய பிறகு ஜப்பான் நாட்டின் உலகின் மிக நீளமான ரயில் சுரங்கப்பாதையாக இருந்த Seikan சுரங்கப்பாதையை (53.9 கிலோமீட்டர்) முந்திக்கொண்டு முதலிடம் பிடித்துள்ளது.

**முக்கிய குறிப்புகள்**

- கோதர்டு பேஸ் ஆல்ப்ஸ் மலை வழியாக செல்லும் முதல் தாழ்மட்ட பாதையாக உள்ளது.
- மலைக்கு கீழ் 2.3 கி.மீ. ஆழத்திலும் மற்றும் 57-கிலோ மீட்டர் நீளத்திற்கும் அமைந்துள்ளது.
- வடக்கு மற்றும் தெற்கு ஐரோப்பா இணைக்கிறது. பல ரயில் பாதைகளின் பயண நேரத்தை குறைக்கிறது.
- இது ஆல்ப்ஸ் புதிய ரயில்வே இணைப்பு (NRLA) என அழைக்கப்படும் ஆல்ப் டிரான்சிஸ்ட் திட்டத்தின், ஒரு பகுதியாக 1992 ஆம் ஆண்டு 17 ஆண்டு காலஅளவு கொண்ட திட்டமாக தொடங்கப்பட்டது.
- இது இரண்டு ஒற்றை வழிப்பாதை சுரங்கங்களாக Sedrun கீழே Erstfeld (Uri) மற்றும் Bodio(Ticino)வை இணைத்து கடந்து செல்கிறது.

- GBT முக்கிய நோக்கம் குறிப்பாக ஆல்ப்ஸ் மலைத்தொடரின் வழியாக நடைபெறும் சரக்கு மற்றும் மொத்த போக்குவரத்து திறனை அதிகரித்தலாகும்.

**123] அமெரிக்காவின் மேரிலேண்டில் உள்ள அக்சான்ஹில்நகரில் நடைபெற்ற 'மிஸ்வேர்ல்டு 2016' உலக அழகிப்போட்டியில் போர்ட்டோ ரிக்கோ நாட்டை சேர்ந்த ஸ்டெபானி டெல்வாலே என்ற 19 வயது இளம்பெண் 'மிஸ்வேர்ல்டு 2016' பட்டம் வென்றுள்ளார்.**

- இப்போட்டியில் 2-வது இடங்களை டொமினிகள் குடியரசு நாட்டைசேர்ந்த யரீட்ஷா மிகுலெனினா ரெயஸ் ரமிரெஷ் மற்றும் இந்தோனேசியாவை சேர்ந்த நடாஷா மனுலாவும் தேர்வாகினர்.

- இந்த போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்ற பிரியதர்ஷினி சாட்டர்ஜி 16வது இடம் பிடித்தார்.
- 2015-ம் ஆண்டு உலக அழகி - ஸ்பெயின் அழகி மிரேயா லலாகுனா.

**124] உலக அளவில் காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா 4-வது இடத்தை பிடித்து உள்ளது. கடந்த இரண்டரை ஆண்டுகளில் காற்றாலை மூலம் 7.04 ஜிகா வாட் மின் உற்பத்தி செய்யப்பட்டு உள்ளது.**

**125] ஐ.எஸ்.எல்., கால்பந்து தொடரில் கோல்கட்டா அணி சாம்பியன் பட்டம் வென்றது. பைனலில் 'பெனால்டி ஷூட் அவுட்' முறையில் 4-3 என்ற கோல் கணக்கில் கேரளா அணியை வீழ்த்தியது.**

- மூன்றாவது ஐ.எஸ்.எல்., கால்பந்து தொடருக்கான பைனல் கொச்சியில் நடந்தது. கோல்கட்டா அணி இரண்டாவது முறையாக கோப்பை வென்றது.

**126] இந்திய ரேடியோ வரலாற்றிலேயே முதன் முறையாக, இந்தியாவின் மிக நீண்ட டிவி தொடராக கருதப்படும் மகாபாரதம், ஆல் இந்தியா ரேடியோவில் ஒலிபரப்பப்பட உள்ளது.**

**127] ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத் தலைவன் அபூபக்கர் பாக்தாதியின் தலைக்கு அமெரிக்கா 2.5 கோடி டாலர் (150 கோடி ரூபாய்) பரிசு அறிவித்துள்ளது.**

**128] சிறுபான்மை இன மக்கள் பணமில்லா வர்த்தக நடைமுறையை அறிந்து கொள்ளவும், அதனை எளிய முறையில் நடைமுறைப்படுத்தவும் மத்திய அரசு Cashless chaupals முறையை அறிமுகம் செய்துள்ளது.**

**129] பீகார் மாநில கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் இலவச WiFi வசதி ஏற்படுத்தப்படும் என அம்மாநில அரசு அறிவித்துள்ளது.**

**130] பில் கேட்ஸ், ரத்தன் டாடா , முகேஷ் அம்பானி உள்ளிட்ட பல உலக மெகா கோடிசுவரர்கள் இணைந்து 1 மில்லியன் டாலர் தொகை தூய்மை எரிசக்தி நிதியத்தை உருவாக்கி உள்ளனர். இதற்கு Breakthrough Energy Ventures என பெயரிடப்பட்டுள்ளது.**

**131] கடந்த 70 ஆண்டுகளில் உலகில் செல்வாக்கு மிகுந்த பெண்கள் ( Most powerful women of the last 70 years ) என்ற பட்டியலை BBC வெளியிட்டுள்ளது.**

- இந்த பட்டியலில் இங்கிலாந்தில் வாழ்ந்த இந்திய வம்சாவழி பெண் ஜெயாபென் தேசாய் இடம் பெற்றுள்ளார்.

- தொழிற்சங்க இயக்கத்தில் இருந்த இனவெறி, வயதுப் பாகுபாடு, பெண்கள் மீதான துவேஷம் போன்றவற்றையும், புலம்பெயர்ந்து வந்த தொழிலாளர்களிடம் தொழிலகங்கள் நடத்திய சுரண்டலையும்அம்பலப்படுத்தி நடைபெற்ற போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தியவர் இந்தியாவில் பிறந்த ஜெயாபென் தேசாய்.

**இந்த பட்டியலில் இடம் பெற்றுள்ள மற்றவர்கள்.**

01) மார்கரட் தாட்சர் . 02 ) ஹெலன் புரூக் . 03) பார்பரா கேசில். 04) ஜெர்மைன் கிரீர்

**132] கடந்த பத்தாண்டுகளில் 2006-ம் ஆண்டுக்கு பிறகு இரண்டாவது முறையாக அமெரிக்க மத்திய வங்கி (பெடரல் ரிசர்வ்) வட்டி விகிதத்தை 0.25 சதவீதம் உயர்த்தியுள்ளது.**

- அமெரிக்க மத்திய வங்கியின் ( பெடரல் ரிசர்வ் ) தலைவர் -- ஜெனட் ஏலன்

**133] பிரதான் மந்திரி கரீப் கல்யாண் திட்டம் [ Pradhan Mantri Garib Kalyan Yojna (PMGKY)]**

- கருப்பு பணம் பதுக்கியவர்கள் வங்கியில் அதை டெபாசிட் செய்து குற்றத்தை ஒப்புக்கொண்டால், 49.90% வரி, கூடுதல் வரி மற்றும் அபராத கட்டணம் விதிக்கப்படும்.
- மீதமுள்ள பணத்தில் 25 சதவீதத்தை பிரதான் மந்திரி கரீப் கல்யாண் யோஜனா திட்டத்தில் 4 ஆண்டுகளுக்கு டெபாசிட் செய்ய வேண்டும். இதற்கு எந்த வட்டியும் வழங்கப்படாது.
- இந்த திட்டம் டிசம்பர் 17 / 2016 முதல் அமலுக்கு வந்துள்ளது.

**134] சுப்ரீம் கோர்ட் புதிய தலைமை நீதிபதியாக ஜெகதீஸ் சிங் ஹேகரை நியமிக்க ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஒப்புதல் வழங்கியுள்ளார்.**

- 44வது தலைமை நீதிபதியாக ஜே.எஸ். ஹேகர் ஜனவரி 4ம் தேதி பதவி ஏற்க உள்ளார்.

**135] Indian Institute of Skills**

- இந்தியாவின் முதல் " இந்திய திறன் கழகத்தை " உ.பி.யின் கான்பூரில் அமைக்க பிரதமர் அடிக்கல் நாட்டியுள்ளார்.
- இந்த அமைப்பானது மத்திய திறன் மேம்பாட்டுஅமைச்சரகம் மற்றும் சிங்கப்பூர் தேசிய தொழில் நுட்ப கழகத்துடன் இணைந்து துவங்கப்பட்டுள்ளது.
- இதே போல் மேலும் இந்தியாவெங்கும் ஆறு கழகங்களை உருவாக்க அமைச்சரகம் திட்டமிடப்பட்டுள்ளது.

**136] அஸ்ஸாம் மாநில சுற்றுலாத்துறையின் தூதுவராக பிரபல ஹிந்தி நடிகை பிரியங்கா சோப்ரா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.**

**137] Swasthya Raksha Programme**

- கிராமபுறங்களில் ஆரோக்கியம் மற்றும் ஆரோக்கியம் சார்ந்த விழிப்புணர்வு கல்வியை ஏற்படுத்த மத்திய ஆயுஷ் (ayush ) துறை ஸ்வத்யா ரக் ஷா திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.
- ( A - ஆயுர்வேதம் , Y - யோகா , U - யுனானி , S - சித்தா, H - ஹோமியோபதி )

**138] டெல்லி, ஹரியானா, பஞ்சாப், தெலுங்கானா, சண்டிகர் ( யூனியன் பிரதேசம் ) ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக இமாச்சல பிரதேசம் 100 % ஆதார் பதிவு பெற்ற மாநிலம் என்ற சிறப்பை பெற்றுள்ளது.**

**139] தமிழகத்தின் புதிய தலைமைச் செயலாளராக திருமதி. கிரிஜா வைத்தியநாதன் IAS நியமிக்கப்பட்டுள்ளார்.**

- மேலும், நிர்வாக சீர்திருத்தம் மற்றும் கண்காணிப்பு ஆணையர் பதவிகளையும் அவர் கூடுதலாக கவனிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- தமிழக தலைமைச் செயலாளராக இருந்த ராம மோகன ராவ் வீட்டில் வருமான வரித்துறையினர் நேற்று சோதனை நடத்தியதைத் தொடர்ந்து, கிரிஜா வைத்தியநாதன், புதிய தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**140] கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் வருடாந்திர இயல் விருது இவ்வருடம் (2016) திரு. சுகுமாரன் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.**

- 2,500 டாலர் பணப் பரிசும் கேடயமும் கொண்டது ‘இயல் விருது’.
- தற்போது காலச்சுவடு இதழின் பொறுப்பாசிரியராக பணியாற்றுகிறார். இந்த விருதைப் பெறும் 18-வது தமிழ் ஆளுமை ஆவார்.
- இதற்கு முன்னர் சுந்தரராமசாமி, வெங்கட் சாமிநாதன், ஜோர்ஜ் ஹார்ட், ஐராவதம் மகாதேவன், அம்பை, எஸ். பொன்னுத்துரை, எஸ். ராமகிருஷ்ணன், நாஞ்சில்நாடன், சு. தியோடர் பாஸ்கரன், ஜெயமோகன், டொமினிக் ஜீவா, மற்றும் ஆர். மயூரநாதன் ஆகியோர் இயல் விருதைப் பெற்றுள்ளனர்.
- சுகுமாரனின் ‘கோடைக்காலக் குறிப்புகள்’ கவிதைத் தொகுப்பு பரவலான கவனம் பெற்றது. ‘வெல்லிங்டன்’ என்னும் நாவலை எழுதியுள்ளார். மலையாள இலக்கியத்தின் ஆளுமைகளான வைக்கம் முகம்மது பஷீர், சச்சிதானந்தன், அடூர் கோபாலகிருஷ்ணன், சக்கரியா போன்றவர்களின் படைப்புகளை சுகுமாரன் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். ‘அஸீஸ் பே சம்பவம்’, ‘தனிமையின் நூறு ஆண்டுகள்’, ‘பட்டு’ ஆகியவை இவரது மொழிபெயர்ப்பில் குறிப்பிடத்தக்கவை.

**141] நடப்பு நிதியாண்டுக்கான வருங்கால வைப்பு நிதி (பி.எப்.) வட்டி விகிதம் 8.8% லிருந்து 8.65% மாக தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஆணையம் (இபிஎப்ஓ) குறைத்துள்ளது.**

**142] நடப்பு 2016-17-ம் நிதி ஆண்டில் ஆண்டுக்கு 2 கோடி ரூபாய்க்குள் மொத்த வருமானம் இருக்கும் வணிகர்கள், தங்களது கணக்கு வழக்குகளை சரியாக வைத்திருக்காத பட்சத்தில் மொத்த வருமானத்தில் 8 சதவீத தொகைக்கு வரி செலுத்த வேண்டும்.**

- டிஜிட்டல் பரிவர்த்தனையை பயன்படுத்தும் பட்சத்தில் மொத்த வருமானத்தில் 6 சதவீத தொகைக்கு மட்டும் வரி செலுத்தினால் போதும். இதற்காக வருமான வரி சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

**143] வங்கிக் கணக்கு இல்லாமல் சம்பளத்தைப் பெறும் பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் இந்தியன் வங்கி 'கேஷ் கார்டு' என்ற புதிய வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.**

- இந்த கார்டை பயன்படுத்தி, ஒரு நாளைக்கு சும்மார் 50 ஆயிரம் வரை , பணத்தை எடுக்கவோ, அல்லது பொருட்களை வாங்கவோ முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.
- மேலும், நாடு முழுவதும் சுமார் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மற்றும் 2 லட்சத்திற்கு மேற்பட்ட ஏ டி எம் மையங்களிலும் , இதை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

**144] சர்வதேச குத்துச்சண்டை சங்கம் (AIBA) வழங்கும் 2016ம் ஆண்டின் " சிறந்த குத்துச்சண்டை வீரருக்கான சர்வதேச விருது " இந்தியாவின் " விகாஷ் கிருஷ்ணனுக்கு " வழங்கப்பட்டுள்ளது.**

- " சிறந்த 'ஜாம்பவான் " ( Legends Award ) விருதை, ஐந்து முறை உலக சாம்பியன் பட்டம் வென்ற இந்திய வீராங்கனை மேரி கோம் பெற்றார்.

**145] புதுச்சேரி மாநில அரசுத் துறைகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு 3 சதவீத இட ஒதுக்கீடு வழங்கி அம் மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.**

**146] சுதந்திரப் போராட்ட வீரரும், பழம் பெரும் படைப்பாளியுமான தி.க.சிவசங்கரன் அவர்களின் புதல்வரான வண்ணதாசனுக்கு 'ஒரு சிறு இசை' எனும் சிறுகதை நூலுக்காக 2016ம் ஆண்டுக்கான சாகித்ய அகாதெமி விருது அறிவிக்கப்பட்டிருக்கிறது.**

- வண்ணதாசனின் இயற்பெயர் கல்யாணசுந்தரம். வண்ணதாசன் 'கல்யாண்ஜி' என்ற பெயரில் கவிதைகளும் எழுதி வருகிறார்.

- ஏற்கனவே 2016-ம் ஆண்டுக்கான விஷ்ணுபுரம் விருது இவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

- இவர், கலைக்க முடியாத ஒப்பனைகள், சமவெளி, கனிவு, நடுகை, பெயர் தெரியாமல் ஒரு பறவை என்பன உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதி இருக்கிறார். சின்னு முதல் சின்னு வரை என்ற நாவலையும் எழுதி உள்ளார்.

- புலரி, முன்பின், மணல் உள்ள ஆறு, ஆதி, அந்நியமற்ற நதி ஆகிய கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். இதுதவிர, அகமும் புறமும் என்ற கட்டுரை தொகுப்பும், வண்ணதாசன் கடிதங்கள் ஆகியவற்றையும் வெளியிட்டுள்ளார்.

**2015 - மாதவன் - இலக்கியச் சுவடுகள் என்ற தமிழ் இலக்கிய திறனாய்வு கட்டுரை**
**2014 - பூமணி - அஞ்ஞாடி**
**2013 - ஜோ டி குரூஸ் - கொற்கை நாவல்**
**2012 - செல்வராஜ் - தோல் நாவல்**

**147] துபாயில் நடைபெற்ற உலகின் முண்ணனி வீரர்கள் மட்டுமே பங்கு பெற்ற , உலக சூப்பர் சீரிஷ் பேட்மிண்டன் போட்டியில் , ஆண்கள் ஒற்றையர் பிரிவில் டென்மார்க்கின் Viktor Axelsen , மற்றும் மகளிர் ஒற்றையர் பிரிவில் சீன தைபேயின் Tai Tzu-ying ஆகியோர் பட்டம் வென்றுள்ளனர்.**

- இந்தியாவின் P.V.சிந்து பெண்கள் ஒற்றையர் அரையிறுதியில் தோல்வியை தழுவினார்.

**148] Google Lunar Xprize :-**

- தகவல் தொழில்நுட்ப நிறுவனமான கூகுள், தனியார் நிறுவனங்களுக்காக , நிலவுக்கு விண்கலத்தை அனுப்பி, உயர்தரமான வீடியோ, புகைப்படங்களை பூமிக்கு அனுப்பும் " லூனார் எக்ஸ்பிரைஸ் " போட்டியை அறிவித்துள்ளது.

- இந்த போட்டியில், 30 மில்லியன் டாலர் ( 200 கோடி ரூபாய் ) பரிசு வழங்கப்படுகிறது.

- இந்த போட்டியில், இந்தியாவை சேர்ந்த, 'டீம்இண்டஸ்' எனப்படும், தனியார் விண்வெளி தொழில்நுட்ப நிறுவனம் பங்கேற்கிறது.

- இதற்காக, இஸ்ரோ எனப்படும், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்துடன், டீம்இண்டஸ் ஒப்பந்தம் செய்துள்ளது. அதன்படி, இஸ்ரோவின், பி.எஸ்.எல்.வி., ராக்கெட்டை பயன்படுத்தி, நிலவுக்கு விண்கலம் அனுப்பப்பட உள்ளது.

**149] குழந்தைகளை தாக்கும் down syndrome பற்றி , ஓனிர் ( Onir ) இயக்கிய The Raising Bar என்ற ஆவணப்படம் Hollywood International Independent Documentary Award பெற்றுள்ளது.**

**150] முதன்முறையாக கனடா நாட்டின் ரூபாய் நோட்டுகளில் பெண் ஒருவரின் புகைப்படம் இடம் பெற்றுள்ளது.**

- அவர் வயோலா டெஸ்மண்ட் ( Viola Desmond ) என்ற கருப்பின சமூக உரிமைகள் இயக்கத்தின் தலைவர். ( Black Civil Rights Leader )

**151] கேரளாவில் சோலார் படகு சேவை விரைவில் தொடக்கம்**

- தென் இந்தியாவின் முக்கியமான சுற்றுலாத்தலமாக கேரளா திகழ்கிறது. குறிப்பாக இங்கு படகு சவாரி மற்றும் படகு வீடுகளில் தங்குவதற்கு சுற்றுலா பயணிகள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

- இந்நிலையில் சூரிய மின்சக்தியால் இயங்கக்கூடிய படகு சேவையை (சோலார் போட்) 2017-ம் ஆண்டு ஜனவரி 12-ம் தேதி முதல் தொடங்கப்படவுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் சசீந்திரன் தெரிவித்துள்ளார்.

- வருகின்ற 12-ம் தேதி 75 பயணிகளுடன் வைக்கம்-கொச்சி வழித்தடத்தில் சோலார் படகு தனது முதல் சேவையைத் தொடங்குகின்றது.

**152] சம்பளத்தை மின்னணு முறையில் வழங்க வகை செய்யும் அவசர சட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

- 500,1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்ற பிரதமரின் அறிவிப்பைத் தொடர்ந்து மக்களின் கவனம் மின்னணு பண பரிவர்த்தனைகளின் பக்கம் திரும்பியுள்ளது. மின்னணு பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் வகையில் மத்திய அரசும் பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது.

- இந்நிலையில் மாத ஊதியம் பெறும் தொழிலாளர்கள் அனைவருக்கும் மின்னணு முறையில் சம்பளத்தை வழங்க வகை செய்யும் அவசர சட்டத்துக்கு மத்திய அரசு இன்று [21.12.2016 ] ஒப்புதல் வழங்கியுள்ளது.

- தொழிலாளர்களின் சம்பளத்தை செக், ஆன்லைன் முறையில் வழங்க அவசர சட்டம் வகை செய்கிறது. அவசர சட்டத்தின்படி தொழிலாளர்களுக்கு சம்பளத்தை ரொக்கமாக வழங்கக் கூடாது என்றும், தொழில் நிறுவன ஊழியர்களுக்கு மின்னணு முறையில் மட்டுமே சம்பளம் வழங்கப்படும் எனவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- தொழிலாளர்கள் பணமாக சம்பளத்தை வாங்கும் வரையில் பண பரிவர்த்தனைகளை ஒழிக்க முடியாது என மத்திய அரசு கருதுகிறது.இதனால் இந்த அவரச சட்டம் இயற்றப்பட்டதாகவும், பணமில்லா இந்தியாவை உருவாக்க தனியார் நிறுவனங்களும் இந்த திட்டத்தில் இணைய வேண்டுமென மத்திய அரசு கருதுவதாகவும் கூறப்படுகிறது.

### 153] ஸ்டேட் பேங்க் மற்றும் பிஎஸ்என்எல் இணைந்து புதிய மொபைல் வேலெட் அறிமுகம்

- இந்தியாவில் பழைய 500, 1000 ரூபாய் நோட்டுகளை ஒழிக்கும் நடவடிக்கையையொட்டி பாரத ஸ்டேட் பேங்க் மற்றும் பிஎஸ்என்எல் இணைந்து புதிய மொபைல் வேலெட் சேவையை அறிமுகம் செய்திருக்கின்றன.
- மொபிகேஷ் என அழைக்கப்படும் இந்த சேவையினை ஸ்மார்ட்போன் மற்றும் பீச்சர் போன் வாடிக்கையாளர்கள் பயன்படுத்த முடியும். முதற்கட்டமாக பஞ்சாப், ராஜஸ்தான், ஹரியானா மற்றும் பீகார் உள்ளிட்ட இடங்களில் மட்டும் துவங்கப்பட்டிருக்கும் இந்த சேவை விரைவில் மற்ற இடங்களிலும் அறிமுகம் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- டிசம்பர் மாத இறுதிக்குள் இந்தியா முழுக்க வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படும் மொபிகேஷ் சேவையை பயன்படுத்தி அனைத்து பிஎஸ்என்எல் மையங்களிலும் பணத்தை செலுத்துவது மற்றும் எடுக்கவும் முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எளிய அம்சங்கள் கொண்டிருப்பதால் அனைவரும் பயன்படுத்தக் கூடியதாக இருக்கிறது.
- மொபிகேஷ் வேலெட் சேவையின் மூலம் பணத்தை மற்றவர்களுக்கு அனுப்புதல், பிஎஸ்என்எல் மொபைல் ரீசார்ஜ், லேண்ட்லைன் கட்டணம், போஸ்ட்பெயிட் பில் போன்றவற்றையும் செலுத்த முடியும்.

### 154] பொருளாதரத்தில் பிரிட்டனை வீழ்த்திய இந்தியா: உலகின் 6-வது மிகப்பெரிய பொருளாதார நாடாக உயர்ந்தது

- கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்குப் பின் பொருளாதாரத்தில் பிரிட்டன் நாட்டை வீழ்த்தி முன்னுக்கு வந்துள்ளது இந்தியா. உலகின் மிகப்பெரிய பொருளாதார

நாடுகள் பட்டியலில் முதலிடத்தில் அமெரிக்கா இருக்கிறது. 2 மற்றும் 3-வது இடங்களில் சீனா, ஜப்பான் நாடுகளும் 4 மற்றும் 5-வது இடங்களில் ஜெர்மனி, பிரான்ஸ் நாடுகளும் உள்ளன.

- இந்தியாவின் பொருளாதாரம் தொடர்ந்து உயர்வது மற்றும் ஐரோப்பிய யூனியனில் இருந்து பிரிட்டன் விலகியது போன்ற காரணங்களால் இந்தியா இப்பட்டியலில் 6-வது இடத்தைப் பிடித்துள்ளது.
- அடுத்த ஆண்டு இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.6 சதவீதமாக இருக்கும் என்றும், அதே நேரம் பிரிட்டனின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1.8 சதவீதத்தில் இருந்து 1.1. சதவீதமாக சரியும் என கணிக்கப்பட்டுள்ளது.

**155] ஹாங்காங் செல்லும் இந்தியர்களுக்கு இலவச விசா ரத்து: சீன அரசு நடவடிக்கை**

- சர்வதேச சுற்றுலா தலங்களில் ஒன்றான ஹாங்காங் முன்பு இங்கிலாந்து கட்டுப்பாட்டில் இருந்தது. தற்போது சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ளது. அது சீனாவின் சிறப்பு நிர்வாக பகுதியாக உள்ளது.
- இங்கு இந்தியர்கள் 'விசா' எதுவும் இன்றி அதாவது இலவச 'விசா'வில் சென்று வர அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. அதன்படி செல்லத்தக்க பாஸ்போர்ட்டுடன் ஹாங்காங் செல்லும் இந்தியர் அங்கு 'விசா' இன்றி 14 நாட்கள் தங்க முடியும்.
- ஆனால் இச்சலுகை திடீரென ரத்து செய்யப்பட்டது. இனி ஹாங்காங் செல்லும் இந்தியர்கள் முறைப்படி ஆன்லைனில் விண்ணப்பித்து 'விசா' பெற வேண்டும். அதன் பிறகுதான் விமானம் மூலம் நேரடியாக ஹாங்காங் செல்ல முடியும்.
- இந்த நடைமுறை வருகிற ஜனவரி 23-ந்தேதி முதல் அமலுக்கு வருகிறது. அதற்குரிய முன் அனுமதி பதிவு செய்ய ஆன்லைன் சேவை இப்போதே தொடங்கப்பட்டுவிட்டது.
- இந்தியாவில் இருந்து ஹாங்காங் வந்து அங்கு தங்க அடைக்கலம் கோரும் இந்தியர்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. அதை தடுக்கவே இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சீன அரசு தெரிவித்துள்ளது.

**156] மத்தியில் உள்ள பாரதீய ஜனதா அரசு, நாட்டின் கலாச்சாரத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. நாட்டில் உள்ள பாரம்பரிய முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களுக்கு நிதி உதவி அளித்துவருகிறது. இந்நிலையில் கலாச்சார துறைக்கு தனியாக சிறப்பு சேனல் தொடங்க மத்திய அரசு திட்டமிட்டு வருகிறது.**

- மக்களுக்கு பாரம்பரிய கலாச்சாரங்களைக் கொண்டு செல்லும் நோக்கத்தோடு இந்தப் புதிய சேனல் தொடங்கப்பட உள்ளது. இந்த கலாச்சார சேனலில் நேரடி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும் எனக் கூறப்பட்டுள்ளது. இதற்காக 24 மணி நேர சேனல் தொடங்குவது தொடர்பாக மத்திய கலாச்சார துறை அமைச்சகம், தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகத்திடம் ஆலோசனை நடத்திவருகிறது.

- இதனைத் தொடர்ந்து கலாச்சாரத் துறைக்கான இந்த சிறப்புச் சேனல் விரைவில் தொடங்கப்படும் என்றும் தெரிகிறது. அப்படி புதிய சேனல் தொடங்கினால் அதற்கு 'DD Sanskriti' என பெயரிடலாம் என அமைச்சக வட்டாரத்தில் கூறப்படுகிறது.

**157] பணிவிடை செய்வதற்காக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் வேலை செய்யும் 'ஜார்விஸ்' எனும் மென்பொருள் உதவியாளரை பேஸ்புக் நிறுவனர் மார்க் ஜூக்கர்பர்க் உருவாக்கியுள்ளார்.**

- அயன் மேன் படத்தில் டோனி ஸ்டார்க் கதாபாத்திரத்திற்கு படம் முழுக்க உதவி புரிவதை போல் இயக்குனரின் கற்பனை கதாபாத்திரமாக ஜார்விஸ் அறிமுகம் செய்யப்பட்டது. இதே போன்று ஜார்விஸ் கதாபாத்திரத்தை நிஜமாக்கி, செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் மென்பொருளை கண்டறிந்து அதற்கு ஜார்விஸ் என பெயர் சூட்டியுள்ளார் ஃபேஸ்புக் நிறுவனர் மார்க் ஜூக்கர்பர்க்.

- மார்க் ஜூக்கர்பர்க் தன் வீட்டில் இருக்கும் அனைத்து பொருட்களையும் இண்டர்நெட் உடன் இணைத்து அவற்றை ஜார்விஸ் மென்பொருளின் சர்வர்களில் இணைத்திருக்கிறார். செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் இயங்கும் ஜார்விஸ் மென்பொருளை உருவாக்க பல மாதங்களாக மார்க் ஜூக்கர்பர்க் கோடிங் செய்திருக்கிறார்.

- ஜார்விஸ் உதவியாளர் மென்பொருள் ஆனது மார்க் வடிவமைத்த ஆப் மூலம் மற்றவர்கள் பேசுவதை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் புரிந்து கொண்டு, கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில் அளிப்பது, அன்றைய நிகழ்வுகளை நினைவூட்டுவது போன்றவற்றை மேற்கொள்கிறது. இத்துடன் மார்க் சாப்பிட வேண்டிய நேரத்தை சரியான சமயத்தில் நினைவூட்டும்.

**158] 2016-ம் ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட 24 இந்திய மொழிகளுக்கு, சாகித்ய அகாடமி விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அங்கீகரிக்கப்படாத 4 மொழிகளுக்கு 'பாசா சம்மான்' விருதுகளும் அறிவிக்கப்பட்டன.**

**24 மொழிகளுக்கு..**

- தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், பெங்காலி உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட 24 இந்திய மொழிகளில் வெளியான சிறுகதை, கவிதைகள், நாவல், கட்டுரை, திறனாய்வு உள்ளிட்ட படைப்புகளுக்கு சாகித்ய அகாடமி விருதுகள் வழங்கப்பட்டன. தமிழுக்கு நெல்லையை சேர்ந்த எழுத்தாளர் வண்ணதாசனுக்கு 'ஒரு சிறு இசை' என்ற சிறுகதை தொகுப்பிற்காக விருது வழங்கப்பட்டது.

**விருது விபரம் :**

**1] கட்டுரை :-**

* பெங்காலி - நிரிசிங்கபிரசாத் பதூரி (கட்டுரை)

**2] நாவல் :-**

* ஹிந்தி - நஸீரா சர்மா (நாவல்)
* ஆங்கிலம் - ஜெர்ரி பின்டோ (நாவல்)
* நேபாளி - கீதா உபாத்யாய் (நாவல்)
* கொங்கணி - எட்வின் ஜெ.எ்ஃப். டி'செளசா (நாவல்)
* கன்னடம் - கோலுவாரு முகம்மது குன்ஹி (நாவல்)

**3] திறனாய்வு:-**

* உருது - நிஜாம் சித்திக் (திறனாய்வு)
* காஷ்மீரி - அஜீஸ் ஹஜினி (திறனாய்வு)

**4] நாடகம்:-**

* பஞ்சாபி - சுவராஜ்பிர் (நாடகம்)

**5] சிறுகதை :-**

* தமிழ் - வண்ணதாசன் (சிறுகதை)
* மணிப்பூரி - மொய்ரங்தம் ராஜன் (சிறுகதை)
* ஒடியா - பரிமிதா சத்பதி (சிறுகதை)
* ராஜஸ்தானி - புலாஹி சர்மா (சிறுகதை)
* மராத்தி - அஸாராம் லொமேட் (சிறுகதை)
* டோக்ரி - சத்ரபால் (சிறுகதை)
* மைத்திலி - ஷியாம் தரிஹரே (சிறுகதை)

**6] கவிதை:-**

* தெலுங்கு - பாப்பி நனி சிவசங்கர் (கவிதை)

* மலையாளம் - பிரபா வர்மா (கவிதை)
* சம்ஸ்கிருதம் - சித்தனாத் ஆச்சார்யா (கவிதை)
* அசாமி - ஜனான் புஜாரி (கவிதை)
* குஜராத்தி - கமல் வோரா (கவிதை)
* போடோ - அஞ்சு (கவிதை)
* சந்தாலி - கோவிந்த சந்திர மாஜி (கவிதை)
* சிந்தி - நந்த் ஜவேரி (கவிதை)

**'பாசா சம்மான்' விருது :**

அங்கீகரிக்கப்படாத மொழிகளான குருக், லடாக்கி, ஹல்பி மற்றும் சவுராஷ்டிரா ஆகிய 4 மொழிகளின் வளர்ச்சிக்கு உதவிய எழுத்தாளர்களுக்கு 'பாசா சம்மான்' விருதுகள் அறிவிக்கப்பட்டது. இதில் சவுராஷ்டிரா மொழிக்காக தமிழகத்தைச் சேர்ந்த டாக்டர் டி.ஆர்.தாமோதரன் மற்றும் டி.எஸ்.சரோஜா சுந்தரராஜன் ஆகியோர் விருது பெற தேர்வாகியுள்ளனர்.

### 159] 'நிர்பயா' ஏவுகணை சோதனை தோல்வி

- ❖ உள்நாட்டு தொழில்நுட்பத்துடன், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட் டுள்ள, 'நிர்பயா' ஏவுகணை, நேற்று [ 21.12.2016 ] சோதித்து பார்க்கப்பட்டது. இந்த சோதனை தோல்வியில் முடிந்தது.

- ❖ டி.ஆர்.டி.ஓ., எனப்படும், ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு தயாரித்துள்ள இந்த ஏவுகணை, 1,000 கி.மீ., தொலைவுக்கு பாய்ந்து, இலக்கை தாக்கக் கூடிய சக்தி உடையது. ஒடிசா மாநிலம், சந்திரபுரில் உள்ள ஏவுகணை ஏவுதளத்தில் இருந்து செலுத்தப்பட்டு, நேற்று, மீண்டும் சோதித்து பார்க்கப்பட்டது. இச்சோதனை தோல்வியில் முடிந்தது.

- ❖ அதிநவீன தொழில்நுட்பத்துடன், ரேடார் மூலம் இயக்கக் கூடிய இந்த ஏவுகணையின் பாதையை, இடையில் மாற்றியமைக்கும் வசதி உள்ளது. இந்த ஏவுகணை, 2013 மார்ச், 12ம் தேதி முதல், முறையாக சோதிக்கப்பட்டது; ஆனால், தொழில்நுட்பக் கோளாறால் பாதியிலேயே அது நிறுத்தப்பட்டது. பின், 2014 அக்., 17ல், நடத்திய இரண்டாவது சோதனை, மிகவும் வெற்றிகரமாக அமைந்தது. அதை தொடர்ந்து, 2015 அக்., 16ல், மூன்றாவது முறையாக சோதித்து பார்க்கப்பட்டது. இந்த சோதனையும், பாதியிலேயே நிறுத்தப்பட்டது. தற்போது, நான்காவது முறையாக, நேற்று சோதித்து பார்க்கப்பட்டது. இதுவும் தோல்வியில் முடிந்தது.

### 160] பாதுகாப்புத் துறைக்கு பட்ஜெட்டில் அதிக நிதி ஒதுக்கீடு: ஜப்பான் அமைச்சரவை ஒப்புதல்

- அண்டை நாடுகளின் அச்சுறுத்தலை சமாளிக்கும் விதமாக, பாதுகாப்பு துறைக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்ட பட்ஜெட்டுக்கு ஜப்பான் அமைச்சரவை வியாழக்கிழமை [ 22.12.2016 ] ஒப்புதல் அளித்தது.
- வட கொரியாவின் அணு ஆயுத சவால் மற்றும் சீனாவின் ஏவுகணை மிரட்டல் ஆகியவற்றை எதிர்கொள்ள வேண்டிய சூழலில் ஜப்பான் உள்ளது. இதனால், பாதுகாப்பு துறையை பலப்படுத்த அதிக அளவில் நிதி ஒதுக்க வேண்டிய கட்டாயத்தில் ஜப்பான் உள்ளது.
- வரும் 2017-ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ஆம் தேதி தொடங்க உள்ள நிதி ஆண்டுக்கு ஜப்பான் பாதுகாப்பு துறைக்கு 5.13 லட்சம் கோடி யென் (4,360 கோடி டாலர்/சுமார் ரூ.2.88 லட்சம் கோடி) ஒதுக்கீடு செய்தது.
- இதற்கான ஒப்புதலை, பிரதமர் ஷின்ஸா அபே தலைமையிலான அமைச்சரவைக் குழு வழங்கியது.

### 161] ஆசிய ஜூனியர் ஹாக்கி:இந்திய மகளிருக்கு வெண்கலம்

- ஆசிய கோப்பை ஜூனியர் (18 வயதுக்குள்பட்டோருக்கானது) ஹாக்கிப் போட்டியில் இந்திய மகளிர் அணி வெண்கலப் பதக்கம் வென்றுள்ளது.
- தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் வியாழக்கிழமை [ 22.12.2016 ] நடைபெற்ற வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் இந்திய அணி 3-0 என்ற கோல் கணக்கில் தென் கொரியாவை தோற்கடித்தது. முதல் பாதி ஆட்டம் கோலின்றி முடிந்த நிலையில், -ஆவது பாதி ஆட்டத்தில் இந்தியா 3 கோல்களை அடித்தது. இந்தியத் தரப்பில் சங்கீதா இரு கோல்களையும் (55 மற்றும் 58-ஆவது நிமிடங்களில்), ரீது ஒரு கோலையும் (45-ஆவது நிமிடம்) அடித்தனர்.

**162] கால்பந்து புதிய தரவரிசை பட்டியலில் இந்திய அணி இரண்டு இடங்கள் ஏற்றம் கண்டு, 135-வது இடத்தை பிடித்தது.**

- சர்வதேச கால்பந்து சம்மேளனம், அணிகளின் புதிய தரவரிசை பட்டியலை நேற்று [ 22.12.2016 ] வெளியிட்டது. இதில் இந்திய அணி இரண்டு இடங்கள் ஏற்றம் கண்டு, 135-வது இடத்தை பிடித்தது.

- கடந்த 6 ஆண்டுகளில் இந்தியாவின் சிறந்த தரநிலை இதுவாகும். ஜனவரி மாதம் 163-வது இடம் வகித்த இந்திய அணி ஆண்டின் இறுதிக்குள் 28 இடங்கள் முன்னேறி இருப்பது குறிப்பிடத்தக்கது. அர்ஜென்டினா முதலிடத்திலும், பிரேசில் 2-வது இடத்திலும், உலக சாம்பியன் ஜெர்மனி 3-வது இடத்திலும், சிலி 4-வது இடத்திலும் இருக்கிறது.

**163] கலிபோர்னியாவில் நகர மேயராக இந்தியர் தேர்வு [ பிரதீப் குப்தா ]**

- அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள தென் சான் பிரான்சிஸ்கோ நகர மேயராக இந்திய வம்சாவளியை சேர்ந்த ஒருவர் தேர்வாகியுள்ளார்.

- **இரண்டாவது இந்தியர்:** சென்னை ஐ.ஐ.டி., முன்னாள் மாணவரான பிரதீப் குப்தா என்பவர், தென் சான் பிரான்சிஸ்கோ நகர மேயராக சில நாட்களுக்கு முன்னர் பதவியேற்று கொண்டார். இதன் மூலம் மேயராக தேர்வாகும் இரண்டாவது இந்தியர் என்ற பெருமை இவருக்கு கிடைத்துள்ளது.

**164] டிசம்பர் 23 - தேசிய விவசாயிகள் தினம்**

- ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 23-ம் தேதி 'தேசிய விவசாயிகள் தினமாக' கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தியாவின் முன்னாள் பிரதமர் சரண் சிங்கின் பிறந்த நாளே கடந்த 16 ஆண்டுகளாக விவசாயிகள் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

- சரண் சிங்கின் பிறந்த நாளை விவசாயிகள் தினமாக கொண்டாடப்படுவதற்கு தனிப்பட்ட காரணங்கள் உண்டு. பல்வேறு நெருக்கடியான அரசியல் சூழல்களுக்கிடையே ஜூலை 1979-ம் ஆண்டு, இந்தியாவின் 5-வது பிரதமராக பதவியேற்றார் சவுத்ரி சரண் சிங். பின்னர் 1980-ம் ஆண்டு ஜனவரி 14-ம் தேதி வரை 7 மாதங்கள் ஆட்சியில் இருந்த சரண் சிங் 'ஜமீன்தாரி ஒழிப்புமுறை

சட்ட'த்தை கொண்டு வந்தார். அதேசமயம் நிலச் சுவான்தார்கள், வட்டிக்கு பணம் வழங்குவோர் மீது கடும் எதிர்ப்புகளையும், கண்டனங்களையும், விமர்சனங்களையும் முன்வைத்தவர் சரண்சிங்.

❖ அவருடைய ஆட்சியின்போதே விவசாயிகளின் விளைபொருள் விற்பனைக்காக 'வேளாண் விளைபொருள் சந்தை மசோதா'வையும் அறிமுகப்படுத்தினார். இதுதான் அவர் ஆட்சியின் போது விவசாயிகளின் நலன்களுக்காக கொண்டுவரப்பட்ட முக்கிய அம்சங்கள். இந்தியாவின் முதுகெலும்பு விவசாயம். உண்மைதான்.

## 165] 25 அறக்கட்டளைகளின் புரவலர் பொறுப்புகளிலிருந்து விலகுகிறார் ராணி எலிசபெத்

❖ 25 அறக்கட்டளைகளின் புரவலர் பொறுப்பிலிருந்து வயது முதர்வு காரணமாக, விலகப் போவதாக பிரிட்டன் ராணி எலிசபெத் அறிவித்துள்ளார்.

❖ விம்பிள்டன் புரவலர் பொறுப்பு, டென்னிஸ் ரசிகையும், கேம்பிரிட்ஜ் கோமானின் மனைவியுமான கேட் மிடில்டன்னிடம் ஒப்படைக்கப்படவுள்ளது

## 166] கோவை மாநகராட்சிக்கு மத்திய அரசின் 'டிஜிட்டல் இந்தியா' விருது

❖ இந்திய சமூகத்தை டிஜிட்டல் வழி அதிகாரமளிக்கப்பட்டதாகவும், பொருளாதார அறிவுமிக்க தாகவும் உருமாற்றும் நோக்கில், மத்திய அரசு சார்பில் 'டிஜிட்டல் இந்தியா' திட்டம் செயல்படுத்தப் பட உள்ளது. அரசின் சேவைகளை மின்மயமாக்கி, மக்களிடம் கொண்டு சேர்ப்பதே இதன் முக்கிய நோக்கம்.

❖ மின்மயமான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், மின்மய மாக்கப்பட்ட சேவைகளை வழங்குதல், கணினிப் பயன்பாட்டுக்கான கல்வி அறிவைப் புகட்டுதல் உள்ளிட்டவை, இத்திட்டத்தின் அடிப்படை அம்சங்கள். இத்திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தும் அமைப்புகளுக்கு, மத்திய அரசு சார்பில் 'டிஜிட்டல் இந்தியா' விருது வழங்கப்படுகிறது.

- அதன்படி, மாநகராட்சி அலுவலகங்களில் இலவச ஒய்-பை திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தியது, புதுமையான, நவீன மின்னணு செயல்பாடுகள் ஆகியவற்றுக்காக, கோவை மாநகராட்சிக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

**167] ஆசிய 'லூாஜ்' பனிச்சறுக்கு சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீரர் சிவ கேசவன் தங்கம் வென்றார்.**

- ஜப்பானில் உள்ள நகானோ நகரில், ஆசிய 'லூாஜ்' பனிச்சறுக்கு சாம்பியன்ஷிப் போட்டி நடந்தது. இதில், மணிக்கு 130.4 கி.மீ., வேகத்தில் பந்தய துாரத்தை ஒரு மணி நேரம், 39 நிமிடம், 962 வினாடிகளில் கடந்த இந்திய வீரர் சிவ கேசவன் முதலிடம் பிடித்து தங்கம் வென்றார்.

- சமீபத்தில் நடந்த பயிற்சியின் போது இடது காலில் காயமடைந்த சிவ கேசவன், ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியில் மூன்றாவது முறையாக தங்கம் வென்றார். இதற்கு முன், கடந்த 2011, 2012ல் தங்கம் வென்றிருந்தார். தவிர இது, ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியில் சிவ கேசவன் வென்ற 7வது பதக்கம். இதுவரை இவர், 3 தங்கம் (2011, 2012, 2016), 2 வெள்ளி (2009, 2015), 2 வெண்கலம் (2005, 2008) என மொத்தம் 7 பதக்கங்கள் கைப்பற்றியுள்ளார்.

**168] இந்திய உணவு மற்றும் வேளாண்மை கவுன்சில் [ Indian Council of Food and Agriculture (ICFA) ] வழங்கும் சர்வதேச வேளாண்மை தலைமை விருது [ Global Agriculture leadership Award 2016 ] தொழிலதிபர் ரத்தன் டாடா வுக்கு வழங்கப்பட்டுள்ளது.**

**169] உலகில் முதன் முறையாக பிறவியிலேயே கை இல்லாதவருக்கு இறந்தவரின் கை பொருத்தி போலந்து டாக்டர்கள் சாதனை படைத்தனர்.**

- போலந்து நாட்டைச் சேர்ந்த 32 வயது வாலிபர் பிறவியிலேயே மணிக்கட்டுக்கு கீழ் விரல்கள் அதாவது கை இல்லாமல் பிறந்தார் இதனால் மிகவும் கஷ்டப்பட்டு வந்த அவர் விரோல்கலா மருத்துவ பல் கலைக்கழக ஆஸ்பத்திரியில் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ஆடம் டொமேன்ஸ் விகாவிடம் சென்று சிகிச்சை ஆலோசனை பெற்றார்.

- அப்போது மரணம் அடைந்த ஒருவரின் கையை தானமாக பெற்று அறுவை சிகிச்சை மூலம் பொருத்த முடிவு செய்யப்பட்டது. அதன்படி இறந்தவரின் கை தானமாக பெறப்பட்டது.

**170] டச்சஸ் வங்கி ( Deutsche Bank ) இந்தியாவில் பணிபுரியும் ஆண் பணியாளர்களுக்கு ஆறுமாதம் குழந்தை வளர்ப்பு விடுமுறை (childcare leave) வழங்கியுள்ளது.**

**171] புதிய 2000 மற்றும் 500 ரூபாய் நோட்டுகள் அச்சடிக்க தலா ரூ.3.59 மற்றும் ரூ.3.04 செலவு ஆவதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.**

**172] Google Toilet Locator - டெல்லி மற்றும் ம.பி. மாநிலங்களில், அருகே உள்ள பொது கழிப்பிடங்களை அறிந்து கொள்ள உதவும் அலைபேசி செயலி.**

**173] வடகிழக்கு மாநிலங்களில் முதலாவதாக மிசோரம் மாநிலத்தின் Aizawl நகரில் இலவச WiFi வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.**

**174] Cash@Home --- மின்னணு வணிக நிறுவனமான ஸ்னாப் டீல் தனது வாடிக்கையாளர்களுக்கு வீட்டிற்கு சென்று ரூபாய்2000 வழங்கும் திட்டத்தை ( ரூ.1 கட்டணத்தில் ) அறிமுகம் செய்துள்ளது.**

**175] ITBP எனப்படும் இந்தோ திபெத் எல்லை பாதுகாப்பு படை , முதன்முறையாக தங்கள் பதுகாப்பு பணியின் உதவிக்காக இமயமலை மற்றும் திபெத் பகுதிகளில் வாழும் Yak எனப்படும் பனிமலை மாடுகளை பயன்படுத்த உள்ளது.**

**176] 2017 குடியரசு தின விழா அணிவகுப்பில் , முதன்முறையாக தேசிய பாதுகாப்பு படையை ( National Security Guard - NSG ) சேர்ந்த கருப்பு பூனை படை கமாண்டோ வீரர்களின் அணிவகுப்பு நடைபெறவுள்ளது.**

**177] ராஞ்சிக்கு ( ஜார்கண்ட் ) அடுத்து பெங்களூருவில் சிறப்பான வசதிகளை கொண்ட பட்டு வளர்ப்பு மையத்தை ( centre of excellence for sericulture) மத்திய அரசு அமைத்துள்ளது.**

**178] தமிழ்நாடு, மாநில நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் தலைவராக ஓய்வு பெற்ற சென்னை ஐகோர்ட் நீதிபதி S.தமிழ்வாணன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.**

**179] ஜப்பான் மற்றும் அமெரிக்காவை தொடர்ந்து , உலகின் கார்பன் டை ஆக்சைடு அளவை கண்காணிக்க , சீனா Tansat என்ற சாட்டிலைட்டை விண்ணுக்கு அனுப்பியுள்ளது.**

**180] "டிஜிட்டல் இந்தியா' திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தும் மாநகராட்சிகளுக்கு ஆண்டுதோறும் மத்திய அரசு விருதுகள் வழங்கி பாராட்டி வருகிறது.**

- மதுரை மாநகராட்சிக்கு மத்திய அரசின் டிஜிட்டல் இந்தியா விருது மற்றும் தனியார் அமைப்பு சார்பிலான விருதுகள் உள்ளிட்ட 6 தேசிய அளவிலான விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

- மதுரை மாநகராட்சிக்கு உள்ளாட்சிகளில் டிஜிட்டல் மயமாக்கும் முயற்சிக்கான வெள்ளி விருது வழங்கப்பட்டுள்ளது. மதுரை மாநகராட்சியில் மக்கள் தெரிவிக்கும் புகார்களை மென்பொருள் தொழில்நுட்பத்தில் கண்காணித்து நடவடிக்கை மேற்கொண்டதற்காக இந்த விருது அளிக்கப்பட்டுள்ளது.

- சுகாதார மேம்பாட்டில் மாநகராட்சிகளின் செயல்பாட்டை வைத்து ஆண்டுதோறும் "ஸ்காச்' விருது வழங்கப்பட்டு வருகிறது. தனியார் அமைப்பின் சார்பில் வழங்கப்படும் இந்த விருது, நடப்பாண்டில் மதுரை மாநகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. அதே அமைப்பு சார்பில் மக்கள் குறைகளை நிவர்த்தி செய்தல், வாகனச் செயல்பாடுகளை ஜி.பி.ஆர்.எஸ். சாதனம் மூலம் கண்காணித்தல், ஒட்டுமொத்த செயல்பாட்டுக்கான கோல்டன் விருது உள்ளிட்ட 5 விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன.

**181] Student Connect :-**

- பல்கலைக்கழக மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு அவரவர் கல்வி நிறுவனங்களுக்கே சென்று கடவுச்சீட்டு ( Passport ) சேவையை வழங்கும்

"ஸ்டுடண்ட் கனெக்ட்' சேவையை வெளியுறவுத் துறை அமைச்சகம் அறிமுகம் செய்துள்ளது.

**182] 2016ம் ஆண்டுக்கான சிறந்த ஆசியருக்கான சிங்கப்பூரின் ஸ்டிரெய்ட்ஸ் விருது, ஃபிளிப்கார்ட் நிறுவனர்களான சச்சின் பன்ஸால் மற்றும் பின்னி பன்ஸால் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.**

- வணிகத் தொழிலில் நவீனத் தொழில்நுட்பத்தைப் புகுத்தி செயல்படுத்தி வருவதை அங்கீகரிக்கும் விதமாக "சிறந்த ஆசியர்' விருது வழங்கப்படுகிறது.

**183] Global Conference on Cyber Space (GCSS)**

- 5வது சர்வதேச இணைய வெளி மாநாடு, 2017ல் இந்தியாவில் நடைபெற உள்ளதாக மத்திய தகவல் தொழில்நுட்பம், சட்டத் துறை அமைச்சர் ரவி சங்கர் பிரசாத் அறிவித்துள்ளார்.

- மாநாடு நடைபெறும் இடமும், தேதியும் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

2011. -- பிரிட்டன்

2012 -- ஹங்கேரி

2013 -- தென்கொரியா

2015 - நெதர்லாந்து

**184] டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டிக்கான இந்திய அணியின் விளையாடாத ( Non playing captain ) கேப்டனாக முன்னாள் வீரரான மகேஷ் பூபதி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**

**185] Indian Enterprise Development Services --- IEDS**

- ஐஏஎஸ், ஐஎப்எஸ், ஐபிஎஸ் வரிசையில் இந்திய தொழில் வளர்ச்சிப் பணிகள் என்ற புதிய பிரிவையும், அதற்கான பதவியிடங்களை உருவாக்கவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் வளர்ச்சி ஆணையத்தின் கீழ் இயங்கும் அலுவலகங்களில் இந்தப் புதிய பதவியிடங்கள் நிரப்பப்படும்.

- மத்திய தேர்வாணையம் நடத்தும், குடிமைப் பணிகள் தேர்வு மூலம் இப்புதிய பதவியிடங்கள் நிரப்பப்படும். இதன் மூலம் துறையின் செயல்பாடுகள் மேம்படுவதோடு, 'மேக் இன் இந்தியா' , 'ஸ்டார்ட் அப் இந்தியா' போன்ற திட்டங்களின் இலக்கை அடைய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

**186] வங்கிக் கணக்கு இல்லாமல் சம்பளத்தைப் பெறும் பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் இந்தியன் வங்கி 'கேஷ் கார்டு' என்ற புதிய வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.**

- இந்த கார்டை பயன்படுத்தி, ஒரு நாளைக்கு சுமார் 50 ஆயிரம் வரை , பணத்தை எடுக்கவோ, அல்லது பொருட்களை வாங்கவோ முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

- மேலும், நாடு முழுவதும் சுமார் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மற்றும் 2 லட்சத்திற்கு மேற்பட்ட ஏ டி எம் மையங்களிலும் , இதை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

**187] ஆப்பிரிக்க நாடுகளை சுடுகாடாக மாற்றவந்த எபோலா நோய்க்கு எதிரான தடுப்பு மருந்து பரிசோதனை வெற்றிகரமாக அமைந்ததாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.**

- ஆப்பிரிக்காவின் மேற்கு பகுதியில் உள்ள கினியா, லைபீரியா, சியாரா லியோன், நைஜீரியா, மாலி ஆகிய நாடுகளில் எபோலா நோய் பரவி வருகிறது.

- இந்த நோயை கட்டுப்படுத்த உலக சுகாதார நிறுவனம் மற்றும் பல்வேறு நாடுகளும் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். இதற்கு போதிய பலன் கிடைக்கவில்லை. இதுவரை இந்த நோய்க்கு சுமார் 5 ஆயிரத்து 160 பேர் பலியாகி இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

- உயிர்க்கொல்லி நோயில் இருந்து மனித இனத்தை பாதுகாக்க உலக சுகாதார அமைப்பின் வலியுறுத்தலின் பேரில் கினியா நாட்டு அரசு மற்றும் உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள தொண்டு நிறுவனங்கள் தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தன.

- கினியா நாட்டில் உள்ள பாஸ்ஸி-குய்னீ என்ற கடலோரப் பிரதேசத்தில் நடைபெற்றுவந்த நீண்டகால ஆராய்ச்சியின் விளைவாக சின்னம்மை நோய்க்கு போடப்படும் வட்டவடிவ தடுப்பூசி முறை கண்டுபிடிக்கப்பட்டது.

- இந்த தடுப்பூசிகளை போட்டுக் கொண்டவர்களை அடுத்த அரை மணி நேரத்தில் இருந்து சுமார் 12 வாரகாலம் வரை தொடரந்து மருத்துவர்கள் தீவிரமாக கண்காணித்து வந்தனர். முதலில் 18 வயது நிரம்பியவர்களுக்கு மட்டும் இந்த தடுப்பூசி செலுத்தப்பட்டது.

- பின்னாளில், ஆறுவயதை கடந்த குழந்தைகளுக்கும் இந்த தடுப்பூசி செலுத்தப்பட்டது, பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் சரிபாதி பேருக்கு ஆரம்ப காலத்தில் சற்று தலைவலி, தசைவலி போன்ற உபாதைகள் தோன்றின. எனினும், அந்த வலி எல்லாம் விரைவில் தீர்ந்தும் போனது.

- எனவே, இந்த தடுப்பூசி கண்டுபிடிப்பு வெற்றிகரமாக அமைந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

**188] உலகின் மிக வெப்பமான பாலைவனம், உலகின் மிக நீளமான 3-வது பாலைவனம் ஆகிய பெருமைகளைக் கொண்டது ஆப்ரிக்காவின் சகாரா பாலைவனம். கிட்டத்தட்ட 9 மில்லியன் பரப்பளவில் அமைந்திருக்கும் இந்த பாலைவனம் வடக்கு ஆப்ரிக்காவின் பெரும்பாலான பகுதிகளில் பரந்து விரிந்துள்ளது.**

- இந்நிலையில் கடந்த 19-ம் தேதி சகாரா பாலைவனத்தை சேர்ந்த அல்ஜீரியா, அன்செப்ரா ஆகிய பகுதிகளில் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. பனிப்பொழிவால் சிவப்பு நிறத்தைக் கொண்ட சகாரா மணல் தற்போது பனிப்போர்வையுடன் பரந்து கிடக்கிறது. இதனை கரிம் பவுச்சட்டா என்னும் புகைப்படக்கலைஞர் மிக அழகாக படம் பிடித்து வெளியிட்டுள்ளார்.

**189] அரசு கட்டுப்பாட்டிற்குள் வந்தது அலெப்போ நகர்: சிரிய ராணுவம் தகவல்**

**190] உத்தர பிரதேச மாநிலத்தில் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவில் உள்ள 17 ஜாதிகளைச் சேர்ப்பதற்கு அகிலேஷ் யாதவ் தலைமையிலான அரசு ஒப்புதல் அளித்துள்ளது.**

**191] பிரான்ஸ் நாட்டில் உள்ள நார்மாண்ட் நகரில், உலகின் முதல் சோலார் சாலையை உருவாக்கி இருக்கின்றனர்.**

- சோலார் பேனல், சோலார் வால்(சுவர்),சோலார் லைட் என சூரிய சக்தியைப் பலவிதங்களில் பயன்படுத்தி வருகிறோம். ஆனால், பிரான்ஸ் நாட்டில் உள்ள நார்மாண்ட் நகரில், உலகின் முதல் சோலார் சாலையை உருவாக்கி இருக்கின்றனர். இதனுடைய திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இந்த சோலார் சாலை அரை கிலோ மீட்டர் தூரத்தில் மட்டுமே உள்ளது. ஆனால் இதன்மூலம் சுற்றி உள்ள பல ஊர்களின் தெரு விளக்கு, சாலை விளக்கு ஆகியவற்றை பயன்படுத்தக்கூடிய அளவில் தயாரிக்கப்பட்டுள்ளது.

- இதை photovoltaic பேனல்கள் உபயோகித்து தயாரித்துள்ளனர். இதன் மீது கார் ஏறிச் சென்றாலும் தாங்கும் அளவு ஸ்டிராங்காக தயாரித்துள்ளனர். தற்போது அரைகிலோ மீட்டர் தூரத்தில் மட்டுமே உள்ள இந்த சோலார் சாலையை 1000 கிலோ மீட்டருக்கு நீடிக்க வேண்டும் என அந்நாட்டின் சுற்றுசூழல் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

**192] 118 பயணிகளுடன் சென்ற லிபியா விமானம் மால்டாவிற்கு கடத்தப்பட்டது.**

- லிபியா அரசின் கட்டுப்பாட்டில் உள்ள விமான நிறுவனத்திற்கு சொந்தமான ஏர்பஸ் ஏ320 விமானம் லிபியாவின் தெற்மேற்கு நகரில் உள்ள செபா நகரிலிருந்து தலைநகர் திரிபோலிக்கு சென்று கொண்டிருந்தது. விமானத்தில் 118 பயணிகள் இருந்துள்ளனர். விமானத்தை கடத்தியவர்கள் கையில் கையெறி வெடிகுண்டுகள் மற்றும் ஆயுதங்கள் வைத்துள்ளதாக கூறப்படுகிறது. அவர்கள் விமானத்தை வெடிக்க வைக்க போவதாக மிரட்டல் விடுத்துள்ளனர்.

**193] பஞ்சாப் மாநிலத்தில் அமைக்கப்படவுள்ள இரண்டாம் தலைமுறை எத்தனால் உயிரி சுத்திகரிப்பு நிலையத்திற்கு [ India's first 2G Ethanol Bio-refinery to be set up in Punjab ] மத்திய பெட்ரோலியத்துறை இணையமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் காணொலிக் காட்சி மூலம் அடிக்கல் நாட்டினார்.**

- ❖ பஞ்சாப் மாநிலம் Bathinda நகரில் உள்ள தர்கன்வாலா என்ற இடத்தில், இரண்டாம் தலைமுறை எத்தனால் உயிரி சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளது.
- ❖ சுமார் 600 கோடி ரூபாய் மதிப்புள்ள இத்திட்டத்தை மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான ஹிந்துஸ்தான் பெட்ரோலிய நிறுவனம் மேற்கொள்ளவிருக்கிறது. இத்திட்டத்தின் மூலம், விவசாயக் கழிவுகளை ஆக்கப்பூர்வமான முறையில் பயன்படுத்த இயலும் என்றும் விவசாயிகளுக்கு அதிகப்படியான வருமானம் கிடைக்கவும் வழிவகுக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

**194] 3-வது முறையாக 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கிரிக்கெட் கோப்பையை வென்றது இந்தியா**

- ❖ 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் இலங்கையில் நடைபெற்று வந்தது. கொழும்புவில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் நடப்பு சாம்பியனான இந்திய அணி, இலங்கையை அணியை எதிர்கொண்டது.

**195] பிலிப்பைன்ஸ் நாட்டை Nock-tan என்ற அதிகவேக சூறாவளி தாக்கியது. வெள்ளம் மற்றும் நிலச்சரிவு அபாயம் இருப்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஆயிரக்கணக்கானோர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.**

- ❖ பிலிப்பைன்ஸ் நாட்டின் Catanduanes என்ற தீவு அருகே இருக்கும் கடற்பகுதியில் Nock-tan என்ற சூறாவளி உருவானது. இது மணிக்கு 250 கிலோமீட்டர் வேகத்தில் கரையை கடந்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. புயல்காரணமாக கடல் அலை 2 புள்ளி 5 மீட்டருக்கு மேல்

எழுந்தது. இதனால் Lusan, Manila உள்ளிட்ட இடங்களில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

**196] தென் சீன கடல் பகுதியில், சீனாவின் விமானம் தாங்கி போர் கப்பல் போர் ஒத்திகையில் ஈடுபட்டது.**

- தென் சீன கடல் பகுதி குறித்து சீனாவிற்கு எதிரான கருத்தை அமெரிக்க அதிபராக தேர்வு செய்யப்பட்டுள்ள டொனால்டு டிரம்ப் தெரிவித்து வருகிறார். இந்நிலையில் சீனாவின் J-15 என்ற விமானதாங்கி போர் கப்பல் மேற்கு பசுபிக் கடலில் உள்ள கிழக்கு சீன கடல் பகுதியில் போர் ஒத்திகையை மேற்கொண்டது.

**197] இந்தியாவின் தேசிய சின்னமான அசோக சக்கரத்தை வடிவமைத்தவர்களில் ஒருவரான தீனநாத் பார்கவா உடல்நலக் குறைவால் காலமானார். அவருக்கு வயது 89.**

- மத்தியப் பிரதேச மாநிலம் பெத்துல் மாவட்டத்தைச் சேர்ந்தவரான பார்கவா, நாட்டின் தேசிய சின்னமான 3 முக சிங்க சின்னத்துடன் கூடிய அசோக சக்கரத்தை வடிவமைத்தவர்களில் ஒருவர்.

**198] ஒடிசா மாநிலம் சண்டிபுரில் இந்திய ராணுவ மேம்பாட்டு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் தயாரிக்கப்பட்ட அதிநவீன ஆயுதம் நேற்று [ 24.12.2016 ] சோதனை செய்து பார்க்கப்பட்டது. போர் விமானத்தில் இருந்து 100 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இலக்குகளை மிகத்துல்லியமாக ரேடார் மூலம் கணித்து வெடிகுண்டு மூலம் தாக்கும் வல்லமை கொண்டது இந்த ஆயுதம்.**

- இந்த சோதனை வெற்றிகரமாக முடிந்ததாக இந்திய ராணுவம் தெரிவித்து உள்ளது. இதுகுறித்து ராணுவ மேம்பாட்டு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்த ஆயுதம் 120 கிலோ எடை கொண்டது. ஆயுதத்தின் செயல்பாடு திருப்திகரமாக உள்ளது' என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## 199] தாய், சேய் நலன் காக்க புதிய உதவி எண்: மத்திய அரசு அறிமுகம்

- மத்திய அரசின் இலவச உதவி எண்ணைத் தொடர்பு கொண்டு வீட்டில் இருந்தபடியே தாய், சேய் சுகாதார வசதிகள் குறித்து விசாரிக்கவோ அல்லது புகார் அளிக்கவோ முடியும். குறிப்பாக கிராமப்புற மக்களுக்காக இந்த வசதி அறிமுகம் செய்யப்பட் டுள்ளது.

- ஏற்கெனவே கடந்த 2014-ல் தாய், சேய் நலம் காப்பதற்காக மத்திய அரசு தாய், சேய் பாதுகாப்பு மையத்தை ஆரம்பித்தது. இந்த மையத்தில் பணியாற்றும் ஆஷா ஊழியர்களைத் தொடர்பு கொண்டு பயனாளிகள் தங்களுக்கான மருத்துவ சேவைகள் குறித்து கேட்டறிந்து வந்தனர்.

- இந்நிலையில் சுகாதாரத்துறை ஊழியர்களிடமும், கிராமத் தில் உள்ள கர்ப்பிணிகளிடமும் தொடர்பு ஏற்படுத்துவதற்காக புதிய இலவச தொலைபேசி சேவையை மத்திய அரசு அறிமுகம் செய்துள்ளது. 10588 என்ற அந்த இலவச உதவி எண்ணை சம்பந்தப்பட்ட கர்ப்பிணிகள் தொடர்பு கொண்டு ஒரு மிஸ்டு கால் கொடுத்தால் போதும். அடுத்த 90 விநாடிகளுக்குள், அவர்களுக்கு மறுமுனையில் இருந்து அழைப்பு வரும். இந்த அழைப்புகளைக் கவனிப்பதற் கென்றே 86 முகவர்கள் தனியாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

- இந்த வசதி தற்போது 13 மாநிலங்களில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்தி, ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் மட்டும் பயனாளிகள் பேச முடியும். குஜராத்தி, தெலுங்கு உள்ளிட்ட 5 புதிய பிராந்திய மொழிகள் விரைவில் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

## 200] மும்பையில் சத்ரபதி சிவாஜிக்கு ரூ.3,600 கோடி செலவில் நினைவிடம்: பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார்.

- 17-ம் நூற்றாண்டைச் சேர்ந்த மன்னரான சிவாஜிக்கு சிவசேனா கட்சி மரபுரிமை கொண்டாடி வருகிறது. இந்நிலையில் சிவாஜிக்கு ரூ.3,600 கோடி செலவில்

பிரம்மாண்டமான நினைவிடம் கட்ட பாஜக தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது.

- தெற்கு மும்பை கடற்கரைப் பகுதியில் அமைய உள்ள இந்த நினைவிடத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார்.
- இந்த நினைவிடம் உலகின் மிக உயரமான கட்டிடமாக அமையும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது. குறிப்பாக, சிவாஜி குதிரை சவாரி செய்வது போல 192 மீட்டர் உயர சிலை வைக்கப்பட உள்ளது. கலை அருங்காட்சியகம், திறந்தவெளி அரங்கம், கண்காட்சி கூடம் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் இதில் அமைய உள்ளன.

### 201] உலகின் மிக உயரமான கிறிஸ்துமஸ் மரம்: கின்னஸ் சாதனை படைக்கிறது இலங்கை

- கொழும்புவில் நிறுவப் பட்டுள்ள கிறிஸ்துமஸ் மரம் உலகின் மிக உயரமானது என்ற சாதனையை படைத்துள்ளது.

### 202] ரஷ்ய விமானம் கருங்கடலில் விழுந்து 92 பேர் பலி

- ரஷ்ய ராணுவ இசைக் குழுவைச் சேர்ந்த 64 இசைக் கலைஞர்கள், ராணுவ வீரர்கள், பத்திரிகையாளர்கள் உட்பட 84 பேரை அழைத்துக் கொண்டு டியு-154 ராணுவ விமானம் ரஷ்யாவின் அட்லரில் இருந்து சிரியாவின் லடாகியா விமானப் படைத் தளத்துக்கு நேற்று அதிகாலை புறப்பட்டது. இதில் விமானிகள் உட்பட 8 விமான ஊழியர்களும் இருந்தனர்.

**கருங்கடலில் மாயம் :-**

- விமானம் புறப்பட்ட 20-வது நிமிடத்தில் கருங்கடல் பகுதியில் பறந்து கொண்டிருந்தது. அப்போது எதிர்பாராதவிதமாக கட்டுப்பாட்டு அறை ரேடாரில் இருந்து விமானம் மறைந்தது. உடனடியாக கருங்கடல் பகுதிக்கு ரஷ்ய கடற்படையின் 10 போர்க்கப்பல்கள், 5 ஹெலிகாப்டர்கள், ஏராளமான ரோந்து

படகுகள் மற்றும் ஆளில்லா விமானம், ஆளில்லா நீர்மூழ்கிகள் ஆகியவை தேடுதல் பணிக்காக அனுப்பப்பட்டன.

### 203] அக்னி 5 ஏவுகணை சோதனை

- அணு ஆயுதங்களை சுமந்து சென்று கண்டம் விட்டு கண்டம் பாயும் அக்னி 5 ஏவுகணை சோதனை வெற்றிகரமாக நடந்தது. அக்னி - 5 ஏவுகணையின் இறுதிக்கட்டப் பணிகள் முடிவடைந்ததையடுத்து, ஒடிசா மாநிலம், வீலர் தீவிலிருந்து இன்று (டிச.,26) சோதனை செய்து பார்க்கப்பட்டது. அக்னி 5 ஏவுகணை, 5,500 முதல் 5,800 கி.மீ.,க்கும் அதிகமான தொலைவில் இருக்கும் இலக்கை தாக்கி அழிக்கும் திறன் கொண்டது. குறிப்பாக வடக்கு சீனா வரை சென்று தாக்கும் திறனுள்ளது.

- அக்னி 1 (700 கி.மீ.,), அக்னி 2 (2,000 கி.மீ.,) மற்றும் அக்னி 3 (2,500 கி.மீ.,) ஏவுகணைகள் பாக்.,குக்கு எதிரான பாதுகாப்பு நோக்கத்துடன் தயாரிக்கப்பட்ட நிலையில், அக்னி 4 (2,500 முதல் 3,500 கி.மீ.,) மற்றும் அக்னி 5 (5,500 முதல் 5,800 கி.மீ.,) சீனாவுக்கு எதிரான பாதுகாப்பு நோக்கில் வடிவமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அக்னி - 5 ஏவுகணை, 17.5 மீ., நீளமும், 2 மீ., விட்டமும் கொண்டது.

### 204] சுனாமி தாக்குதல் நடந்து, 12 ஆண்டுகள் கடந்ததை ஒட்டி, சென்னை மெரினாவில் இன்று ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி செலுத்தினர்.

- சென்னை, நாகப்பட்டினம் உள்ளிட்ட கடற்கரை பகுதிகளை, 2004 டிச.,26ல், சுனாமி எனப்படும் பேரலைகள் தாக்கின. இதில், ஆயிரக்கணக்கானோர் இறந்தனர். ஏராளமான பொருட் சேதம் ஏற்பட்டது. சுனாமி தாக்குதல் நடந்து, 12 ஆண்டுகள் கடந்ததை ஒட்டி, சென்னை மெரினா கடற்கரையில், இன்று காலை ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி செலுத்தினர்.

**205] வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜின் சமூக வலைதளமான, 'டுவிட்டர்' முயற்சியை தொடர்ந்து, வெளிநாடு வாழ் இந்தியர்களின் குறைகளை தீர்க்க, 'டுவிட்டர் சேவா' துவங்கப்பட்டு உள்ளது.**

**தீவிர கவனம்** : பா.ஜ.,வைச் சேர்ந்த வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ், 64, வெளிநாடு வாழ் இந்தியர்கள் சந்திக்கும் பிரச்னைகளில் தீவிர கவனம் செலுத்தி வருபவர். டுவிட்டர் மூலம் சாதாரண மக்கள் உதவி கேட்டால் கூட, விரைவாக செய்து தருபவர்.

**டுவிட்டர் சேவா'** : அவரது டுவிட்டர் முயற்சி, பெரும் வெற்றி பெற்றதை தொடர்ந்து, வெளிநாடு வாழ் இந்தியர்களின் உதவிக்காக, வெளியுறவு அமைச்சகம், 'டுவிட்டர் சேவா' என்றடுவிட்டர் பக்கத்தை துவங்கியுள்ளது; இதை, வெளியுறவு இணையமைச்சர், வி.கே.சிங் துவக்கி வைத்தார்.

**206] ஆன்லைன் வாடிக்கையாளர் பாதுகாப்புக்கு கூகுள் - நுகர்வோர் விவகாரத் துறை கூட்டு**

- ஆன்லைன் வாடிக்கையாளர்களின் பாதுகாப்புக்காக கூகுள் இந்தியா நிறுவனத்துடன் நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சகம் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் ஆன்லைன் வாடிக் கையாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும் என்று அமைச்சகம் கூறியுள்ளது. இது தொடர்பாக அறிவிப்பை நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சகம் நேற்று வெளியிட்டுள்ளது.
- ஆன்லைன் மூலம் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நுகர்வோர்களை பாதுகாப்பதில் ஒரு பகுதியாக டிஜிட்டல் பாதுகாப்பு நுகர்வோர் திட்ட பிரச்சாரத்தை கூகுள் நிறுவனத்துடன் இணைந்து தேசிய அளவில் மேற்கொள்வதாக கூறியுள்ளது.
- இணையதள வாடிக்கையாளர் பாதுகாப்பு மற்றும் அது தொடர் பான விவகாரங்கள், தேசிய அளவில் வாடிக்கையாளர் சேவை மையம் மற்றும் நுகர்வோர் அமைப்புகளின் செயல்பாடுகளை விரிவுபடுத்துவது உள்ளிட்டவை இந்த பிரச்சாரத்தின் மூலம் மேற் கொள்ள உள்ளது.

- இந்த திட்டத்தின் கீழ் ஆன்லைன் நுகர்வோர் பாதுகாப்பு குறித்த பயிற்சியை கூகுள் அளிக்கும். குறிப்பாக நாடு முழுவதும் 250 நுகர்வோர் அமைப்புகளைச் சேர்ந்த சுமார் 500 நபர்களுக்கு 'மின்னணு எழுத்தறிவு -பாதுகாப்பும் எச்சரிக்கையும்' என்கிற திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்படும்.

- இந்த பயிற்றுனர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று இணையதள பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வுகளை உருவாக்கு வார்கள். இந்த பிரச்சாரம் தொடர் பான உபகரணங்கள், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள சுமார் 1200 நுகர்வோர் அமைப்புகளுக்கும் சென்று சேர்ந்த பிறகு வரும் ஜனவரி மாதத்தில் தொடங்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## 207] நுகர்வோர் குறைகளை தீர்க்க இரண்டு புதிய செயலிகள் அறிமுகம்

- நுகர்வோர் குறைகளை ஆன் லைன் மூலமாக விரைந்து தீர்ப்பதற்கு மத்திய அரசு இரண்டு புதிய செயலிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. ஸ்மார்ட் கன்ஸ்யூமர் மற்றும் ஆன்லைன் கன்ஸ்யூமர் மீடியேஷன் சென்டர் என்ற இரண்டு புதிய செயலிகளை மத்திய நுகர்வோர் நலத்துறை அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வான் அறிமுகப்படுத்தினார்.

- இது தொழில்நுட்பத்திற்கான காலம். டிஜிட்டல் முறையில் நுகர் வோரின் குறைகளைத் தீர்க்க வேண்டும். அதற்கு அவர் களுக்கு டிஜிட்டல் பற்றி பயிற்று விக்க வேண்டும். இந்த ஸ்மார்ட் கன்ஸ்யூமர் செயலி மூலம் பொருட்களை பற்றிய விவரங் களைத் தெரிந்து கொள்ளலாம். டிஜிட்டல் உலகத்தில் ஆன்லைன் மூலமாக மிகப் பெரிய பயனை அடைய முடியும். குறிப்பாக ஆன்லைன் குழுக்கள் மூலம் நுகர்வோர்களின் கருத்துகளைக் கேட்டறிய முடியும். மேலும் அவர்க ளுடைய குறைகள் மற்றும் அனுப வங்களையும் அறிந்துகொள்ள முடியும்.

## 208] புகழ்பெற்ற சுய முன்னேற்ற ஆசிரியரான "பிரையன் டிரேசி" அவர்களின் மற்றுமொரு சிறந்த படைப்பே "மாஸ்டர் யுவர் டைம், மாஸ்டர் யுவர் லைப்" என்னும் இந்தப் புத்தகம். நேர மேலாண்மையே, நமது ஒட்டுமொத்த

**வாழ்க்கையின் மேலாண்மை என்பதே இதன் சாரம்சம். அதாவது நமது வாழ்வின் அதிக முக்கியத்துவம் வாய்ந்த நிலைகளில், நமது நேரத்தை சரியான வழியில் உபயோகப்படுத்தும்போது, நாம் நினைத்ததைவிடவும் அதிகமாக, விரைவாக, எளிதாக வெற்றிகளை நம் வசப்படுத்த முடிகின்றது.**

### 209] Biotech Labs in Senior Secondary Schools (BliSS)

- வடகிழக்கு மாநிலங்களான அஸ்ஸாம், அருணாசலபிரதேசம், மிசோரம், மேகாலயா, திரிபுரா, நாகாலாந்து , மணிப்பூர் , சிக்கிம் மாநில மாணவர்களுக்கு உயிரி தொழில்நுட்ப ஆர்வத்தை உருவாக்க உயிரி தொழில்நுட்ப ஆய்வங்களை ஏற்படுத்துதல்.

### 210] Pratikar - 1 Exercise

- முதன்முறையாக நேபாளம் சீனாவுடன் இணைந்து பிப்ரவரி 2017ல் ராணுவ பயிற்சியில் ஈடுபட உள்ளது. இதற்கு Pratikar - 1 Exercise என பெயரிடப்பட்டுள்ளது.

## 211] Walk The Line

- டெல்லி மாநில குடிநீர் வாரியம் ( Jal Board ) தங்கள் எல்லைக்குட்பட்ட குடியிருப்புகளுக்கு தூய்மையான குடிநீர் வழங்கப்படுவதை உறுதிப்படுத்த, 800 பொறியாளர்கள் மற்றும் 3500 பணியாளர்களை உள்ளடக்கி, சிறு சிறு குழுக்களாக பிரிந்து , ஒவ்வொரு குழுவும் குடிநீர் பைப் லைனை கண்காணித்து , பழுது ஏற்பட்டால் உடனடியாக சீர் செய்து குடிநீர் வழங்கலை உறுதிப்படுத்த Walk The Line எனும் திட்டத்தை துவக்கியுள்ளது.

### 212] Biju Sishu Surakshya Yojana

- ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் HIVயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் ஆரம்ப கல்வி மற்றும் உயர்கல்விக்கு நிதியுதவி வழங்க ( Rs. 40,000 per year ) Biju Sishu Surakshya Yojana எனும் திட்டத்தை ஒடிஷா மாநில முதல்வர் நவீன் பட்நாயக் துவக்கி வைத்துள்ளார்.

## 213] Krishna River Management Board (KRMB)

- மத்திய நீர்வள துறை அமைச்சகம், கிருஷ்ணா நதி மேலாண்மை வாரியத்தை மறுசீரமைப்பு செய்துள்ளது.

- புதிய தலைவராக, முன்னாள் மத்திய நீர்வள ஆணைய தலைவர் A.K. பஜாஜ் நியமனம் செய்யப்பட்டுள்ளார். உறுப்பினர்களாக கோபால கிருஷ்ணன் , R.P. பாண்டே , N.N.ராய் , பிரதீப் குமார் சுக்லா ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## 214] இந்தியாவின் முதல் பணமில்லா பரிமாற்ற / வர்த்தக கிராமம் --- அகோதரா ( குஜராத் )

- மத்திய பிரதேசம் -- Badjhiri ( விரைவில் )
- தெலுங்கானா -- இப்ராஹிம்புர்
- ஜம்மு & காஷ்மீர் -- Lanura villege ( Budgam மாவட்டம் )
- மகாராஷ்டிரா -- Dhasai village ( தானே மாவட்டம் )
- உ.பி . --- Bhartaul villege

## 215] Winter Fog Experiment (WIFEX 2016-17)

- வட இந்தியாவில் குளிர் காலங்களில் வானில் ஏற்படும் பனிமூட்டம் பற்றி ஆராய டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில், மத்திய புவிஅறிவியல் துறையின் சார்பில் WIFEX சோதனைகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆய்வுகள் வான்வெளி போக்குவரத்தை இடையூறு இல்லாமல் மேற்கொள்ள உதவிகரமாக இருக்கும்.

**216] டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் கீழ் இந்தியாவின் முக்கிய நகரங்களில் உள்ள ரயில் நிலையங்களில், கூகுள் நிறுவனத்தின் உதவியுடன், மத்திய அரசு இலவச 'வை-பை' சேவையை நிறுவிவருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஊட்டி ரயில் நிலையத்தில் அதிவேக 'வை-பை' சேவை துவங்கப்பட்டது. இதன் மூலம் இந்தியாவில் இந்த சேவையை பெரும் 100வது ரயில் நிலையம் என்ற பெருமையை பெற்றது ஊட்டி ரயில் நிலையம்.**

**217] ஆந்திரா மாநில அரசு, டாடா டிரஸ்ட் இணைந்து Swastha Kutambham என்ற திட்டத்தின் கீழ் விஜயவாடா நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட அனைத்து கிராமங்களிலும் / நகரங்களில் வாழும் மக்கள் அனைவருக்கும் மருத்துவ காப்பீடு வழங்கியுள்ளது.**

- ❖ இந்தியாவிலேயே அனைவருக்கும் மருத்துவ காப்பீடு பெற்றுள்ள முதல் நாடாளுமன்ற தொகுதி என்ற சிறப்பை விஜயவாடா பெற்றுள்ளது.

## 218] INDIA INTERNATIONAL SCIENCE FESTIVAL - 2016

- ❖ இந்தியா, சர்வதேச அறிவியல் கண்காட்சி புதுடெல்லியில் டிசம்பர் 07 - 11 வரை நடைபெற்று முடிந்துள்ளது.

## 219] Laureates and Leaders For Children Summit - 2016

- ❖ டிசம்பர் 10 & 11ல் ராஷ்டிரபதி பவனில் , குழந்தைகளுக்கான Laureates and Leaders மாநாடு நடைபெற்று முடிந்துள்ளது. இந்த மாநாட்டை ஏற்பாடு செய்தவர் -- நோபல் பரிசு பெற்ற கைலாஷ் சத்யார்த்தி

## 220] River Water and Air Quality Monitoring (WAQM) Systems

- ❖ மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம், ஆற்றுநீர் மற்றும் காற்றின் தரத்தை கண்காணிக்கும் அமைப்பை [ River Water and Air Quality Monitoring (WAQM) Systems ] ஏற்படுத்த INTEL நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

### 221] வனஜீவன் திட்டம் ( Vanjeevan Programme )

- மத்திய பழங்குடியினர் நலத்துறை , தேசிய பழங்குடியினர் நிதி மற்றும் வளர்ச்சி கழகம் மற்றும் ஐ.நா. வளர்ச்சி திட்ட முகமை ஆகியன இணைந்து அஸ்ஸாம், தெலுங்கானா, ம.பி. , குஜராத், ராஜஸ்தான், ஒடியா ஆகிய மாநிலங்களில் உள்ள குறிப்பிட்ட சில மாவட்டங்களில் வழும் பழங்குடியின மக்களின் வாழ்வாதார பிரச்சனைகளுக்கு தீர்வை அளிக்ககூடிய " வனஜீவன் " எனும் வளமையத்தை ஒடியாவின் புவனேஷ்வரில் ஏற்படுத்தியுள்ளன.

### 222] 2016 ஆம் ஆண்டுக்கான 52 ஆவது ஞானபீட விருதுக்கு பெங்காலி கவிஞர் Shankha Ghosh என்பவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

- 2013 - கேதார்நாத் சிங் - இந்தி
- 2014- பாலச்சந்திர நெமதே, மராத்தி
- 2015- ரகுவீர் சவுத்ரி - குஜராத்தி

- ஞான பீட விருது (Jnanpith Award ) என்பது இந்தியாவில்இலக்கியத்துக்காக வழங்கப்படும் ஒரு உயரிய விருது ஆகும். இந்த விருதை வழங்குபவர்கள் பாரதிய ஞானபீடம் (Bharathiya Jnanpitham) என்ற பண்பாட்டு இலக்கியக் கழகமாகும். இவ்வறக்கட்டளை தி டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழை வெளியிடும் சாகு ஜெயின் குடும்பத்தினரால் நிறுவப்பட்டது

### 223] நாட்டிலேயே முதல் முறையாக கடல்சார் விமான ரோந்து பணியில் பெண்கள்

- நாட்டிலேயே முதல் முறையாக கிழக்கு மண்டல கடலோர காவல் படையில் கடல்சார் பகுதிகளை ரோந்து சுற்றி வந்து கண்காணித்தல், கடலோர பகுதிகளில் குறிப்பாக சர்வதேச எல்லைப்பகுதிகளில் சட்டவிரோத நடவடிக்கைகளை கண்காணித்து நடவடிக்கை எடுப்பதற்காக கடலோர காவல் படைக்கு சொந்தமான 'டோர்னியர்' ரக குட்டி விமானத்தில் துணை

கமாண்டன்டுகள் அக்ஷி, சுனிதா (பைலட்டுகள்) மற்றும் பிரியங்கா தியாகி (பார்வையாளர்) என முழுவதும் பெண் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

❖ சென்னை கடலோர காவல் படை விமான நிலையத்தை சேர்ந்த இவர்கள் 3 பேரும் கடல்மார்க்கமாக உளவு பார்க்கும் பணி தொடர்பான பயிற்சியை கடலோர பகுதிகளில் விமானத்தில் பயணம் செய்து வெற்றி கரமாக நிறைவு செய்துள்ளனர். கடல் மாசுப்படுதல், கடல்சார் உளவுப்பணி, தேடுதல் மற்றும் மீட்பு, கடற்கொள்ளையர்களை தடுத்தல் மற்றும் சட்டவிரோதமாக கடல் உயிரினங்களை வேட்டையாடுவதை தடுத்தல் உள்ளிட்ட பணிகளுக்காக நன்கு பயிற்சி பெற்றவர்கள். இவர்களில் அக்ஷி 1,700 மணி நேரம், பிரியங்கா தியாகி 1,500 மணி நேரம் மற்றும் சுனிதா 1,200 மணி நேரம் விமானத்தில் பயணம் செய்த, அனுபவம் பெற்றவர்கள்.

### 224] இந்தியா வளிமண்டலத்தில் அதிகளவில் பரவியுள்ள அமோனியா படலம்; விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

❖ உலகின் வளிமண்டலத்தில் டிரோபோஸ்பியருக்கு மேலாக அமோனியா வாயு படலம் பரவியிருப்பதை முதன் முதலாக விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

❖ இந்த அம்மோனியா படலம் இந்தியா மற்றும் சீன நாட்டிற்கு மேல் வளிமண்டலத்தில் உலகின் மற்ற பகுதிகளைக் காட்டிலும் அதிக அளவு பரவி இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்திய சீன வளிமண்டலத்தில் கடல் மட்டத்திலிருந்து சுமார் 12 கி,மீ., மற்றும் 15 கி.மீ., க்கு இடைப்பட்ட உயரத்தில் இந்த வாயு படலம் பரவி உள்ளது

❖ **காரணம்** :- அம்மோனியா வாயு பரவி இருப்பதற்கு காரணம் இந்த இரு நாடுகளிலும் விவசாயத்திற்கு அதிக அளவில் யூரியா பயன்படுத்தப்பட்டது தான் என்று தெளிவாகி உள்ளது. பயிர்கள் செழித்து வளர யூரியா உரம் மிகவும் அவசியமாக இருப்பதால் இவை இந்த இருநாடுகளிலும் பயன்படுத்தபடுகின்றன.

**அமோனியாவால் ஏற்படக்கூடிய மாற்றம்**:

- வளிமண்டலத்தில் பரவியுள்ள இந்த அமோனியா வாயு பூமியின் தட்பவெப்ப நிலையை மாற்றக் கூடியது என்று அறியப்பட்டுள்ளது. மேகங்களின் தன்மையை இந்த அமோனியா மாற்ற கூடியது என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இவை வளிமண்டலத்தில் குளிர்ச்சியை அதிகரிக்க செய்து மேகங்களின் உற்பத்திக்கும் உதவியாக இருக்கும் என்றும் விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

- அம்மோனியா வாயுவால் அடிவானம் இனி வரும் காலங்களில் சூரியனின் சிவப்பு நிற கதிர்களால் அலங்கரிக்கப்பட வாய்ப்பு இருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## 225] இளம் இந்தியா 'ஆசிய சாம்பியன்'

- ஆசிய கோப்பை (19 வயது) தொடரில் இந்திய அணி மூன்றாவது முறையாக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. பைனலில் இலங்கை அணியை 34 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

## 226] அதிக தெளிவான புகைப்படங்களை எடுக்க 2 செயற்கைக் கோள்களை அனுப்பியது சீனா

- அதிக தெளிவான புகைப்படங்களை எடுக்க உதவும் 2 தொலை உணர்வு செயற்கைக் கோள்களை சீனா புதன்கிழமை [ 28.12.2016 ] வெற்றிகரமாக விண்வெளிக்கு செலுத்தியது.

- ஷான்ஸி மாகாணத்தில் உள்ள டையூவான் செயற்கைக்கோள் செலுத்தும் மையத்திலிருந்து புதன்கிழமை [ 28.12.2016 ] காலை 11.23 (பெய்ஜிங் நேரப்படி) மணிக்கு "லாங் மார்ச் 2டி' ஏவுகணை மூலம் 2 தொலை உணர்வு செயற்கைக் கோள்கள் வெற்றிகரமாக விண்வெளிக்கு செலுத்தப்பட்டன.

- இந்தச் செயற்கைக்கோள்கள் அதிக தெளிவான (0.5 மீட்டர் தெளிவில்) புகைப்படங்களை விண்ணிலிருந்து எடுத்து அனுப்பும் திறன் வாய்ந்தது என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- முன்னதாக, சீன அரசு செவ்வாய்க்கிழமை வெள்ளை அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில், "உலகத்தில் ஓரிடத்தை துல்லியமாக வானில் இருந்து அறிய உதவும் 35 செயற்கைக் கோள்களை 2020-ஆம் ஆண்டுக்குள் செலுத்த திட்டமிடப்பட்டு வருகிறது.

## 227] டிசம்பர் 29 - சர்வதேச பல்லுயிர் பெருக்க நாள்

- ஒவ்வொருஆண்டும் டிசம்பர் 29-ஆம் தேதி சர்வதேச பல்லுயிர் பெருக்க நாளாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

- உயிர் வகையினங்களின் தாங்கும் அல்லது நிலைக்கும் தன்மை என்பது அவற்றின் மரபணுப் பண்புகளைப் பாதுகாப்பதிலே அடங்கி இருக்கிறது. பல்லுயிர் பெருக்கத்தை பாதுகாக்க இதுவரை சர்வதேச அளவில் நான்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- உலகவங்கி, ஐக்கிய நாடுகள் முன்னேற்றத் திட்டக்குழு ஆகிய இரண்டும் இணைந்து 1990ல் உலகளாவிய சுற்றுச்சூழல் மையம் ஒன்றை ஆரம்பித்தது. மூன்று வருட காலத்திற்கு முன்மாதிரி திட்டமாக இதை நடத்தி வந்தது.

- நாற்பதுக்கும் மேற்பட்ட உலக நாடுகளில் உள்ள அரசாங்க மற்றும் அரசுசார நிறுவனங்களை ஒன்றிணைத்து சர்வதேச பல்லுயிர் பெருக்க பாதுகாப்புச் செயல்பாட்டுத் திட்டம் வரையப்பட்டுள்ளது.

- உலக இயற்கை பாதுகாப்பு சங்கம் மற்றும் ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டக்குழு ஆகியன.

- உலக பல்லுயிர் பெருக்க உடன்பாடு 1992ம் வருடம் பிரேசில் நாட்டில் உள்ள ரியோடிஜெனிரோவில் நடத்தப்பட்ட மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. இதில் 150க்கும் மேற்பட்ட உலக நாடுகள் கலந்து கொண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

- இந்த உடன்பாட்டின் மூலம் உலகளாவிய வகையில் பல்லுயிர் பெருக்கத்தை உபயோகிக்க, தொழில் நுட்பங்களை பரிமாற்றங்கள் செய்து கொள்ள, பாதுகாப்புத் திட்டங்களை வரைய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 228] தமிழக சிறார்கள் 17 பேருக்கு தேசிய பாலஶ்ரீ விருது

- தமிழகத்தைச் சேர்ந்த, 17 சிறார்கள், மத்திய அரசின், 'பாலஶ்ரீ' விருது பெற்றுள்ளனர். மேடைக்கலை, படைப்புக் கலை, அறிவியல் கலை, எழுத்துக் கலை ஆகியவற்றில், 16 வகையான உட்பிரிவுகளில் புதுமைகள் படைத்திடும், 10 முதல், 16 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்கு, தேசிய அளவில், 'பாலஶ்ரீ' விருது வழங்கப்படுகிறது.

- இது, மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும், தேசிய சிறுவர் மன்றத்தால் வழங்கப்பட்டு வருகிறது. தமிழக அரசின் கலை பண்பாட்டுத் துறையின், ஒரு பகுதியாக விளங்கும், தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றத்தின் மூலம், சிறந்த சிறார்கள் தேர்வு செய்யப்படுவர். இவ்விருதுக்கான தேர்வை, மாவட்ட, மாநில அளவில் நடத்தி, தேசிய அளவிலான போட்டிக்கு அனுப்பி வைப்பர். இந்திய அளவில், 520 சிறார்கள் பங்கேற்ற தேசிய போட்டியில், 82 பேர், விருதுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில், 17 பேர், தமிழகத்தைச் சேர்ந்தவர்கள்.

### 229] இரவு நேரத்தில் தீவிரவாதிகளின் நடமாட்டத்தை துல்லியமாக கண்டறியும் நவீன உபகரணத்தை பாகிஸ்தானுக்கு விற்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

- சுமார் ரூ.1,930 கோடி மதிப்பீட் டில் இது தொடர்பான ஒப்பந்தம் இரு நாட்டுக்கும் இடையே கையெழுத்தாகி இருப்பதாக தெரியவந்துள்ளது. வெவ்வேறு வகையான நிலப்பரப்புகளில் இரவு நேரத்திலும் தீவிரவாதிகளின் நடமாட்டத்தை கண்டறியும் வகை யில் இந்த நவீன உபகரணம் உருவாக்கப்படுகிறது. இதனை ஏஎச்-1இசட் கோப்ரா ரக ஹெலி காப்டர்களில் பொருத்தி தீவிர வாதிகளின் நடமாட்டத்தை உளவு பார்க்க முடியும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது. மொத்தத் தொகையில் பாகிஸ்தான் 12% பணத்தை செலுத்தும். அமெரிக் காவின் ஆர்லாண் டோவைச் சேர்ந்த

ஏவுகணை தயாரிப்பு நிறுவனம் 2022-க்குள் இந்த உபகரணத்தை தயாரித்து வழங்கவுள்ளது.

### 230] ஹாக்கி வீரர்கள் 6 பேர் டிஎஸ்பி ஆக நியமனம்

- விளையாட்டு துறை ஒதுக்கீட்டின் கீழ் இந்திய ஹாக்கி அணியின் வீரர்கள் 6 பேர் உட்பட 9 பேரை காவல் துறையில் டிஎஸ்பி ஆக, பஞ்சாப் மாநில அரசு நியமித்துள்ளது.

- 2014-ம் ஆண்டு ஆசிய விளையாட்டு போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற இந்திய ஹாக்கி அணியில் இடம் பெற்ற மன்பிரீத் சிங், ஆகாஷ்தீப் சிங், சர்வன்ஜித் சிங், ராமன்தீப் சிங், குர்விந்தர் சிங், தரம்வீர் சிங் ஆகியோர் டிஎஸ்பி ஆக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கும் நிகழ்ச்சி சண்டிகாரில், மாநில துணை முதல்வர் சுக்பிர் சிங் பாதல் தலைமையில் நடைபெற்றது.

- இவர்களில் மன்பிரீத் சிங், ஆகாஷ்தீப் சிங் ஆகியோர் இந்த ஆண்டில் லண்டனில் நடைபெற்ற சாம்பியன் டிராபி ஹாக்கி தொடரில் வெள்ளிப் பதக்கம் வென்ற இந்திய அணியிலும், ரியோ ஒலிம்பிக் போட்டியிலும், ஆசிய சாம்பியன் டிராபியை வென்ற இந்திய அணியிலும் இடம் பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### 231] முதன்மை விளையாட்டு பட்டியலில் இருந்து யோகா திடீர் நீக்கம்

- முதன்மை விளையாட்டுக்கள் பட்டியலில் இருந்த யோகாவை நீக்கி மத்திய அரசு திடீரென உத்தரவிட்டுள்ளதுபாஜ கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றத்தில் இருந்து யோகாவுக்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வந்தது. பிரதமர் மோடியும் பெரிய அளவில் யோகாவை பிரச்சாரம் செய்து வந்தார்.

- கடந்த செப்டம்பரில் மாதம் யோகா ஒரு விளையாட்டு என்ற அங்கீகாரம் வழங்கப்பட்டது.மேலும் யோகாவை முதன்மை விளையாட்டு பட்டியலில் சேர்க்கப்பட்டது. இதன் மூலம் மத்திய அரசு நிதியுதவி கிடைக்க வழி வகை

செய்யப்பட்டது. இந்நிலையில் மத்திய விளையாட்டுத் துறை அமைச்சகம், யோகாவிற்கு கொடுக்கப்பட்ட அங்கீகாரத்தை ரத்து செய்து உத்தரவிட்டுள்ளது.

- மற்ற விளையாட்டுக்களில் போட்டிகள் நடத்துவது போல் யோகாவில் போட்டிகள் நடத்த முடியாது என்று அங்கீகாரம்ரத்து செய்ததற்கான விளக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எந்த விளையாட்டு, முதன்மை விளையாட்டின் கீழ் கொண்டு வரப்படுகிறதோ அந்த விளையாட்டு, ஆசிய விளையாட்டு போட்டி, ஒலிம்பிக் போட்டி மற்றும் காமன்வெல்த் போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெறும்.ஆனால் யோகாவை விளையாட்டாக கருத முடியாது என்றும் எந்த வகையிலும் யோகா போட்டிகளை நடத்த முடியாது என்றும் மத்திய விளையாட்டுத் துறை அமைச்சகம் கூறியுள்ளது. அதனால் ஆயூஷ் அமைச்சகத்தின் கீழ் யோகா கொண்டு வரப்பட்டுள்ளது.

### 232] டென்னிஸில் இருந்து ஓய்வு பெற்றார் உலகின் முன்னாள் நம்பர் 1 வீராங்கனை அனா இவானோவிச்

- செர்பியா வீராங்கனையும் உலகின் முன்னாள் நம்பர் ஒன் வீராங்கனையுமான அனா இவானோவிச் டென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். உலகதர உயர்நிலைப் போட்டிகளில் தன்னால் இனி விளையாட முடியாது என்பதால் அவர் இந்த முடிவை எடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

- செர்பிய நாட்டைச் சேர்ந்தவர் டென்னிஸ் வீராங்கனையான அனா இவானோவிச். 29 வயதான அவர் டென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். 2008-ம் ஆண்டு பிரெஞ்ச் ஓபன் டென்னிஸில் சாம்பியன் பட்டம் பெற்று, தரவரிசையில் முதலிடம் பெற்றார். இதன் மூலம் கிரான்ட் ஸ்லாம் பட்டம் பெறும் முதல் செர்பிய வீராங்கனை என்ற பெருமைக்கும் சொந்தக்காரர் ஆவர்.

### 233] பணமில்லா பரிவர்த்தனைக்கு மாறிய தெலங்கானா மாநில கிராமம்

- தெலங்கானாவில் சித்தி பேட்டை தொகுதியில் உள்ள இப்ரஹீம்பேட்டை கிராம மக்கள் கடந்த 20 நாட்களாக ரொக்கமில்லா வர்த்தகத்துக்கு

மாறிவிட்டனர். விரைவில் சித்திபேட்டை தொகுதி முழு வதும் பணமில்லா வர்த்த கத்துக்கு மாற உள்ளது.

- ❖ பண மதிப்பு நீக்க அறிவிப் புக்குப் பிறகு நாட்டு மக்கள் ரொக்கமில்லா பண பரிவர்த் தனைக்கு மாற வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தி வருகிறார். அதற்கேற்ப பணத்தட்டுப்பாடு நிலவியதால் டெபிட் கார்டு, நெட் பேங்கிங் மூலம் பண பரிவர்த்தனை நாட்டில் அதிகரித்தது,

- ❖ இதனிடையே ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள தர்மசா கரம் கிராம மக்களும் ரூபாய் நோட்டுகளை உபயோகிக் காமல் வர்த்தகம் செய்ய கற்றுக்கொண்டுவிட்டனர். விசாகப்பட்டினம் மாவட்டம், நர்சிபட்டினம் உதவி மாவட்ட ஆட்சியராக உள்ள சாய்காந்த் வர்மா இந்த மாற்றத்தை உருவாக்கி உள்ளார்.

### 234] என்.எஸ்.ஜி.யில் இந்தியாவை இணைக்கும் விதமாக புதிய வரைவுத் திட்டம்

- ❖ என்எஸ்ஜி எனப்படும் அணுசக்தி விநியோக நாடுகள் கூட்டமைப்பில், இந்தியா போன்ற நாடுகளை இணைக்கும் விதமாக புதிய வரைவுத் திட்டம் அனுப்பப்பட்டுள்ளது.

- ❖ 48 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட என்.எஸ்.ஜி. என்னும் அணுசக்தி வினியோக நாடுகள் குழுவில் இந்தியா உறுப்பினராக ஆவதற்கு 2011-ம் ஆண்டு முதலே முயற்சித்து வருகிறது.

- ❖ இதில் இணைந்து விட்டால் இந்த குழுவில் உள்ள நாடுகளிடம் சிவில் அணுசக்திக்கு தேவையான பொருட்களை பெறவும், இயலும். இந்த அமைப்பில் உறுப்பினர் ஆவதற்கு கடந்த மே மாதம் 12-ந்தேதி இந்தியா முறைப்படி விண்ணப்பித்தது. பிரதமர் மோடி தனது வெளிநாட்டு சுற்றுப் பயணத்தின்போது இந்த குழுவில் உள்ள நாடுகளின் தலைவர்களை சந்தித்து அவர்களிடம் ஆதரவு திரட்டியும் வந்தார்.

- ❖ இந்தியாவுக்கு ஆதரவாக அமெரிக்கா, பிரான்ஸ், ரஷ்யா, இங்கிலாந்து உள்ளிட்ட பெரும்பாலான ஆதரவு தெரிவித்த போதிலும், அணுசக்தி

வினியோக நாடுகள் குழுவில் உறுப்பினர் ஆவதற்கு இந்தியா மேற்கொண்ட முயற்சிகளுக்கு சீனா கடைசி வரை எதிர்ப்பு தெரிவித்தது.

- இந்நிலையில் அமெரிக்க அதிபராக தமது பதவிக்காலத்தை நிறைவு செய்யவுள்ள ஒபாமா, இந்தியாவை என்.எஸ்.ஜி உறுப்பினராக்குவது தொடர்பாக அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற இறுதி முயற்சி மேற்கொண்டு வருகிறார்.

- அதன்படி அணுசக்தி விநியோக நாடுகள் கூட்டமைப்பில், இந்தியா போன்ற நாடுகளை இணைக்கும் விதமாக புதிய வரைவுத் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

- அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமலேயே, 9 பொது விதிமுறைகளைப் பூர்த்தி செய்யும் நாடுகள் என்எஸ்ஜியில் இணைய, இந்த புதிய வரைவு வழிவகுக்கிறது. எந்தவொரு நாடும், மற்றொரு நாட்டை உறுப்பினராக ஏற்க தடையாக இருக்கக் கூடாது என்பதால், இந்தியா இந்த கூட்டமைப்பில் இணைய சீனாவால் எதிர்ப்பு தெரிவிக்க முடியாது என்று கூறப்படுகிறது.

**235] இந்தியாவிலேயே முதல் நகரமாக குருகிராமில் ( குர்ஹவன் ,ஹரியானா ) போக்குவரத்து நெரிசலை குறைக்க பறக்கும் ரயில் போன்ற , Caterpiller Train திட்டத்தை உருவாக்க அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.**

- ( MIT Climate CoLab போட்டியில், இந்தியாவின் அஸ்வானி குமார் உபாத்யாயா Caterpiller train technologyக்காக கடந்த ஆகஸ்டில் விருது பெற்றுள்ளார் )

**236] இந்திய வரலாறு குறித்த 77வது மாநாடு கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் தொடங்கியது [ 77th session of Indian history congress ].**

**237] 24th National Children's Science Congress**

- 24வது தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு , டிசம்பர் 27 - 31 வரை பாரமதியில் ( புனே , மகாராஷ்டிரா ) நடைபெறுகிறது.

**238] 27 செய்தி நிறுவனங்கள் இணைந்து 2016ம் ஆண்டின், ஐரோப்பாவின் சிறந்த விளையாட்டு வீரராக போர்சுகல் கால்பந்து அணியின் கேப்டன் ரொனால்டோவை தேர்வு செய்துள்ளனர்.**

- இவர் ஏற்கனவே ஐரோப்பாவின் சிறந்த கால்பந்து வீரர் விருதையும் வென்றுள்ளார்.

**239] இந்தியாவின் முதல் 'டிஜிட்டல்' பழங்குடியினர் காலனி**

- கேரளாவின் மலப்புரம் மாவட்டத்தில் நிலம்பூர் என்னும் டவுன் உள்ளது. நிலம்பூரிலிருந்து 18 கி.மீ தொலைவிலுள்ள பழங்குடியினர் காலனியான 'நெடும்காயம்' , இந்தியாவின் முதல் டிஜிட்டல் பழங்குடியினர் குடியிருப்பாக இன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

- கடந்த 2 வாரங்களாக நெடுங்காயத்தில் வசிக்கும் மக்களுக்கு மின்னணு பரிமாற்றம் குறித்த பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சியின் முடிவில் அங்கு வசிக்கும் பழங்குடி மக்கள், மாவட்ட ஆட்சியர் அமித் மீனாவின் வங்கி கணக்குக்கு ஆன்லைன் பணப்பரிமாற்றம் மூலம் ஐந்து ரூபாய் அனுப்பி வைத்துள்ளனர். பதிலுக்கு அமித் மீனா, அவர்களின் வங்கி கணக்குக்கு 25 ரூபாய் அனுப்பியுள்ளார். இதனைத் தொடர்ந்து, இன்று நடந்த நிகழ்ச்சியில் அமித் மீனா 'நெடும்காயம்' குடியிருப்பு பகுதியை இந்தியாவின் முதல் 'Cashless' பழங்குடியினர் குடியிருப்பாக அறிவித்தார்.

**240] உலகளவில் ஆயுத வர்த்தகத்தில் அமெரிக்கா தொடர்ந்து முதலிடம் வகிக்கிறது. கடந்த 2015-ம் ஆண்டில் மட்டும் 40 பில்லியன் அமெரிக்க டாலர் (ரூ.2.7 லட்சம் கோடி) அளவுக்கு ஆயுதங்களை அமெரிக்கா விற்பனை செய்துள்ளது.**

- அமெரிக்காவுக்கு அடுத்தபடி யாக ஆயுத விற்பனையில் பிரான்ஸ் கோலோச்சுகிறது. கடந்தாண்டில் 15 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு ஆயுத வர்த்தகத்தை பிரான்ஸ் மேற்கொண்டுள்ளது.

- ரஷ்யா, 2014-ம் ஆண்டில் 11.2 பில்லியன் டாலர் அளவுக்கு ஆயுத வர்த்தகம் செய்திருந்தது. ஆனால், 2015-ல் ரஷ்யாவின் ஆயுத வர்த்தகம், 11.1 பில்லியன் டாலராக சரிந்துவிட்டது.

- 2014-ம் ஆண்டில் 3 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு ஆயுதங்களை விற்பனை செய்த சீனா, 2015-ல் 6 பில்லியன் டாலர் என்ற அளவுக்கு வர்த்தகத்தை அதிகரித்துள்ளது.

- ஆயுத கொள்முதலைப் பொறுத்தவரை, கடந்தாண்டில் அதிகபட்சமாக 17 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு ஆயுத ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு, கத்தார் முன்னிலை வகிக்கிறது.

- இதற்கு அடுத்தபடியாக 12 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் ஆயுதங்களை வாங்க எகிப்தும், 8 பில்லியன் டாலர் மதிப்பில் ஆயுத கொள்முதலுக்கு சவுதி அரேபியாவும் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன. தென் கொரியா, பாகிஸ்தான், இஸ்ரேல், ஐக்கிய அரபு எமிரேட், இராக் ஆகிய நாடுகள் அடுத்தடுத்த நிலைகளில் உள்ளன.

- சவுதி அரேபியாவுக்கு அடுத்தபடியாக அதிகமாக ஆயுதங்களைக் கொள்முதல் செய்யும் வளரும் நாடுகள் பட்டியலில் இந்தியா 2-வது இடத்தில் உள்ளது.

- கடந்த 2008 மற்றும் 2015-ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் 34 பில்லியன் அமெரிக்க டாலர் (ரூ.2.3 லட்சம் கோடி) அளவுக்கு இந்தியா ராணுவத் தளவாடங்களை கொள்முதல் செய்துள்ளது. இதே காலகட்டத்தில் சவுதி அரேபியா 93.5 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு கொள்முதல் செய்தது.

**241] ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பைச் சேர்ந்த பயங்கரவாதி பர்ஹான் வானி கடந்த ஜூலை 8ஆம் தேதி பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பிறகு பள்ளத்தாக்குப் பகுதியில் அமைதிக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதாக கூறி "காஷ்மீர் ரீடர்' நாளிதழுக்கு மாவட்ட நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்தது.**

- தற்போது இந்த தடை விலக்கப்பட்டதை தொடர்ந்து டிசம்பர் 28 முதல் " காஷ்மீர் ரீடர் " மீண்டும் வெளிவந்துள்ளது.

**242] வியட்நாம் நாட்டுடனான ராணுவ உறவை வலுப்படுத்த, வியட்நாம் விமானப்படை வீரர்களுக்கு Sukhoi - 30 ரக விமானத்தை இயக்குவதற்கான பயிற்சியை வழங்க இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது.**

- Sukhoi ரக விமானங்கள் ரஷ்யாவின் தயாரிப்பு ஆகும். ஏற்கனவே இந்தியா, Kilo வகையிலான நீர்மூழ்கியை இயக்குவதற்கான பயிற்சியை வழங்கியுள்ளது.

**243] இந்தியன் ஆயில் கார்பரேசன் , பாரத் பெட்ரோலியம் கார்பரேசன், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்பரேசன் இணைந்து 30 பில்லியன் டாலர் மதிப்பீட்டில் , வருடத்திற்கு 60 மில்லியன் டன் குருடாயில் சுத்திகரிப்பு ஆலையை மகாராஷ்டிராவில் நிறுவ உள்ளன.**

## 244] India - UK Ease of Doing Business Conference

- இந்தியா மற்றும் பிரிட்டனுக்கு இடையே எளிதான வர்த்தகம் மேற்கொள்வது பற்றிய மாநாடு, புதுடெல்லியில் டிசம்பர் 08ல் நடைபெற்று முடிந்துள்ளது.

## 245] Stanpan Suraksha

- பச்சிளங் குழந்தைகளுக்கு தாய்பால் வழங்கலை ஊக்குவிக்கவும், கடைகளில் விற்கப்படும் பெட்டிகளில் அடைக்கப்பட்ட உணவுகளை குழந்தைகளுக்கு வழங்குவதை தடுக்கவும் , அதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த மத்திய அரசு Stanpan Suraksha எனும் செயலியை வெளியிட்டுள்ளது.

**246] ஆபத்து காலங்களில் நமது இருப்பிடத்தை நம்பகமான நபர்களுக்கு தெரிவிக்க உதவும் வகையிலான அலைபேசி செயலி Trusted Contacts ஐ கூகுள் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. இதற்கு இணைய வசதி தேவையில்லை.**

**247] ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநராக விரால் V. ஆச்சார்யா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.**

- நியூயார்க் பல்கலைக்கழகத்தில் பொருளாதார துறை பேராசிரியராக ஆச்சார்யா பணியாற்றி வருகிறார். ஏற்கெனவே விஸ்வநாதன் , S.S.முந்த்ரா , R.காந்தி ஆகியோர் துணை ஆளுநர்களாக பதவி வகித்து வருகின்றனர்.

248] தாய்லாந்தின் பாங்காக் நகரில் நடைபெற்ற 18 வயதுக்குட்பட்டோருக்கான பெண்கள் ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியில் சீனா சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.

- 2வது இடம் -- ஜப்பான் ; 3வது இடம் - இந்தியா

249] DAMaN ( Durgama Anchalare Malaria Nirakaran )

- மலேரியா நோயை கட்டுப்படுத்த ஒடிஷா மாநில அரசு " தமன் " திட்டத்தை துவக்கியுள்ளது.

250] ஆந்திரா மாநில விஜயவாடாவில் 5வது சர்வதேச குச்சிபுடி நடன மாநாடு நடைபெற்றது. இதனை முன்னிட்டு 6117 நடன கலைஞர்கள் கலந்து கொண்ட Jayamu Jayamu என்ற நாட்டியம் நடைபெற்றுள்ளது. இது கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

251] Hafnium carbide (HfC) & Tantalum carbide (TaC)

- மேற்கண்ட இரண்டும் உலகின் மிக அதிவெப்பம் தாங்கும் உலோகங்கள் என பிரிட்டனின் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். Hafnium carbide (HfC) 3958 ℃ மற்றும் Tantalum carbide (TaC) 3768 ℃ வரை வெப்பத்தை தாங்கும் சக்தியுடையவை என கண்டறிந்துள்ளனர்.

252] FC-31 Gyrfalcon

- சீனா, 5ம் தலைமுறை இரட்டை இன்ஜின் போர் விமானம் FC - 31 Gyrfalconஐ வெற்றிகரமாக பரிசோதனை செய்துள்ளது.

## 253] Atal - Amrit Abhiyan

- அஸ்ஸாம் மாநில முதல்வர் , ஆண்டு வருமானம் 5 லட்சத்திற்கு கீழ் உள்ள மக்களுக்காக " அடல் அம்ருத் அபியான் " என்ற மருத்துவ காப்பீடு திட்டத்தை அறிமுகம் செய்துள்ளார்.

## 254] Delhi Mumbai Industrial Corridor Project Implementation Trust Fund ( DMIC - PITF ) என்பதை National Industrial Corridor Development & Implementation Trust (NICDIT) என பெயர் மாற்றம் செய்ய மத்திய அமைச்சரவை டிசம்பர் 07ல் ஒப்புதல் வழங்கியுள்ளது.

## 255] ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் வெளியிட்டுள்ள 2016-ஆம் ஆண்டுக்கான கனவு ஒருநாள் அணியின் கேப்டனாக, இந்திய டெஸ்ட் கேப்டன் விராட் கோலி அறிவிக்கப்பட்டுள்ளார்.

- இந்தக் கனவு அணியில், சிறந்த யார்க்கர் பந்துவீச்சாளராக ஜஸ்பிரீத் பூம்ராவும் இடம்பெற்றுள்ளார்.

## 256] ரஞ்சி கோப்பை கிரிக்கெட் போட்டியின் காலிறுதியில் ஒடிஸா அணிக்கு எதிரான ஆட்டத்தில் குஜராத் வீரர் சமித் கோயல் (26), ஆட்டமிழக்காமல் 359 ரன்கள் விளாசி புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

- முன்னதாக, இங்கிலாந்தின் முதல் தர கிரிக்கெட் அணியான "சர்ரே'வின் பேட்ஸ்மேன் பாபி அபெல் 1899-ஆம் ஆண்டு சமர்ஸாட் அணிக்கு எதிரான போட்டியில் ஆட்டமிழக்காமல் 357 ரன்கள் எடுத்திருந்ததே உலக சாதனையாக இருந்தது.

- அத்துடன், கடந்த 81 ஆண்டுகளில் முதல் தர கிரிக்கெட்டில் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கி முச்சதத்தை பதிவு செய்துள்ள முதல் வீரர் என்ற பெருமைக்கும் சமித் சொந்தக்காரர் ஆகியுள்ளார்.

**257] அகில இந்திய கால்பந்து கூட்டமைப்பு வழங்கும் 2016ம் ஆண்டின் சிறந்த கால்பந்து வீரர் விருது Jeje Lalpekhlua பெற்றுள்ளார்.**

**258] ஜனவரி 01 / 2017 முதல் டெல்லியில் 10 மெட்ரோ ரயில் நிலையங்களில் ரொக்கமில்லா பணபரிவர்த்தனை அமலுக்கு வருவதாக ரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.**

**259] விலங்குகள் நல அமைப்பான PETA [ People for the Ethical Treatment of Animals ] 2016ம் ஆண்டுக்கான சிறந்த நபர் விருதை ( Person of the year Award ) பாலிவுட் நடிகை சன்னி லியோன் பெற்றுள்ளார்.**

**260] Blue Water Military Exercises**

- மேற்கு பசுபிக் கடல் பகுதியில் சீனாவின் முதல் விமானம் தாங்கி போர் கப்பலான லிவெளனிங் ( Liaoning ) நீலக்கடல் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

**261] இந்தியாவில் டிஜிட்டல் பண பரிமாற்றங்களை ஊக்கவிக்கும் பொருட்டு 'ஆதார் பேமெண்ட் ஆப் ' எனும் ஆண்ட்ராய்டு செயலி அறிமுகம் செய்யப்படுகிறது.**

- இதை பயன்படுத்த விரும்பும் வியாபாரிகள் ஆதார் பேமெண்ட் செயலியை தங்களது ஆண்ட்ராய்டு ஸ்மார்ட்போனில் டவுன்லோடு செய்து அதனினை பயோமெட்ரிக் ரீடருடன் இணைக்க வேண்டும். இந்த பயோமெட்ரிக் ரீடர் சந்தையில் 2000 ரூபாயில் இருந்து கிடைக்கிறது. வாடிக்கையாளரகள் பணம் செலுத்த, தங்களின் ஆதார் எண் மட்டும் பயன்படுத்தி, பணம் செலுத்தப்பட

வேண்டிய வங்கியை தேர்வு செய்ய வேண்டும். இங்கு பயோமெட்ரிக் ஸ்கேன் பண பரிமாற்றத்தில் பாஸ்வேர்டு போன்று செயல்படுகிறது.

- ஆதார் எண் பதிவு செய்ததும், இந்த எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கி கணக்குகள் தானாக தேர்வு செய்யப்படும், இனி வாடிக்கையாளர்கள் தங்களின் விருப்பத்திற்கு ஏற்ப வங்கியை தேர்வு செய்து கட்டணத்தை செலுத்தலாம். எவ்வித பரிமாற்றத்திற்கும் வாடிக்கையாளர்கள் மற்ற செயலி அல்லது பாஸ்வேர்டையோ உள்ளிட்டவற்றை பதிவு செய்ய வேண்டிய அவசியம் கிடையாது.

- வங்கி கணக்குகளில் ஆதார் எண் இணைத்திருந்த வாடிக்கையாளர்கள் ஆதார் பேமெண்ட் செயலியின் சேவையை பயன்படுத்த முடியும்.

**262] இந்திய ராணுவ அகாதெமியின் { Indian Military Academy (IMA) } புதிய கமாண்டராக லெப்டினென்ட் ஜெனரல் சந்தோஷ் குமார் உபாத்யாய நியமனம் செய்யப்பட்டுள்ளார்.**

**263] Biotech Labs in Senior Secondary Schools (BliSS)**

- **வடகிழக்கு மாநிலங்களான அஸ்ஸாம், அருணாசலபிரதேசம், மிசோரம், மேகாலயா, திரிபுரா, நாகாலாந்து , மணிப்பூர் , சிக்கிம் மாநில மாணவர்களுக்கு உயிரி தொழில்நுட்ப ஆர்வத்தை உருவாக்க உயிரி தொழில்நுட்ப ஆய்வங்களை ஏற்படுத்துதல்.**

**264] Pratikar - 1 Exercise**

- **முதன்முறையாக நேபாளம் சீனாவுடன் இணைந்து பிப்ரவரி 2017ல் ராணுவ பயிற்சியில் ஈடுபட உள்ளது. இதற்கு Pratikar - 1 Exercise என பெயரிடப்பட்டுள்ளது.**

### 265] டெஸ்ட் கிரிக்கெட்டின் 10,000-மாவது எல்.பி.டபிள்யூ அவுட்: ஆம்லாவை வீழ்த்திய நுவான் பிரதீப்

- டெஸ்ட் கிரிக்கெட் இன்று [ 28.12.2016 ] 10,000-வது எல்.பி.டபிள்யூ. தீர்ப்பைக் கண்டுள்ளது. போர்ட் எலிசபத் மைதானத்தில் இலங்கைக்கு எதிராக நடைபெற்று வரும் முதல் டெஸ்ட் போட்டியின் 3-ம் நாளான இன்று [ 28.12.2016 ] தென் ஆப்பிரிக்க அணி தனது 2-வது இன்னிங்ஸை ஆடி வருகிறது.

- அந்த அணியின் ஹஷிம் ஆம்லா, தேநீர் இடைவேளைக்கு முன்னர் 53 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 48 ரன்கள் எடுத்த நிலையில் இலங்கை வேகப்பந்து வீச்சாளர் நுவன் பிரதீப் பந்தில் நேராக கால்காப்பில் வாங்கி எல்.பி.ஆனார்.

- இது டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 10,000-மாவது எல்.பி.அவுட் ஆகும். நுவான் பிரதீப்பும் ஹஷிம் ஆம்லாவும் புள்ளிவிவரப்பட்டியலில் இதன் மூலம் இடம்பெற்றனர்.

### 266] இரண்டாயிரம் கிலோமீட்டருக்கு மேற்பட்ட தூரத்தை இரண்டு மணிநேரத்தில் கடக்கும் அதிவேக ரயில் சேவை சீனாவில் [ 28.12.2016 ] தொடங்கியது.

- சீனாவின் தென்மேற்கு பகுதியான Guiyang மற்றும் Kunming ஆகிய பகுதிகளை இணைக்கும் விதமாக அதிவேக ரயில் சேவை தொடங்கப்பட்டுள்ளது. Shanghai-Kunming என்ற இரயில், 2 ஆயிரத்து 300 கிலோ மீட்டர் தூரத்தை வெறும் இரண்டு மணி நேரத்தில் கடக்கும் அதிவேக திறன் கொண்டது. இதன் முதல் பயணம் Yunnan ரயில் நிலையத்திலிருந்து தொடங்கி Guiyang ரயில் நிலையத்தில் முடிவடையும். பயணதூரத்தை அதிவேகமாக இந்த ரயில் கடந்து செல்வது பயணிகளிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

### 267] அனில் பைஜால் டெல்லி துணை நிலை ஆளுநராக நியமனம்: ஜனாதிபதி ஒப்புதல்

- டெல்லி மாநிலத்தின் துணை நிலை கவர்னராக கடந்த 2013-ம் ஆண்டு முதல் பதவி வகித்து வந்த நஜீப் ஜங், கடந்த சில தினங்களுக்கு முன் தனது பதவியை ராஜினாமா செய்வதாக திடீரென அறிவித்தார்.

- இந்நிலையில், வாஜ்பாய் ஆட்சியின் போது மத்திய உள்துறை செயலாளராக பொறுப்பு வகித்த அனில் பைஜால்(70) டெல்லி துணை நிலை ஆளுநராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். அனில் பைஜாலின் நியமனத்திற்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஒப்புதல் அளித்துள்ளார்.

- 1969 பேட்ச் ஐஏஎஸ் அதிகாரியான அனில் பைஜால் பல்வேறு முக்கிய பொறுப்புகளை வகித்துள்ளார். கடந்த 2006 ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

**268] இந்தியாவில் முதல் முறையாக புதிய செயலி ஒன்றை அறிமுகம் செய்துள்ளது - [ ஈஸிபே (Eazypay) ] ஐசிஐசிஐ.**

- தனியார் வங்கி சேவையை வழங்கி வரும் ஐசிஐசிஐ, இந்தியாவில் முதல் முறையாக புதிய செயலி ஒன்றை அறிமுகம் செய்துள்ளது. ஈஸிபே (Eazypay) என பெயரிடப்பட்டிருக்கும் இந்த செயலி வியாபாரம் செய்பவர்களுக்கு பயன்தரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- வணிகர்கள் ஈஸிபே செயலியை பயன்படுத்திமொபைல் மற்றும் இதர டிஜிட்டல் முறைகளில் பணத்தை பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் யுனி∴பைடு பேமெண்ட் இன்டர்∴பேஸ் (UPI) சார்ந்து இந்த செயலி வேலை செய்கிறது.

- அதாவது யுனி∴பைடு பேமெண்ட் இன்டர்∴பேஸ் என்பது வெவ்வேறு வங்கி கணக்குகளை ஒற்றை செயலி மூலம் பண பரிமாற்றங்களை செய்ய முடியும். இதில் கிரெடிட், டெபிட் கார்டு மற்றும் ஆன்லைன் பேங்கிங் உள்ளிட்ட சேவைகளை பயன்படுத்தி பணம் செலுத்த முடியும்.

- ஐசிஐசிஐ வங்கியில் கணக்கு வைத்திருக்கும் அனைவரும் இந்த ஈஸிபே செயலியை டவுன்லோடு செய்து உடனடியாக பயன்படுத்த முடியும். மேலும்

மற்ற வங்கியில் கணக்கு வைத்திருப்போரும் இந்த செயலியை உடனடியாக பயன்படுத்த முடியும் என ஐசிஐசிஐ செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- தற்சமயம் ஆண்ட்ராய்டு மற்றும் ஐஓஎஸ் இயங்குதளங்களில் இந்த செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**269] தெலுங்கானாவில் 36 மணி நேரத்தில் 820 கழிப்பறை கட்டி சாதனை**

- தெலுங்கானாவில் தொழிலாளர்களின் தீவிர பணியால் 36 மணி நேரத்தில் 820 கழிப்பறைகள் கட்டப்பட்டது. 90 நாளில் ஜாகித் யாலா மாவட்டத்தில் அனைத்து வீடுகளிலும் கழிப்பறைகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

**270] 2016 ஆம் ஆண்டுக்கான, 26 வது பிஹாரி புரஸ்கார் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள புகழ்பெற்ற கவிஞர் தலைசிறந்த ராஜஸ்தானி இலக்கிய எழுத்தாளர் டாக்டர் சத்ய நாராயண். [ கே கே பிர்லா அறக்கட்டளை மூலம் தேர்வு செய்யப்பட்டார். [ He was been chosen for his Hindi book titled Yeh Ek Dunia published in 2010. ]**

**271] இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் ஆயுட்கால தலைவராக சுரேஷ் கல்மாடி மற்றும் அபே சிங் சவுதாலா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.**

- இந்திய ஒலிம்பிக் சங்கம் சங்கம் சார்பில் வருட பொது கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தில் காங்., முன்னாள் எம்.பி., சுரேஷ் கல்மாடி மற்றும் அபே சிங் சவுதாலா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்திய ஒலிம்பிக் சங்கத்தில் 2011-2012 ம் ஆண்டில் தலைவராக இருந்த விஜயகுமார் மல்கோத்ரா ஆயுட்கால தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

**ஊழல் குற்றச்சாட்டு:-**

- மேலும் சுரேஷ் கல்மாடி 1996 முதல் 2011 வரை இந்திய ஒலிம்பிக் சங்கத்தில் தலைவராக பதவி வகித்ததும், இந்த காலகட்டத்தில் நடந்த நடந்த டில்லி காமன்வெல்த் விளையாட்டு போட்டியில்(2010) ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு சுமார் 10 மாத காலம் சிறையில் இருந்து பின்னர் ஜாமினில் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

## 272] விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமம், முற்றிலும் ரொக்கமில்லா பரிவர்த்தனைக்கு மாறியுள்ளது.

- கல்வி அறிவில் பின் தங்கிய மாவட்டங்களில் ஒன்றாக விளங்கும் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள காந்தலாடி கிராம மக்கள் நவீன டிஜிட்டல் முறையில் வாழ்க்கை தகவமைத்துக் கொண்டுள்ளனர்.சில்லறை இல்லாமல் கடைக்கு செல்ல தயங்கும் மக்களுக்கிடையே டிஜிட்டல் முறையில் தங்கள் பரிவர்த்தனையை சாத்தியமாக்கியுள்ளனர் இந்த கிராம மக்கள். கடைகளுக்கு சென்றால் காசு இல்லை என்ற கவலை இல்லாமல் ஏடிஎம் கார்டுகளுடன் வலம் வருகின்றனர் இங்குள்ள மக்கள்.மத்திய அரசின் அறிவிப்பால் காந்தலாடி கிராமம் மக்கள் பெரிய அளவில் பாதிக்கப்படாமல் டிஜிட்டல் முறையில் தங்கள் வாழ்க்கையை நடத்த உதவி செய்துள்ளது பாரத ஸ்டேட் வங்கி.

- மத்திய அரசின் பணமில்லா பரிவர்த்தனை இந்தியா திட்டம் தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் முதன்முறையாக விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள காந்தலவாடி கிராமத்தினை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா தத்தெடுத்துள்ளது.அக்கிராமத்தில் அனைவருக்கு வங்கி கணக்குகள் மற்றும் ஏ.டி.எம். கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன.அக்கிராமத்தில் உள்ள கடைகளில் ஸ்வைப்பிங் இயந்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதன் மூலம் கிராம மக்கள் பொருட்களை வாங்கி செல்கின்றனர்.காந்தலாடி கிராமத்தின் இந்த தொடக்கம் மற்ற ஊர்களிலும் தொடங்கப்பட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட வழி செய்ய வேண்டும்

**273] பாலிவுட் திரையுலகின் பிரபல நடிகர் ஷாருக்கான். இவர் தனது நேர்த்தியான நடிப்பினால் தேசிய விருது உள்ளிட்ட ஏராளமான விருதுகளை பெற்று இருக்கிறார். தற்போது இவருக்கு ஐதராபாத்தின் மவுலானா ஆசாத் தேசிய உருது பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கி சிறப்பித்து உள்ளது.**

- ஐதராபாத்தில் நடைபெற்ற பல்கலைக்கழகத்தின் 6-ம் ஆண்டு பட்டமளிப்பு விழாவில், துணை வேந்தர் ஜாபர் சரேஸ்வாலா நடிகர் ஷாருக்கானுக்கு டாக்டர் பட்டத்தை வழங்கினார். இந்த நிகழ்வின் போது ரேக்தா அறக்கட்டளையின் நிறுவனர் சஞ்சீவ் சராப் என்பவருக்கும் டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

- உருது கலாசாரத்தின் வளர்ச்சியில் ஷாருக்கானின் பங்களிப்பை பாராட்டி அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியதாக பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**274] ஜெர்மனியில் 50 ஆயிரம் மக்கள் வெளியேற்றம்; இரண்டாம் உலகப்போரில் வெடிக்காத குண்டு செயல் இழப்பு**

- இரண்டாம் உலகப் போரின் போது கடந்த 1944-ம் ஆண்டில் ஜெர்மனி மீது இங்கிலாந்து வெடிகுண்டு வீசி தாக்கியது. அதில் வெடிக்காத ஒரு மிகப்பெரிய வெடிகுண்டு ஜெர்மனியின் ஆக்ஸ்பர்க் நகரில் கட்டிடம் கட்டுவதற்கான பணி நடைபெற்ற போது கடந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வெடிகுண்டு ஒரு டன்னிற்கும் அதிகமான எடை கொண்டதாக தென்பட்டது. இதனையடுத்து இதனை செயல் இழக்க செய்யும் பணி தொடங்கியது. வெடிகுண்டை செயல் இழக்க செய்யும் பணியை கிறிஸ்துமஸ் தினத்தில் முன்னெடுக்க முடிவு செய்யப்பட்டது.

- விடுமுறை நாளான அன்று மக்கள் நடமாட்டம் குறைவாக இருக்கும் என்பதால் அன்றைய தினம் தேர்வு செய்யப்பட்டது என்று அதிகாரிகள் தரப்பு தெரிவித்து உள்ளது. எனவே, கிறிஸ்துமஸ் நாளில் ஆக்ஸ்பர்க் நகரில் வசிக்கும் 50 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் அங்கிருந்து காலை வெளியேற்றப்பட்டனர். அவர்கள் ஆக்ஸ்பர்க் நகருக்கு வெளியே புறநகரில் உள்ள பள்ளிகள் மற்றும் விளையாட்டு மையங்களில் பாதுகாப்பாக தங்க

வைக்கப்பட்டனர். அதன் பின்னர் தலா 1.8 டன் எடையுள்ள வெடிக்காத வெடிகுண்டை பாதுகாப்பு படை அதிகாரிகள் வெற்றிகரமாக செயல் இழக்க செய்தனர்.

- ஜெர்மனியில் இரண்டாம் உலகப்போரில் பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்படுவது ஒன்றும் புதியது கிடையாது.
- கடந்த 1944-ம் ஆண்டு 25-26 தேதிகளில் வரலாற்று பழமை வாய்ந்த ஆக்ஸ்பர்க் நகரில் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ராணுவம் சரமாரியாக வெடிகுண்டுகளை வீசியது, இதனால் நகரம் பெரும் சீரழிவை சந்தித்தது.

**275] 49 நாட்களில் படகு மூலம் உலகை சுற்றி பிரான்சை சேர்ந்த தாமஸ் கோவில்லே சாதனை படைத்தார்.**

- பிரான்சை சேர்ந்தவர் தாமஸ் கோவில்லே (48). இவர் கடல் பயணம் மேற்கொள்வதில் ஆர்வம் மிகுந்தவர். இவர் படகு மூலம் உலகை சுற்றி வர திட்ட மிட்டார்.
- அதற்காக 31 மீட்டர் நீள படகில் தனி ஆளாக பயணம் மேற்கொண்டார். தனது பயணத்தை முடித்த அவர் 49 நாட்களில் மேற்கு பிரான்சில் உள்ள பிரெஸ்ட் துறை முகத்துக்கு மீண்டும் திரும்பினார்.
- இவர் 49 நாட்கள், 3 மணி 7 நிமிடம் மற்றும் 38 வினாடிகளில் உலகை சுற்றி முடித்தார். அதற்கு முன்பு கடந்த 2008-ம் ஆண்டு பிரான்சிஸ் ஜோயன் என்ற பிரெஞ்சுக்காரர் 57 நாட்கள் மற்றும் 13 மணி நேரத்தில் படகில் உலகை சுற்றி வந்தார். தற்போது அவரை விட 8 நாட்கள் முன்னதாகவே உலகை சுற்றி வந்து கோவில்லே சாதனை படைத்துள்ளார்.
- இது குறித்து கோவில்லே, கூறும் போது, இச்சாதனை படைக்க நான் 10 ஆண்டுகள் கடுமையாக உழைத்தேன் என்றார். பிரான்சிஸ் ஜோயனின் இச்சாதனையை முறியடிக்க 5 முறை முயற்சி செய்து தற்போது வெற்றி பெற்றுள்ளார்.

**276] கிராமப்புற ஏழைகளுக்கான பிரதமர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்ட ஓர் ஆண்டு காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது. இவற்றை கடந்த ஆட்சியை போல் அல்லாமல், குறித்த நேரத்தில் கட்டிமுடிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.**

- 1985-86-ல் இந்திரா காந்தி பெயரில் கிராமப்புற ஏழை களுக்கான வீடு கட்டும் திட்டம், அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தியால் அறிவிக்கப்பட்டது. மாநிலங்களுக்கு 75 சதவீத நிதியும் யூனியன் பிரதேசங்களுக்கு 90 சதவீத நிதியும் மத்திய அரசு அளிக்கும் என அறிவிக்கப் பட்டது.

- மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம் சார்பில் மேற் கொள்ளப்பட்ட இந்தத் திட்டம் குறிப்பிட்டக் காலத்துக்குள் முழுமை பெறாமல் போனது. சுமார் 25 சதவீத வீடுகள் குறித்த காலத்துக்குள் கட்டிமுடிக்கப் படவில்லை என மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம் மீதான மத்திய கணக்குக் தணிக்கையாளர் (சிஏஜி) அறிக்கையிலும் குறிப் பிடப்பட்டுள்ளது.

**2022க்குள் அனைவருக்கும் வீடு**

- இந்தத் திட்டத்தில், பெயர் உட்பட சில மாறுதல்கள் செய்து கிராமப்புற ஏழைகளுக்கான பிரதமர் வீடு கட்டும் திட்டம் என்ற பெயரில் கடந்த ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். வரும் 2020-22-ம் ஆண்டுக்குள் அனைவருக்கும் வீடு அளிக்கப்படும் எனவும் திட்டமிடப்பட்டுள்ளது. காங்கிரஸ் மற்றும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் ஏற்பட்ட கால அவகாசக் குறைப்பாட்டை ஒரு முன்னுதாரணமாக எடுத்துக் கொண்ட தேசிய ஜனநாயக கூட்டணி அரசு அதுபோன்ற ஒரு தவறு நடைபெறாமல் இருக்க உறுதி கொண்டுள்ளது இதன்படி, வரும் 2018-19-ம் ஆண்டுக்குள் ஒரு கோடி வீடுகள் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை குறித்த காலக் கெடுவுக்குள் முடிக்க வேண்டும் என பிரதமர் மோடி உத்தர விட்டுள்ளார்.

**277] ரிலையன்ஸ், ஓஎன்ஜிசி விவகாரம்: அரசு தரப்பு தீர்ப்பாயராக ஜி.எஸ். சிங்வி நியமனம்**

- ரிலையன்ஸ் நிறுவனத்துக்கு எதிராக பொதுத்துறை நிறுவன மான ஓஎன்ஜிசி தொடர்ந்துள்ள வழக்கின் தீர்ப்பாயராக ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி ஜி.எஸ். சிங்வி நியமிக்கப்பட்டுள்ளார்.

- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தில் பிரிட்டிஷ் பெட்ரோலியம், கனடாவின் நைகோ ரிசோர்ஸஸ் ஆகியன முதலீடு செய்துள்ளன. இந்த கூட்டு நிறுவனங்கள் கிருஷ்ணா கோதாவரி படுகையில் ஓஎன்ஜிசி எண்ணெய் வயலில் இருந்து எரிவாயு எடுத்ததாக வழக்கு தொடரப்பட்டது. 2016 மார்ச் வரை 7 ஆண்டுகள் இவ்விதம் எரிவாயு எடுத்துள்ளதாகவும், அதற்கு 155 கோடிடாலர் இழப்பீடு தரவேண்டும் என நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

- இந்த வழக்கு தீர்ப்பாயத்தின் முன்பாக விசாரணைக்கு வந்துள் ளது. இந்த வழக்கில் அரசு தரப்பு தீர்ப்பாயராக ஜி.எஸ். சிங்வி நியமிக்கப்பட்டுள்ளார்.

**278] பஞ்சாப் மாநிலத்தில் அமைக்கப்படவுள்ள இரண்டாம் தலைமுறை எத்தனால் உயிரி சுத்திகரிப்பு நிலையத்திற்கு [ India's first 2G Ethanol Bio-refinery to be set up in Punjab ] மத்திய பெட்ரோலியத்துறை இணையமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் காணொலிக் காட்சி மூலம் அடிக்கல் நாட்டினார்.**

- பஞ்சாப் மாநிலம் Bathinda நகரில் உள்ள தர்கன்வாலா என்ற இடத்தில், இரண்டாம் தலைமுறை எத்தனால் உயிரி சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளது.

- சுமார் 600 கோடி ரூபாய் மதிப்புள்ள இத்திட்டத்தை மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான ஹிந்துஸ்தான் பெட்ரோலிய நிறுவனம் மேற்கொள்ளவிருக்கிறது. இத்திட்டத்தின் மூலம், விவசாயக் கழிவுகளை ஆக்கப்பூர்வமான முறையில் பயன்படுத்த இயலும் என்றும் விவசாயிகளுக்கு அதிகப்படியான வருமானம் கிடைக்கவும் வழிவகுக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

**279] சவுதியில் டிசம்பர் 22ல் தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டின்படி 2017 ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை படிப்படியாக வெளிநாட்டு ஊழியர்கள் மீதான தீர்வை வரி (Expat Levy) உயர்த்தப்படவுள்ளது.**

- வெளிநாட்டினரின் குடும்ப அங்கத்தவர்களுக்காக நபர் ஒன்றுக்கு மாதாமாதம் 100 ரியால் தீர்வை செலுத்த வேண்டும். இது 2017 ஜூலை மாதம் முதல் அமுலுக்கு வருகிறது. 2020ல் 400 ரியால் செலுத்த வேண்டும்.

**280] பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் வங்கதேச இந்துக்கள் மற்றும் சிறுபான்மையினர் இந்திய குடியுரிமை வேண்டி விண்ணப்பிக்கும் பொழுது செலுத்த வேண்டிய கட்டண தொகையை ரூ 15,000/ லிருந்து ரூ 100/ ஆக குறைத்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.**

**281] லோதா குழு பரிந்துரைகளை அமல் செய்யும் விவகாரத்தில் சரியாக செயல்படவில்லை என்று கூறி இந்திய கிரிக்கெட் வாரிய தலைவர் அனுராக் தாக்குர் மற்றும் செயலர் அஜய் ஷிர்க்கே ஆகிய இருவரையும் பதவி நீக்கம் செய்து உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.**

- பிசிசிஐ-யின் புது நிர்வாகிகளை தேர்வு செய்ய மூத்த வழக்கறிஞர்கள் பாலி நாரிமன், கோபால் சுப்பிமணியன் ஆகியோரை நியமித்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## 282] Swachh Swasth Sarvatra

- நாடுமுழுவதும் திறந்த வெளி கழிப்பிடம் இல்லா 708 வட்டாரங்களின் ( பஞ்சாயத்து யூனியன் / ஒன்றியம் / Blocks ) சுகாதார நிலையை மேம்பாடு செய்ய , மத்திய குடும்ப நலம் மற்றும் சுகாதாரதுறை , ஊரக வளர்ச்சி துறை மற்றும் மனிதவள மேம்பாட்டு துறையுடன் இணைந்து ஒருங்கிணைந்த சுகாதார வளாகத்தை உருவாக்க Swachh Swasth Sarvatra என்ற திட்டத்தை துவக்கியுள்ளது.

**283] பேசிக்கொண்டு இருக்கும் பொழுது துண்டிக்கடுப்படும் ( Call drop ) இணைப்பு பற்றி பொதுமக்களின் கருத்துகளை அறிய , தொலைதொடர்பு துறை Integrated Voice Response System (IVRS) ஐ , டெல்லி, பஞ்சாப், உ.பி., உத்தரகாண்ட் , மகாராஷ்டிரா, கோவா ஆகிய மாநிலங்களில் அமைத்துள்ளது.**

**284] ஐக்கிய அரபு எமிரேட்சில் , நடைபெற்ற முதலாவது மேற்கு ஆசிய யூத் செஸ் சாம்பியன்ஷிப் தொடரில் மும்பையை சேர்ந்த 2ம் வகுப்பு படிக்கும் பள்ளி மாணவன் குஷ் பகத், ரேபிட் , பிலிட்ஸ் , ஸ்டேன்டர்டு பிரிவுகளில் முதலிடம் பிடித்து 3 தங்க பதக்கங்களை வென்றுள்ளார்.**

- இதன்மூலம் இத்தொடரில், மூன்று பிரிவிலும் தங்கம் வென்ற முதல் இந்தியர் என்ற புதிய வரலாறு படைத்துள்ளார்.

**285] கத்தார் நாட்டின் தோகா நகரில் நடைபெற்ற World Blitz chess championship போட்டியில் செர்ஜி கர்ஜாகின் ( Sergey Karjakin - Russia ) மேக்னஸ் கார்ல்சனை (நார்வே) தோற்கடித்து பட்டம்வென்றுள்ளார்.**

- இருமாதங்களுக்கு முன் நடைபெற்ற Classical World Chess Championship போட்டியில் மேக்னஸ் கார்ல்சன் , செர்ஜி கர்ஜாகினை தோற்கடித்து பட்டம் வென்றிருந்தார்.

**286] ஆப்பிள் நிறுவனத்தின் உற்பத்தி பங்குதாரரான தைவானின் Wistron நிறுவனம், பெங்களூருவில் தனது உற்பத்தி ஆலையை நிறுவ உள்ளது.**

**287] வெளிநாடுவாழ் இந்தியர்கள் செல்லாத உயர் மதிப்புடைய பழைய ரூபாய் நோட்டுகளை ஜூன் 30ஆம் தேதி வரை ரிசர்வ் வங்கிக் கிளையில் அளித்து மாற்றிக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

- அன்னியச் செலாவணிச் சட்ட விதிமுறைகள்படி வெளிநாடு வாழ் இந்தியர்கள் தலா ரூ.25,000 வரை மட்டுமே பழைய ரூபாய் நோட்டுகளை மாற்றிக் கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.
- வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு திரும்பும் இந்தியர்கள், அதற்குரிய ஆவணங்களை ரிசர்வ் வங்கிக் கிளையில் சமர்ப்பித்து மார்ச் 31ம் தேதி வரை பழைய ரூபாய் நோட்டுகளை மாற்றிக் கொள்ளலாம். இவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளலாம்.

- நேபாளம், பூடான், பாகிஸ்தான், வங்கதேசம் ஆகிய நாடுகளில் வசித்துவரும் இந்தியர்கள் பழைய ரூபாய் நோட்டுகளை மாற்றிக் கொள்வதற்கான சலுகை கிடையாது.

**288] கிர்கிஸ்தான் ராணுவத்தின், கவுரவ மேஜர் ஜெனரலாக, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஷேக் ரபிக் முகமது [ கேரள மாநிலம் கோழிக்கோட்டை சேர்ந்தவர் ] நியமிக்கப்பட்டுள்ளார்.**

- வெளிநாட்டு ராணுவத்தில் உயர் பதவியில், இந்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளது இதுவே முதல் முறை.

**289] இந்தியா சார்பாக ஒற்றையர் பிரிவு டென்னிஸ் போட்டிகளில் விளையாடி வந்த பிரபல வீரர் சோம்தேவ் தேவ்வர்மன் தொழில்முறை டென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.**

**290] அபுதாபியில் நடைபெற்ற Mubadala World Tennis Championship - 2016 போட்டியில் ரபேல் நடால் பட்டம் வென்றுள்ளார்.**

**291] உலகின் முதல்நிலை டென்னிஸ் வீரர் ஆன்டி முரேவுக்கு பிரிட்டனின் ராணி சர் பட்டம் வழங்கி கவுரவித்துள்ளார்.**

**292] International Federation of Football History & Statistics (IFFHS) அமைப்பு , அர்ஜென்டினா நாட்டின் கால்பந்து வீரர் லியோனல் மெஸ்ஸியை World's Best Playmaker ஆக தேர்வு செய்துள்ளது.**

## 293] Khullam Khulla

**பிரபல ஹிந்தி நடிகர் ரிஷிகபூர் , தனது சுயசரிதையை Khullam Khulla என்ற பெயரில் புத்தகமாக மீனா ஐயருடன் இணைந்து எழுதியுள்ளார்.**

**294] பிரதமரின் புத்தாண்டு அறிவிப்புகள்**

- பிரதமரின் ஆவாஸ் யோஜனா திட்டத்தில் 2 புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும்.இந்தத் திட்டங்களில் மானியத் துடன்கூடிய வீட்டுக் கடன் வழங்கப்படும்.

- 9 லட்சம் வரையிலான வீட்டுக் கடனில் 4 சதவீதம் வட்டி மானியம் வழங்கப்படும். 12 லட்சம் வரையிலான கடன் தொகைக்கு 3 சதவீத வட்டி மானியமும் 20 லட்சம் வரையிலான கடனுக்கு 2 சதவீத வட்டி மானியமும் அளிக்கப்படும்.

- ரபி பருவத்தில் கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட வேளாண் கடன்களுக்கு 60 நாட்களுக்கு வட்டி ரத்து செய்யப்படும். குறு, சிறு தொழில்களை மேம்படுத்துவதற்காக அந்தத் துறையினருக்கு வழங்கப்படும் ரூ.1 கோடி கடன் தொகை ரூ.2 கோடியாக உயர்த்தப்படும்.

  கர்ப்பிணிகளுக்கு ஊட்டச்சத்தான உணவு, தடுப்பு மருந்துகளுக்காக அவர்களின் வங்கிக் கணக்கில் ரூ.6,000 டெபாசிட் செய்யப்படும்.

  மூத்த குடிமக்களின் ரூ.7.5 லட்சம் வரையிலான டெபாசிட் தொகைக்கு 8 சதவீத வட்டி வழங்கப்படும்.

**295] மாநகராட்சிகள், நகராட்சிகள் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் தனி அதிகாரிகள் பதவிக்காலம் ஜூன் மாதம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.**

- தமிழகத்தில் சென்னை, மதுரை, கோவை உட்பட 12 மாநகராட்சிகள் உள்ளன. இவை தவிர, 125 நகராட்சிகள், 529 பேரூராட்சிகள், 12,524 ஊராட்சிகள், 388 ஊராட்சி ஒன்றியங்கள், 31 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன. இவற்றில் மாநகராட்சி மேயர், மாமன்ற உறுப்பினர்கள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் என ஒரு லட்சத்து 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பதவி வகித்து வந்தனர். இவர்களின் பதவிக்காலம் கடந்த அக்டோபர் 24-ம் தேதி முடிவடைந்தது.

- அக்டோபர் 24-ம் தேதிக்குப் பின் உள்ளாட்சிகளை நிர்வகிக்க தனி அதிகாரிகள் அவசர சட்டம் மூலம் நியமிக்கப்பட்டனர். டிசம்பர் 31-ம் தேதியுடன் தனி அதிகாரிகள் பதவிக்காலம் முடிவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

- தற்போது தனி அதிகாரிகள் பதவிக்காலம் ஜூன் மாதம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**296] டென்னிஸ் உலகின் முன்னாள் நம்பர் ஒன் வீராங்கனையான செர்பியாவின் அனா இவானோவிச் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.**

**297] பிரிட்டன் ராணியால் வழங்கப்படும் சிறப்புமிகு " சர் " பட்டம் , இந்திய வம்சாவழி பேராசிரியர் சங்கர் பாலசுப்ரமணியம் , ஹர்தீப் சிங் பெகோல் , கமல்தீப் சிங் பூய் உள்ளிட்டோருக்கு வழங்கப்பட்டுள்ளது.**

**298] பெய்பான் ஜியாங் பாலம்**

- **சீனாவில் மலைப்பாங்கான பகுதியில் அமைந்துள்ள யுனான் மற்றும் குய்சோகு ஆகிய இரண்டு மாகாணங்களை இணைக்கும் வகையில் பெய்பான்ஜியாங் பாலம் கட்டமைக்கப்பட்டுள்ளது.**
- இரண்டு மலைகளுக்கும் நடுவே ஓடும் நிஜு நதி ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள பெய்பான்ஜியாங் பாலத்தின் உயரம் 565 மீட்டர் (1,854 அடி) ஆகும். இது உலகிலேயே மிக உயரமான பாலமாகும்.
- [ ஹுபே மாகாணத்தில் ஸீடு ஆற்றின் குறுக்கே சீன அரசு சுமார் ரூ.1,000 கோடி செலவில் சுமார் 4,400 அடி உயரத்தில் பாலத்தைக் கட்டமைத்து வருகிறது. இது பயன்பாட்டுக்கு வரும் நிலையில், உலகின் மிக உயரமான பாலம் என்ற பெருமையைப் பெரும்.]

## 299] Super View - 1 01 & 02

- அதிக தெளிவான புகைப்படங்களை எடுக்க உதவும் 2 தொலை உணர்வு செயற்கைக் கோள்களை "லாங் மார்ச் 2டி' ஏவுகணை மூலம் சீனா டிசம்பர் 28ல் வெற்றிகரமாக விண்வெளிக்கு செலுத்தியது.

**300] செல்லாத பழைய ரூ.500, ரூ.1,000 ஆகிய நோட்டுகளை 10 எண்ணிக்கை வரை மட்டுமே ஒருவர் வைத்திருக்கலாம். அதை விட அதிகமாக அந்த ரூபாய் நோட்டுகளை வைத்திருப்பது, பரிமாற்றம் செய்வது அல்லது பிறரிடம் இருந்து பெறுவது போன்றவை குற்றச்செயலாகும்.**

- இத்தகைய செயலில் ஈடுபடும் நபருக்கு ரூ.10 ஆயிரமோ அல்லது அவரிடம் இருந்து கைப்பற்றப்படும் செல்லாத ரூபாய் நோட்டுகள் மதிப்பில் 5 மடங்கு அதிகமோ அபராதமாக விதிக்கப்படும்.
- ஜனவரி 1-ஆம் தேதி முதல் மார்ச் 31-ஆம் தேதி வரையிலும் செல்லாத ரூபாய் நோட்டுகளை டெபாசிட் செய்வது தொடர்பாக தவறான தகவல் தெரிவித்தது

கண்டுபிடிக்கப்பட்டால், அதற்கு ரூ.5 ஆயிரமோ அல்லது கைப்பற்றப்படும் தொகையில் 5 மடங்கு அதிக தொகையோ அபராதமாக விதிக்கப்படும்.

## 301] An Unsuitable Boy

- சினிமா பிரபலம் கரண் ஜோஹரின் வாழ்க்கை வரலாறு நூல். 2017 ஜனவரியில் வெளிவருகிறது.
- கரண் ஜோஹர் மற்றும் பூனம் சக்சேனா இணைந்து எழுதியுள்ளனர்.

**302] நீதிமன்ற உயர்பதவிகளில் 50% இட ஒதுக்கீட்டை அமுல்படுத்தி பீகார் அரசு உத்தரவிட்டுள்ளது.**

**303] அலைபேசி வழியிலான பணபரிவர்த்தனைகளுக்கு BHIM (Bharat Interface for Money ) என்ற செயலியை பிரதமர் வெளியிட்டுள்ளார். இதன் மூலம் ஒருமுறைக்கு 10,000 ரூபாய் பரிமாற்றம் செய்யலாம். ஒரு நாளுக்குள் அதிகபட்மாக 20,000வரை பரிமாற்றம் செய்யலாம்.**

**304] கடற்படை தலைமை தளபதி சுனில் லன்பா Chiefs of Staff committee (COSC) ஆக நியமனம் செய்யப்பட்டுள்ளார். தற்போது இந்த பதவி வகிக்கும் விமானப்படையின் தலைமை தளபதி அரூப் ராகா டிசம்பர் 31ல் ஓய்வு பெறுகிறார்.**

**305] 2022ல் நடைபெறவுள்ள தேசிய விளையாட்டு போட்டிகள் மேகாலயாவில் நடைபெறும் என இந்திய ஒலிம்பிக் சங்கம் அறிவித்துள்ளது.**

- 2022 - மேகாலயா உருவானதின் 50ம் ஆண்டு ஆகும்.
- இந்த ஆண்டின் துவக்கத்தில் 12வது தெற்காசிய விளையாட்டு போட்டிகளை அஸ்ஸாம் மற்றும் மேகாலயா இணைந்து நடத்தின.
- வடகிழக்கு மாநிலங்களான மணிப்பூரில் 1999லும் , 2007ல் அஸ்ஸாமிலும் தேசிய விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது.

**306] ஹரியானா மாநில காவல்துறை , இந்தியாவின் முதல் Digital Investigation and Training centreஐ குருகிராமில் ஏற்படுத்தியுள்ளது.**

307] மாஞ்சா தடவிய பட்டங்களினால் பறவைகள் பாதிக்கப்படுவதை தடுக்க, குஜராத் மாநில அரசு ( Karuna ) கருணா என்ற பிரச்சாரத்தை துவக்கியுள்ளது.

308] 4வது உலக போஜ்புரி மொழி மாநாடு வாரணாசியில் துவங்கியுள்ளது.

309] ரூ18000/ வரை சம்பளம் பெறுபவர்களுக்கு , அவர்களின் சம்மதமின்றி காசோலையாகவோ, அல்லது நேரடியாக அவர்களின் வங்கி கணக்கில் வரவு வைக்க வகைசெய்யும் அவசர சட்டத்திற்கு ஜனாதிபதி ஒப்புதல் வழங்கியுள்ளார்.

310] சவுதி அரேபியாவுக்கு அடுத்தபடியாக அதிகமாக ஆயுதங்களைக் கொள்முதல் செய்யும் வளரும் நாடுகள் பட்டியலில் இந்தியா 2-வது இடத்தில் உள்ளது. அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஆய்வுப் பணிகள் குழு வெளியிட்ட ஆய்வறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.